www.janasakthi.in
janasakthieditor@gmail.com
janasakthi Tholaikatchi
CPI Tamilnadu


நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி CPI 100 Years 1925-2025

மலர் 88 | இதழ் 01 | 2025 ஏப்ரல் 06 - ஏப்ரல் 12 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15

## நூறு நாள் தொழிலாளர்களுக்கு சம்பள பாக்கியை உடனே வழங்கக் கோரி

# விவசாயத் தொழிலாளர் சங்கம் தமிழ்நாடு தழுவிய ஆர்ப்பாட்டம்


அவிநாசி

**மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதி அளிப்புத் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு, தமிழகத்திற்கு விடுவிக்க வேண்டிய நிதி பாக்கி 4,034 ஆயிரம் கோடி ரூபாயை உடனடியாக விடுவிக்க வேண்டும். நூறு நாள் வேலைத்திட்டத்திற்கான நிதியைக் குறைத்துத் திட்டத்தை முடக்காதே, வேலை மறுக்கப்பட்ட நாட்களுக்குச் சட்டப்படி வேலை யின்மைக்கான ஊதியம் வழங்கு, உயிர் வாழ தொடர்ந்து வேலை கொடு, வேலை நாட்களை ஆண்டிற்கு 200 நாளாக உயர்த்தி, தினசரி 700 ரூபாய் ஊதியம் வழங்கு என்பன, உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் ஒன்றிய அரசு அலுவலகம் முன்பாக மாநில அளவிலான ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.**

### திருவாரூர்

திருவாரூர் மாவட்டம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் வை. செல்வராஜ் எம்.பி, கே.உலகநாதன் எம்எல்ஏ, பொதுச் செயலாளர் அ.பாஸ்கர், வி.ச மாவட்டச் செயலாளர் கே.ஆர்.ஜோசப் மற்றும் கட்சி ஒன்றியச் செயலாளர்கள் அனைத்து அரங்கப் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டு பேசினர். திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் 32 மையங்களில் 4250 தோழர்கள் கலந்து கொண்டனர்.

திருவாரூர் ஒன்றியத்தில் 22 மையங்களில் நடைபெற்ற போராட்டத்தில் 1626 தோழர்கள் கலந்து கொண்டனர். கோட்டூர் ஒன்றியத்தில் 41 மையங்களில் நடைபெற்றது. இதில் 4300 தோழர்கள் பங்கேற்றனர். மன்னார்குடியில் 18 மையத்தில் நடைபெற்ற போராட்டத்தில் 1800 கலந்து கொண்டனர். குடவாசல், நன்னிலம் மற்றும் கொரடாச்சேரி ஆகிய ஒன்றியங்களில் 27 மையங்களில் நடைபெற்ற போராட்டத்தில் 2730 தோழர்கள் பங்கேற்றனர்.

### கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரி பேருந்து நிலையத்தில் எஸ்.கண்ணு தலைமையில், மாவட்டச் செயலாளர் ஆர்.சேகர், கட்சி மாவட்ட துணைச் செயலாளர் டி.சின்னசாமி ஆகியோர் சிறப்புரை ஆற்றினார். மாவட்டத் துணைச் செயலாளர் எஸ்.ராமமூர்த்தி, மாவட்ட துணைத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, வி.ச மாவட்டத் தலைவர் ஜி.சிவராஜ், கண்டன உரை நிகழ்த்தினார்.

### தேனி

தேனி மாவட்டம் உத்தமபாளையம் ஒன்றியம். தேவாரம் வா.ஊ.சி மைதானத் திலிருந்து ஊர்வலமாகச் சென்று தபால் அலுவலகம். முன்பு நடந்த ஆர்ப்பாட்த்திற்கு ஒன்றியச் செயலாளர் ந.ராஜேந்திரன தலைமை தாங்கினார். கட்சியின் ஒன்றியச் செயலாளர் வி.பாண்டி ஆர்ப்பாட்டத்தை விளக்கிப் பேசினார்.

### திருவள்ளூர்

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி தபால் நிலையம் அருகில் மாவட்டச் செயலாளர் என்.எஸ்.பிரதாப்சந்திரன் தலைமையில், தமிழ்நாடு ஏஐடியூசி பொதுச் செயலாளர் எம்.ராதாகிருஷ்ணன் கண்டன உரையாற்றினார். இதில் மாவட்டத் தலைவர் டி.கே.ராஜா, கட்சியின் மாவட்டத் துணைச் செயலாளர் வி.சரவணன் மற்றும்

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எம்.பி.க்கள் கூட்டம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம், கட்சியின் அகில இந்தியப் பொதுச்செயலாளர் டி.ராஜா முன்னிலையில் நடைபெற்றது. பழைய நாடாளுமன்ற மைய மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், மக்களவை உறுப்பினர்கள் கே.சுப்பராயன், வை.செல்வராஜ், மாநிலங்களவை உறுப்பினர்கள் சந்தோஷ்குமார், சுனில் ஆகியோர் கலந்துகொண்டனர். கூட்டத்தில், நூறு நாள் வேலைத்திட்ட நிதி வழங்காமை, இந்தி மொழித் திணிப்பு, இஸ்லாமியர்களுக்கு எதிரான வக்ஃப் வாரிய சட்ட மசோதா உள்ளிட்ட ஒன்றிய அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் குரல் கொடுப்பது குறித்து விவாதிக்கப்பட்டது.



## கட்சிக் கடிதம்



பாஜகவுடன் ஒட்டுமில்லை, உறவுமில்லை, எக்காலத்திலும் இல்லை என்பதனை எடப்பாடியார் மட்டுமல்ல, அக்கட்சியின் அனைத்துத் தலைவர்களும் முழங்கியே வந்தனர். ஆனால், திடீர் மாற்றம் ஏன் ஏற்பட்டது? அதிமுக தொண்டர்கள் திகைத்து நிற்கின்றனர்

... பக்கம் 2

## தலித்துகள் மீது தொடரும் வன்முறைகளுக்குத் தீர்வு என்ன?



தலித்துகளுக்கு எதிரான வன்கொடுமைகள் வெறும் சட்டம் ஒழுங்குப் பிரச்சனை மட்டுமல்ல, காலங்காலமாகப் பொதுப்புத்தியில் நிலவும் சாதி வெறி மனப்பான்மையைப் பிரதிபலிக்கும் அப்பட்டமான தலித் விரோத, வெறுப்பு அரசியலின் விளைபொருள் ஆகும். இதன் மீது உறுதியான, வெளிப்படையான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுக்க வேண்டும்.

... பக்கம் 5

## நூறு நாள் வேலைத்திட்ட ஊதியம் ஆறு மாதங்களாகத் தரப்படவில்லை

இன்றைக்கு கிராமப்புறங்களின் வாழ்வாதாரமாக இருப்பது நூறு நாள் வேலைத்திட்டம். கடந்த 10 ஆண்டுகளாக ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் ஒன்றிய மோடி அரசு, நூறு நாள் வேலைத்திட்டத்தை சிதைத்து அழித்தொழிக்கின்ற பணியில் ஈடுபட்டுள்ளது.

... பக்கம் 6

## கட்சியின் ஐந்தாவது பொதுச்செயலாளர் அஜாய்குமார் கோஷ்

1961ல் விஜயவாடாவில் நடைபெற்ற ஆறாவது கட்சிப் பேராயத்தில் வைத்த அரசியல் அமைப்பு நிலை வரைவுத் தீர்மானங்களை நிறைவேற்ற முடியாத அளவுக்கு கருத்து வேற்றுமை ஏற்பட்டது. நிறைவாக பொதுச்செயலாளர் அஜாய் கோஷ் ஆற்றிய தொகுப்புரையையே மாநாட்டில் ஆவணமாக ஏற்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

... பக்கம் 8

## அடக்குமுறைகளையும் மீறி துருக்கியில் எழுச்சி

இடதுசாரிக்கட்சிகளும் தொழிற்சங்கங்களும் இந்தப் போராட்டங்களில் தீவிரமாகப் பங்கேற்றுள்ளன. சட்டத்துக்குப் புறம்பாக சிறை வைக்கப்பட்டவர்களில் பலர் இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள். துருக்கி அரசின் இந்த அடக்குமுறைகளையும் மீறி மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருவது மற்ற நாடுகளுக்கு விடப்படும் முன்னெச்சரிக்கையாகும்.

... பக்கம் 16




# ஒளிவு, மறைவு, மிரட்டல் அரசியல்!

போர்க்குணமிக்க தோழர்களே!

அரசியலில் எதுவும் நடக்கலாம்!

அரசியலில் நிரந்தர நண்பர்கள் இல்லை.

அரசியலில் நிரந்தரப் பகைவர்கள் இல்லை.

இவ்வாறான ஓர் வியாக்கியானம் தொடர்ந்து சொல்லப்பட்டு வருகின்றது.

இத்தகைய வியாக்கியானங்கள் எல்லா அரசியல் கட்சிகளுக்கும், அமைப்புகளுக்கும் பொருந்துமா? எனில் பொருந்தாது. கொள்கையற்றவர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

பாஜகவுடன் இனி எப்போதும் உறவில்லை, கூட்டணி இல்லை என மேடைதோறும் முழங்கினார் அதிமுகவின் தற்போதைய பொதுச்செயலாளர் சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் திரு கே.எடப்பாடி பழனிசாமி `எனது தாய் ஜெயலலிதாவை விட 100 மடங்கு ஆற்றல் மிக்கவர்' என்றார். அதிமுக ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற ஊழலை அம்பலப்படுத்துவேன் என்றார் பாஜகவின் தற்போதைய மாநிலத் தலைவர் அண்ணாமலை.

இரு கட்சிகளுக்கிடையே பணிப்போர் அல்ல பகிரங்கப் போரையே மாதக் கணக்கில் இடைவெளியின்றி கோடை இடி போன்ற முழக்கத்துடன் இரு கட்சிகளிலும் மேற்கொண்டு வந்தன.

பாஜகவுடன் ஒட்டுமில்லை உறவுமில்லை எக்காலத்திலும் இல்லை என்பதனை எடப்பாடியார் மட்டுமல்ல, அக்கட்சியின் அனைத்துத் தலைவர்களும் ஆங்காங்கே முழங்கியே வந்தனர்.

ஒருமித்த குரலாக ஒலிக்காமல் பார்த்துக் கொண்டது பாஜக. தூக்கம் கலைந்தவராய் நிம்மதி இழந்தவராய் திமுக மட்டும்தான் ஒரே எதிரி என்று திடீரென்று சேலத்தில் கூறினார் எடப்பாடி!

திடீர் மாற்றம் ஏன் ஏற்பட்டது? திகைத்து நிற்கின்றனர் அ.இ.அ.தி.மு.க தொண்டர்கள் .

ஆர்.எஸ்.எஸ் ன் அரசியல் பிரிவான பாஜக தலைமையிலான ஒன்றிய அரசு தமிழ்நாட்டு மக்களோடு போர் நடத்திக் கொண்டிருக்கிறது. நியாயமற்ற போரை, ஓர் அநியாயமான அநாகரிகமான போரை, ஒருதலைபட்சமான போரை நடத்திக் கொண்டுள்ளது.

ஒன்றிய அரசின் நேர்மையற்ற போரை தமிழக மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கை உள்ளிட்ட தேசியக் கல்விக் கொள்கையை தமிழ்நாடு அரசு ஏற்று கையெழுத்திட வேண்டும். இல்லையெனில் கல்விக்குரிய தொகையான ரூ.2152 கோடியைக் கொடுக்க முடியாது, நாடாளுமன்ற தொகுதி மறுசீரமைப்பு என்கிற பெயரால் தற்போதுள்ள 39 தொகுதிகளை மக்கள்தொகை விருதாச்சாரப்படி மாற்றி அமைப்போம், 31 ஆக குறைப்போம்!

மகாத்மா காந்தி வேலை உறுதியளிப்புச் சட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4032 கோடியைக் கொடுக்க மாட்டோம்.

இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டிற்கு, சீரமைக்க தமிழ்நாடு அரசு கோரிய நான்காயிரம் கோடி ரூபாயில் ஒரு பைசாவும் கூட தரமாட்டோம்.

நீட் நுழைவுத் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விதிவிலக்கு அளிக்க மாட்டோம்.

இஸ்லாமிய மக்களுக்கு எதிராக வக்பு வாரிய சட்டத்தில் திருத்தம் செய்வோம்!

பொது சிவில் சட்டம் நிறைவேற்றியே தீருவோம்.

சுங்கச் சாவடிகளின் கட்டணத்தை உயர்த்துவோம், புதிய சுங்கச்சாவடிகளை மேலும் மேலும் திறப்போம்!

நகைக் கடனை முழுமையாகச் செலுத்தினால்தான் மறு கடன்.

ஏடிஎம்ல் பணம் எடுத்தால் கடுமையான கட்டணம் விதிப்போம் என ஒன்றிய அரசு தமிழ்நாட்டு மக்களுக்கு எதிராகவும் ஒட்டு மொத்த நாட்டு மக்களுக்கு எதிராகவும் ஓர் யுத்தத்தை நடத்திக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு சட்டப்பேரவைக் கூட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. நிதிநிலை அறிக்கை, வேளாண்மை அறிக்கைகளைத் தொடர்ந்து மானியக் கோரிக்கைகள் மீது ஒவ்வொரு நாளும் விவாதங்கள் நடைபெற்று வருகின்றன.

இத்தகைய சூழலில் எதிர்க்கட்சித் தலைவர் என்கிற முறையில் பேரவைக் கூட்டத்தில் நாள்தோறும் தவறாமல் கலந்து கொண்டு தமிழ்நாட்டு மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகள் குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று, தீர்வு காண வேண்டிய பொறுப்பான எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடியார், பேரவைக் கூட்டத்தைத் தவிர்த்து விட்டு, திடீரென்று டெல்லிக்குச் சென்றார்.

அவரது வருகையை மோப்பம் பிடித்த பத்திரிகை, தொலைக்காட்சி, செய்தியாளர்கள் எடப்பாடியைச் சந்தித்துக் கேட்டனர் எங்கு வந்தீர்கள்? என்ன விசேஷம் என விசாரித்தனர்.



சிரித்துக் கொண்டே சொன்னார் டெல்லியில் கட்டப்பட்டுள்ள எங்கள் கட்சி அலுவலகத்தைப் பார்வையிட வந்தேன் என்று பதற்றமின்றிக் கூறினார்.

அன்று 25.3.2025 மாலை தன் சகாக்களையும் டெல்லிக்கு அழைத்தார்.

வேலுமணி, சி.வி.சண்முகம், முனுசாமி தம்பிதுரை எனப் பட்டாளத்துடன் இரவு 8 மணி முதல் 10 மணி வரை உள்துறை அமைச்சர் அமிதஷாவைச் சந்தித்தார்கள்.

இரண்டு மணி நேர உரையாடலுக்குப் பின்னர் வெளியே வந்தனர். பத்திரிகையாளர்களைச் சந்தித்தார் எடப்பாடி, சிரித்துக் கொண்டே சொன்னார் தமிழ்நாட்டு மக்கள் பிரச்சினை குறித்துப் பேசினோம் அரசியல் குறித்துப் பேசவில்லை என்றார்.

மார்ச் 28 இல் மிக ரகசியமாக அண்ணா திமுகவின் மிக முக்கியத் தலைவர்களில் ஒருவரான செங்கோட்டையன் டெல்லி சென்றார். அமித் ஷாவை, நிதியமைச்சர் நிர்மலாவைச் சந்தித்தார். அவருடன் பாஜகவின் தமிழக தலைவர்கள் இருவர் உடனிருந்தனர்.

எடப்பாடி சந்திப்பைத் தொடர்ந்து தமிழக பாஜக தலைவர் அண்ணாமலையையும் டெல்லிக்கு அழைக்கப்பட்டார். அமித்ஷா அண்ணாமலை சந்திப்போம் நடைபெற்றது.

செங்கோட்டையன் டெல்லி பயணம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்கிறார் அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி.

அரசியல் பேசவில்லை என்று அடித்துச் சொன்னார் எடப்பாடி. ஆனால், அமித் ஷாவுக்கும் அதிமுகவுக்கும் பாஜகவுக்கும் தேர்தல் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை தொடங்கிவிட்டது. விரைவில் முடிவு அறிவிக்கப்படும். 2026 தேர்தலில் தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயக் கூட்டணி ஆட்சி அமைக்கும் என்றும் தெரிவித்தனர்.

இவை மட்டுமன்றி, செங்கோட்டையனுக்கு ஒன்றிய அரசின் சார்பில் ஒய் பிரிவு பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன

செங்கோட்டையன் தன் கட்சிக்குத் தெரியாமல் தலைமைக்குத் தெரியாமல் சென்றது ஏன்? அமித்ஷாவை நிர்மலாவைச் சந்தித்தது ஏன்? சந்திப்பில் தமிழக பாஜகவின் இரு தலைவர்களும் கலந்து கொண்டது ஏன்?

செங்கோட்டையன் தானாகச் சென்றாரா? அல்லது அமித்ஷாவின் ஆணையை ஏற்றுச் சென்றாரா?

எடப்பாடியார் தானாகச் சென்று அமித்ஷாவைச் சந்தித்தாரா? அல்லது அமித்ஷாவின் ஆணையை ஏற்றுச் சென்றாரா?

ஒளிந்து மறைந்து அரசியல் செய்ய வேண்டிய நிர்பந்தம் நெருக்கடிகளுக்கு எடப்பாடி ஆட்பட்டுள்ளாரா?

அத்தகைய நெருக்கடி எது? பொதுச் செயலாளர் பதவியா? கட்சி அங்கீகாரமா? தேர்தல் சின்னமா? கொடநாடு கொலை, கொள்ளை வழக்கா? தனது நண்பர் வீட்டில் நடந்த சோதனையா? தனது சம்மந்தி மீதுள்ள வழக்கா? இவைகளைப் பயன்படுத்தி ஒன்றிய அரசு எடப்பாடியை மிரட்டுகின்றதா?

பணியவில்லை என்றால் இரட்டை இலைச் சின்னமும், கட்சியின் அங்கீகாரம் இவைகள் இல்லை என்று எடப்பாடியை அமித் ஷா மிரட்டினாரா?

அமலாக்கத்துறை வருமான வரித்துறை இவைகள் ஏவி விடப்படும் என்று அச்சுறுத்தலா?

பணியை மறுத்தால் செங்கோட்டையனை வைத்துக் கட்சியை உடைப்பேன் என்று உரத்துக் கூறினாரா?

பொதுச் செயலாளர் பதவி காலியாகி விடும் என்று மிரட்டப்பட்டாரா? ஒளிந்து, மறைந்து அரசியல் நடத்திட வேண்டிய நிர்ப்பந்தம் ஏன்?

மிரட்டலுக்கு அடிபணிந்திட வேண்டிய அவலம் ஏன்?

எடப்பாடியார் மனம் விட்டுப் பேசுவாரா? உண்மையைத் தனது கட்சித் தொண்டர்களுக்கு ஒளிவு மறைவின்றிக் கூறுவாரா?

தமிழ்நாட்டுக்கு எதிராக ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கையில் எதிராக உள்ள **அதிமுக**,

குறிப்பாக தேசியக் கல்விக் கொள்கையை ஏற்காத **அதிமுக**,

தொகுதி சீரமைப்பில் தமிழகம் பாதிக்கப்படுவதை எதிர்த்து முதலமைச்சர் ஏற்பாடு செய்த கடந்த 5.3.2025 ல் நடைபெற்ற கூட்டத்தில் திரு ஜெயக்குமாரை அனுப்பி முதலமைச்சர் முன்மொழிந்த தீர்மானத்தை ஆதரித்துப் பேசியதுடன், தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்ற உதவிய **அதிமுக**,

தமிழ்நாட்டிற்குரிய நிதியினை ஒன்றிய அரசு வழங்க வேண்டும் எனக் கூறும் **அதிமுக**,

வக்பு வாரியத்தில் திருத்தம் கூடாது எனக் கூறி தமிழ்நாடு அரசுடன் இணைந்து நிற்கும் **அதிமுக**,

ஒன்றிய அரசின் நீட் நுழைவுத் தேர்வை ஏற்காத **அதிமுக**,

ஒன்றிய அரசுக்கு எதிராகக் குரல் கொடுத்து வரும் **அதிமுக**,

இப்படி திடீரென 'யு டர்ன்' எடுத்து அமித் ஷாவை வருடுவது ஏன்?

தமிழ்நாட்டு மக்களுடன் இணைந்து மக்களுக்காக இருக்கும் எடப்பாடியாக இருக்கப் போகின்றாரா? அல்லது அமித்ஷாவின் அரட்டல் மிரட்டலுக்கு அஞ்சி, நடுங்கி, ஒடுங்கி எடப்பாடியார் எட்டப்பராக மாறப் போகின்றாரா?

மீண்டும் சந்திப்போம்

வணக்கம்

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)

மாநிலச் செயலாளர்

# பிணைக்கும் மொழியன்று இந்தி மக்களைப் பிரிக்கும் மொழி



மே.து.ரா.

**அரசமைப்புச் சட்டத்தில் இந்தித் திணிப்புக்கான எத்தகைய வாய்ப்புகளும் வழங்கப்படவில்லை என்றாலும், இந்தியை நேரிடையாகவும் மறைமுகமாகவும் புகுத்துவது ஏதோவொரு வகையில் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது.**

பள்ளிக் கல்வியில் மூன்றாவது மொழியாக இந்தியைப் பயிலவேண்டும் எனப் பரிந்துரைத்த பின், இந்திய மொழிகளில் ஏதாவதொரு மொழியினைக் கற்றுக்கொண்டால் போதும் என்று இப்போது கூறுவது, இந்தியுடன் மும்மொழிக் கல்வி என்பதற்கு இதுவரை கூறப்பட்ட அனைத்து அடிப்படைகளையும் முழுமையாகத் தகர்த்து விடுகிறது.

ஒப்புக்காக மூன்றாவது மொழியாக இந்தியல்லாமல் வேறு எந்தவோர் இந்திய மொழியினை வேண்டுமானாலும் கற்றுக்கொள்ளலாம் என்று கூறினாலும், இந்தியைப் படித்தாகவேண்டும் என்பதை வெவ்வேறு முறைகளில் பலரும் வற்புறுத்தி வருவதைக் குறைத்து மதிப்பிட முடியாது.

பாரதிய சனதாக் கட்சியினரும் அவர்களது ஒன்றிய அரசும் இந்தியைப் புகுத்தவில்லை, ஏதாவதொரு மொழியைத்தானே படிக்கச் சொல்கிறோம் என்று கூறிக்கொண்டே, ஒன்றிய மக்களை இணைக்கும் தகுதி பெற்றது இந்தி மொழி மட்டும்தான் என்று அவ்வப்போது கூறுவது மேலும் சிக்கலை மிகுவிக்கிறது.

அதாவது, பள்ளியில் மூன்றாவது மொழியாக இந்தியைத் தேர்ந்தெடுக்காமல் வேறு ஓர் இந்திய மொழியினைக் கற்றுக்கொண்டாலும், ஒன்றிய அரசின் ஆட்சி மொழியாக இருப்பதாலும், ஒன்றிய மாநிலங்களை இணைக்கும் பிணைக்கும் மொழியாக இருப்பதாலும், பெரும்பான்மையினர் பேசுவதாலும் இந்தியைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்பது தொடர்ந்து முன்னிறுத்தப்படுகிறது. இப்படித் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருப்பதால், தமிழ்நாடு போன்ற இந்தி பேசாத மாநிலங்கள் எப்படியும் இந்தியைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்ற நிலைக்கு மறைமுகமாகத் தள்ளப்படுகின்றன.


பள்ளிகளில் மூன்றாவது மொழியாக இந்தியைத் தேர்ந்தெடுக்காகவிட்டாலும், நான்காவது மொழியாக இந்தியைப் பயிலவேண்டும் என்ற அடுத்த கட்ட நகர்வுக்குக் கொண்டு செல்ல பா.ச.க.வும் ஒன்றிய அரசும் திட்டமிடுகின்றனவோ என்ற அச்சம் இப்போது ஏற்படுகிறது.

நாளடைவில், நான்கு மொழிகளைப் பள்ளிகளில் கற்பிப்பது மாணவர்களுக்குச் சுமையாக மாறும் என்றும், அதற்கு ஆசிரியர்களைப் பணியமர்த்துவது நடைமுறையில் இயலாமல் போகும் என்றும் கூறி, மூன்றாவது மொழியாக இந்தியையே படித்துவிடலாம் என்ற நிலையினைத் தோற்றுவிக்கும் முயற்சியாகவும் இது அமையலாம்.

எந்த மொழியாக இருந்தாலும், பயிலும் மூன்றாவது மொழியினால் எத்தகைய பயனும் இல்லை என்பது உறுதிப்பட்டிருந்த போதிலும், இந்தி மொழியின் வேண்டலுக்கான அடிப்படைகளாகக் கூறப்படுவன யாவும் பொருந்துவனவாக இல்லை என்பதை நாம் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

ஒன்றியத்தில் உள்ள மாநில இன மக்களை இணைக்கிறது, நாட்டை ஒன்றுபடுத்திப் பிணைக்கிறது என்றெல்லாம் கூறுவதுடன் நின்றுவிடாமல், இந்தி மொழி புகுத்தப்படுவதை எதிர்ப்பது இந்திய ஒருமைப்பாட்டுக்கு எதிரானது என்ற குரல்கள் அவ்வப்போது எழுவதையும் காணலாம்.

கோடிக் கணக்கான மக்கள் திரளைக் கொண்ட வெவ்வேறு இனங்களை





உள்ளடக்கியிருக்கும் ஓர் ஒன்றியத்தின் தொடர்புக்கான மொழியின் வேண்டல் என்பது பெரிதும் வணிகம், போக்குவரவு ஆகியவற்றை மட்டுமே நடுவப்படுத்தி இருக்கிறது. கல்வியில் உயர்நிலை பெற்ற அனைவரும் அறிவு மொழியாக அவர்கள் அறிந்திருக்கும் ஆங்கிலத்தின் துணையோடுதான் பணிகளை மேற்கொள்கின்றனர்.

வேலை வாய்ப்பு என்பது இந்தி பேசும் மாநிலங்களில் மட்டும் அமைந்து விடுவதில்லை. இன்றைய நிலையில், உடல் உழைப்புப் பணிகளுக்கான வேலைவாய்ப்புகளுக்காக இந்தி பேசாத மாநிலங்களில் இருந்து இந்தி பேசும் மாநிலங்களுக்குப் பெயர்ந்து செல்வோர் பெரிதும் இல்லையென்றே கூறிவிட முடியும். ஆனால், இந்தி பேசும் மாநிலங்களிலிருந்து தமிழ்நாடு போன்ற தென்னக மாநிலங்களுக்கு வருவோர் நாள்தோறும் பெருகி வருகின்றனர். இவர்கள் தாங்கள் பணியாற்றும் மாநில மொழிகளைத் தாங்களாகவே கற்றுக்கொண்டு அந்தந்த மாநில மக்களோடு கலந்துவிடுகின்றனர் என்பதுதான் நடைமுறையில் நடந்துகொண்டிருக்கிறது.

இதுவே வணிகம், போக்குவரவு ஆகியவற்றுக்கும் ஏற்றதாக அமைந்து விடுகிறது. இந்தி பேசாத இன மக்களின் வணிகத் தொடர்புகள், இந்தி பேசும் மாநிலங்களோடு சுருங்கிவிடவில்லை. இருபத்தைந்துக்கும் மேலாக இருக்கின்ற இந்தி பேசாத மாநிலங்களோடும் வணிகர்களின் தொடர்பு நீள்கிறது. அவரவர் வேண்டல்களுக்கு ஏற்றதான மொழி அல்லது மொழிகளைத் தெரிந்துகொள்கின்றனர்.

போக்குவரவு என்பது சுற்றுலாவின் ஒரு பகுதியாகும். வாழ்வில் ஒரு முறை அல்லது என்றாவது ஒரு முறை சுற்றுலாச் செல்வோர் தங்களுக்குத் தெரிந்திருக்கும் மொழியினை வைத்துக்கொண்டு அனைத்தையும் முடித்துக்கொள்கின்றனர்.

இன்றைய இந்திய ஒன்றிய இனங்களுக்கிடையே 2000 ஆண்டுகளுக்கும் மேலாக வணிகத் தொடர்புகள் நீடித்து வருகின்றன. மேலும் விவரங்களைக் கூறவேண்டுமெனில், பண்டைத் தமிழகம், 2000 ஆண்டுகளுக்கு முன்னரே கிரேக்க, ரோமானிய நாடுகளுடன் கடல் வணிகத்தினை மேற்கொண்டிருந்தது. சீனப் பயணி யுவான் சுவாங் போன்றோர் இன்றைய ஒன்றியத்தின் பல பகுதிகளில் பயணம் செய்துதான் தாங்கள் கண்டவற்றைப் பதிவு செய்திருக்கின்றனர். இத்தகைய வணிகத் தொடர்புகளுக்கும் பிற தொடர்புகளுக்கும் எவரும் இணைப்பு மொழியென ஒன்றினைப் படித்துக்கொள்ளவில்லை. மாறாக, தங்களுக்குத் தெரிந்த மொழி அல்லது மொழிகளையே பயன்படுத்திக்கொண்டனர்.

பலரும் பலமுறை சுட்டிக்காட்டியிருப்பது போன்று, இன்றைய இந்திய ஒன்றிய இன மக்களை ஒன்றுபடுத்தியது ஆங்கில மொழிதான் என்பதை மறந்துவிடக்கூடாது. விடுதலைப் போரினை முன்னின்று நடத்தியோர் ஆங்கிலத்தையே பயன்படுத்த வேண்டியிருந்தது. இந்தி தெரியாத தலைவர்கள் இந்தி மொழியினைக் கற்றுக்கொள்ளவுமில்லை; இந்தி மொழி சார்ந்த தலைவர்கள் ஆங்கிலத்தைப் பயன்படுத்திக் கொள்ள மறுக்கவுமில்லை.

இன்றும்கூடத் தேசிய தலைவர்களாகக் கருதப்படுவோர் அனைவரும் இந்தி பேசாத மாநில மக்களிடம் உரையாற்றும்போது பெரிதும் ஆங்கிலத்தையே நாடுகின்றனர். அவர்கள் ஆங்கிலம் அல்லது இந்தி எனத் தங்களுக்குத் தெரிந்த எந்த மொழியில் பேசினாலும், உள்ளூர் மொழி மக்கள் புரிந்துகொள்ள உரியவாறான மொழிபெயர்ப்பினைச் செய்யவேண்டியுள்ளது.

இவற்றைக் கொண்டு பார்க்கும்போது, பொதுமக்கள் என்ற வகையில் ஒன்றிய இன மக்களை இந்தி இணைத்துவிடவுமில்லை; ஒன்றியத்தில் உள்ள இனங்களை இந்தி ஒன்றுபடுத்தி வைத்திருக்கவுமில்லை. இத்தகைய உண்மை நிலைமைகளைப் புரிந்துகொண்டால், இந்தி புகுத்தப்படுவதை எதிர்ப்பது இந்திய ஒருமைப்பாட்டுக்கு மாறானது என்பது பொய்யாகிவிடுகிறது.

பா.ச.க.வினர் கூறுவது போன்று, இந்தி படிக்கும் உரிமையை மறுப்பது புதிய தீண்டாமையாக அமையவில்லை. இந்தி படித்தாகவேண்டும் என்ற சுமையை ஏற்றி முன்னேற்றத்தைத் தடுப்பதுதான் புதிய தீண்டாமையாக மாறிவிடுகிறது. இந்தி படிக்காவிட்டால் நிதி நல்கையும் இல்லை, வேறு வாய்ப்புகளும் இல்லை என்று ஒதுக்கிவைப்பதுதான் புதிய தீண்டாமையாகும்.

இன்போசிசு நிறுவனத்தின் சுதா மூர்த்தி ஏழு அல்லது எட்டு மொழிகளைத் தெரிந்திருக்கலாம். ஆனால் அந்த மொழிகளை அவர் பள்ளியில் படிக்கவில்லை. பள்ளியில் பல மொழிகளைப் படிக்காமல், வாழ்முறையில் ஏழு அல்லது எட்டு மொழிகளைப் பள்ளிக் கல்விக்குப் பின்னர் தெரிந்துகொள்ள முடியும் என்பதுதான் இங்கு உறுதியாகிறது. அப்படியிருக்க, மூன்றாவது ஏதாவது ஒரு மொழியினைப் பள்ளியில் படிக்காமல், வாழ்வுக்கு எந்த மொழி அல்லது மொழிகளை எப்போது வேண்டுமோ அப்பொழுது தெரிந்துகொள்வதுதான் போதுமானதாக இருக்கும்.

இன்றைய தமிழ்நாட்டின் எதிர்ப்பும் எதிர்பார்ப்பும் இதுதான். இந்திய ஒன்றியத்தில் இந்தி தெரிந்தோர், இந்தி தெரியாதோர் என்ற இரு பிரிவுகளை, இரு வகையான குடிமக்களை உருவாக்கிவிட வேண்டாம். இணைக்கும் மொழியாக முன்னிறுத்தப்படும் இந்தி என்ற கருவி மக்களை இரு பகுதியினராகப் பிரித்துவிடும் மொழியாக மாறிவிடக்கூடாது.

தொடர்புக்கு 9444075561

## 100 ஆட்டோ தொழிலாளர்கள் ஏஐடியூசி செங்கொடி ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கத்தில் இணைத்தனர்



ஆட்டோ தொழிலாளர்கள் சுமார் 100 தொழிலாளர்கள் மாற்றுச்சங்கத்தில் இருந்து நமது ஏஐடியூசி செங்கொடி ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

சென்னை ஈஞ்சம்பாக்ககம் பகுதியில் ஈ.சி.ஆர் எஸ்.கண்ணன், கே.கமல், என்.ஜெயமூர்த்தி, எஸ்.மணி ஆகியோர் தலைமையிலான தோழர்கள் செங்கொடி ஆட்டோ சங்க தலைவர் எம்.ரங்கநாதன், செயலாளர் ஜி.சுப்பிரமணி ஆகியோர் முன்னிலையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

கோவில்மனை குடியிருப்போர் சங்க மாநிலப் பொருளாளரும், இந்தியக் கம்யூனிஸ் கட்சி மாநிலக் குழு உறுப்பினரும், தென்சென்னை மாவட்ட ஏஐடியூசி கௌரவத்தலைருமான எஸ்.ஏழுமலை, தென்சென்னை ஏஐடியூசி மாவட்டப் பொதுச்செயலாளர் ஆர்.அழகேசன் மாவட்டப் பொருளாளர் ஆர்.விஜயகுமார் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சோழிங்கநல்லூர் தொகுதிச் செயலாளர் ஜி.கண்ணதாசன் உள்ளிட்டோர் வாழ்த்தி வரவேற்றனர்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 88 இதழ் 01

# ஆலமரமல்ல! ஆர்எஸ்எஸ் ஒரு புல்லுருவி!

“அழியாத கலாச்சாரத்தின் ஆலமரம் ஆர்எஸ்எஸ்” என்று மோடி புகழ்ந்து இருக்கிறார்.

மேலும் “ஆர்.எஸ்.எஸ் நிறுவப்பட்ட போது, 1925 முதல் 1947 வரையிலான காலம் போராட்டங்களால் நிறைந்திருந்தது. ஆர்.எஸ்.எஸ்ஸின் பல ஆண்டு முயற்சிகளும் கடின உழைப்பும் வளர்ந்த இந்தியாவின் புதிய அத்தியாயத்தை எழுதுகின்றன,” என்று மோடி கூறினார்.

1947 வரை விடுதலை கோரி நாட்டு மக்கள் போராடிக் கொண்டுதான் இருந்தார்கள். ஆனால் அப்போது ஆர்எஸ்எஸ் என்ன செய்தது? பிரிட்டிஷ்காரனுக்கு அடிவருடி, மக்கள் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தது! இதற்காக அவர்கள் வெட்கப்பட வேண்டாமா?

வெள்ளையர்கள் அல்ல, நமது எதிரி முஸ்லீம்கள்தான் என்று இந்து முஸ்லீம் கலவரங்களை அவர்கள் உருவாக்கிக் கொண்டிருந்தார்கள்.

நாஜிப் படையை எதிர்த்து, செஞ்சேனை உயிர்த்தியாகம் செய்து போராடிக்கொண்டிருந்த போது, ஹிட்லரைப் புகழ்ந்து போற்றினார் ஆர்எஸ்எஸ் தலைவர் எம்.எஸ்.கோல்வால்கர். அவனது ஆரிய இனவெறி, இந்தியாவுக்கான சிறந்த முன்மாதிரி என்றார்.

நாடு விடுதலை அடைந்து ஆறு மாதத்துக்குள்ளாகவே, தேசத்தந்தை மகாத்மா காந்தியை ஆர்.எஸ்.எஸ் சுட்டு வீழ்த்தியது. இந்துத்துவ வெறியனான கோட்சே எமது உறுப்பினர் இல்லை என்று சொன்ன ஆர்எஸ்எஸ், ஆட்சிக்கு வந்ததும் அவனை தியாகி என்று புகழ்வது அதன் பொய் வேடத்தை அம்பலப்படுத்துகிறது.

வாரிசுரிமை, திருமணத் தேர்வு, சொத்துரிமை ஆகியவற்றில் பெண்களுக்கும் பங்கு உண்டு என இந்து சட்ட மசோதாவை டாக்டர் அம்பேத்கர் வைத்த போது, நாடு முழுமையும் கலகம் செய்தது ஆர்.எஸ்.எஸ். 1952 பொதுத் தேர்தலைச் சந்திக்க வேண்டிய நேரு, அந்தச் சட்டத்தை முழுமையாக நிறைவேற்றத் தயங்கியதால், அம்பேத்கர் அமைச்சரவையில் இருந்து வெளியேறினார். ‘அவரது உழைப்புக்கும் திறமைக்கும் தலை வணங்குகிறேன்’ என்று மட்டுமே நேருவால் சொல்ல முடிந்தது.

இன்று வரைக்கும் இந்தியச் சமூக முன்னேற்றத்தைக் கலகங்கள் செய்து பின்னிழுத்துக் கொண்டே இருப்பது ஆர்.எஸ்.எஸ்.

கோவிலை இடித்துத்தான் பாபர் மசூதி கட்டப்பட்டது என்று கூறி தொடர்ச்சியான யாத்திரைகள், கலகங்களால் நாட்டை நிலைகுலைய வைத்தனர். பாபர் மசூதியைத் திட்டமிட்டு இடித்ததற்குப் பின்னர், அங்கு கோவில் இருந்ததற்கான தடயமே இல்லை என்று உறுதிப்பட்டது.

“மசூதியை இடித்தது மாபெரும் தவறு. நான் அதைத் தடுக்க முனைந்தேன்” எனப் பேட்டியளித்தார் அத்வானி. ஆனால் ராமர் கோவில் கட்டித் திறக்கப்பட்ட ஆடம்பரம், ஆர்.எஸ்.எஸ்ஸின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்தியது.

அயோத்தியைத் தொடர்ந்து ஞானவாபி, மதுரா, துவாரகா, நம் திருப்பரங்குன்றத்திலும் கூட இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்களை அகற்ற வேண்டும், இடிக்க வேண்டும் என்று வீதிகளிலும் நீதிமன்றங்களிலும் தொடர்ந்து கலவரங்கள்.

குஜராத்தில், 2002ல் ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட கொடூரமான கோத்ரா கலவரம், முசாபர்நகர் கலவரம் எனச் சமூகப் பதட்டத்தை அதிகரித்துக் கொண்டே இருப்பது நாட்டை முன்னேற்றவா?


மதமாற்றத்தடைச்சட்டம், ‘லவ்ஜிகாத்’, மாட்டுக்கறிவைத்திருந்தார் என்ற பெயர்களில் கும்பல் கூடி அடித்துக் கொலைகள், ஏதேனும் சப்பைக் காரணம் சொல்லி சட்ட விரோதமாக முஸ்லிம்களின் வீடுகளை புல்டோசர் கொண்டு இடிப்பது, குடியுரிமை திருத்தச் சட்டம், தேசிய குடிமக்கள் பதிவேடு என்ற பெயரில் இஸ்லாமியர்களை நாடற்றவர்களாக்குவது, ஹிட்லரின் சித்திரவதை முகாம்களைப் போல அவர்களுக்குத் தடுப்புக் காவல் முகாம்களை அமைத்து வாழ்நாள் சித்திரவதைக்கு உள்ளாக்குவது, இந்து பண்டிகைகளின் போது மசூதிகள் மறைக்கப்பட வேண்டும் முஸ்லிம்கள் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது என்று கட்டளை இடுவது, இஸ்லாமியப் பண்டிகைகளின்போது மசூதிக்கு வெளியில் இருந்து தொழுகை நடத்தக் கூடாது பாஸ்போர்ட் டிரைவிங் லைசென்ஸ் பறிமுதலென அச்சுறுத்துவது என இவர்களது வன்கொடுமைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஒரு பக்கம் வெறுப்புப் பேச்சுகளை உமிழ்ந்து பதற்றத்தை உருவாக்கிக் கவனத்தைத் திசை திருப்பிவிட்டு, மறுபுறம் அமலாக்கத்துறை, வருமான வரி துறையை ஏவி விட்டு லட்சக்கணக்கான கோடி ரூபாய்களைக் கொள்ளையடிப்பது, சமஸ்கிருத, பார்ப்பனிய, இந்தி ஆதிக்கத்தைத் திணிப்பது, ஏற்க மறுக்கும் மாநிலங்களைப் பட்டினி போட்டுப் பணிய வைக்க முயல்வது, தொழிலாளர் உரிமைகளைப் பறித்துச் சட்டங்கள் நிறைவேற்றுவது, விவசாயத்தை கார்ப்பரேட்மயமாக்க விவசாயிகளை வீதியில் நிறுத்துவது என அதன் சதிகள் தொடர்கின்றன.

ஆர்.எஸ்.எஸ் ஆலமரமல்ல. தன்னை வளர்த்துக் கொள்ள, தான் படர்ந்த மரத்தின் சத்தை உறிஞ்சிச் சாகடிக்கும் புல்லுருவி!

# புல்டோசர் இடிப்பு வாழ்வுரிமையை பறிப்பதாகும்!

## உத்தரப்பிரதேச பாஜக அரசுக்கு உச்சநீதிமன்றம் கண்டனம்



உத்தரப்பிரதேசத்தில் புல்டோசர் கொண்டு வீடுகளை இடிக்கும் நடவடிக்கைக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள உச்சநீதிமன்றம், வாழ்வதற்கான அடிப்படை உரிமையைப் பறிக்கும் செயல் என்று சாடியுள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் பாஜக ஆட்சி நடைபெற்று வருகிறது. யோகி ஆதித்யநாத் முதலமைச்சர். இங்கு சில வழக்குகளில் குற்றம்சாட்டப்பட்ட நபர்களுடைய வீடுகள் புல்டோசர் மூலம் இடித்து அகற்றப்படுகிறது. சட்ட விதிகள் எதனையும் பின்பற்றாமல் நடந்துவரும் புல்டோசர் இடிப்புக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. நீதிமன்றங்களிலும் வழக்குகள் தொடரப்பட்டன.

2021 ஆம் ஆண்டில் உத்தரப் பிரதேச மாநிலம் பிரக்யாராஜில் உள்ள அம்பேத்கர் நகரில் புல்டோசர் மூலம் வீடுகள் இடித்து அகற்றப்பட்டன. ஆக்கிரமிப்பு புகாரில் வீடுகள் இடிக்கப்பட்டதாக பிரக்யாராஜ் உள்ளாட்சி அதிகாரிகள் தெரிவித்தனர். இப்படி வீடுகள் இடிக்கப்பட்டதில், வழக்கறிஞர், பேராசிரியர், இரண்டு பெண்களும் வீடுகளை இழந்தனர். இவர்கள் புல்டோசர் இடிப்புக்கு எதிராக அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். இடிக்கப்பட்ட வீடுகளுக்கு இழப்பீடும் கோரியிருந்தனர். ஆனால் இந்த வழக்கை அலகாபாத் உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இதையடுத்து உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. உச்சநீதிமன்ற நீதிபதிகள் அபய் எஸ் ஒகா மற்றும் உஜ்ஜல் பூயான் அமர்வு விசாரித்து வந்தது. ஏப்ரல் ஒன்றாம் தேதி மீண்டும் விசாரணைக்கு வந்த போது, வீடுகளை இடித்து அகற்றிய புல்டோசர் நடவடிக்கைக்கு உச்சநீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்தது.

“இது மனிதாபிமானமற்ற செயல். மக்கள் வாழும் உரிமையை பறிக்கிறது. புல்டோசரால் இடித்து தள்ளப்பட்ட வீடுகளுக்கு 6 வாரங்களுக்குள் தலா ரூ.10 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும்” என நீதிபதிகள் ஆணையிட்டனர். வீடுகளை இடித்த போது, சிறுமி ஒருவர் புத்தகங்களை கையில் எடுத்துக்கொண்டு ஓடிய காணொளியைக் கண்ட நீதிபதிகள் கவலை தெரிவித்தனர்.

“புல்டோசர் கொண்டு வீடுகள் இடிக்கப்பட்ட போது சிறுமி ஒருவர் புத்தகத்தை எடுத்து கொண்டு ஓடுகிறார். இந்தக் காட்சி அதிர்ச்சியளிக்கிறது. இந்த வழக்கில் எந்த அவகாசமும் தராமலேயே 24 மணிநேரத்தில் புல்டோசர் மூலம் வீடுகளை இடித்துத் தள்ளியது கடும் கண்டனத்துக்குரியது. வீடுகளை அகற்றுவது தொடர்பான அறிவிக்கை 24 மணிநேரத்துக்குள் தான் ஒட்டப்பட்டுள்ளது. இப்படி வீடுகளை இடிப்பது சட்டவிரோதமான செயல். வாழ்வதற்கான அடிப்படை உரிமையைப் பறிப்பதாகும். இந்த வழக்கு நமது மனசாட்சியை அதிர்ச்சிக்கு உள்ளாக்குகிறது” என்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் கடுமையாகத் தெரிவித்தனர். இவை பாசிஸ்ட் பாஜகவுக்கு எங்கே உறைக்கப் போகிறது?

# கச்சத்தீவை மீட்க தனித்தீர்மானம்

## தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றம்






தமிழ்நாடு சட்டப்பேரவையில், கச்சத்தீவு மீட்பு தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொண்டுவந்த தனித் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

சட்டப்பேரவையில் ஏப்ரல் 2 ஆம் தேதி கச்சத்தீவு மீட்பு தொடர்பான தனித் தீர்மானத்தை முன்மொழிந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். அப்போது, “தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரின் தொடர் தாக்குதலுக்கு உள்ளாகி வருவதை கனத்த இதயத்தோடு நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். முற்றுப்புள்ளி வைக்க முடியாத தொடர் பேரழிவாக இது அமைந்திருக்கிறது. இலங்கையில் எத்தனை அரசியல் நிலைமைகள் மாறினாலும், தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது மட்டும் மாறாமல் இருக்கிறது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இந்திய மீனவர்கள்தான் என்பதை ஒன்றிய அரசு அடிக்கடி மறந்துவிடுகிற காரணத்தால், நாம் மீண்டும் மீண்டும் அவர்களை தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திய மீனவர்கள் என்று அழுத்தமாகச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

பின்னர், “தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டிடவும், இலங்கைக் கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்களுக்கு ஏற்படும் அனைத்து இன்னல்களைப் போக்கிடவும், கச்சத்தீவை மீண்டும் பெறுவதே நிரந்தரத் தீர்வாக அமையும். இதனைக் கருத்தில் கொண்டு, இந்திய இலங்கை ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்து, கச்சத்தீவைத் திரும்பப் பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்றிய அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

அரசுமுறைப் பயணமாக இலங்கை செல்லும் இந்தியப் பிரதமர், அந்நாட்டு அரசுடன் பேசி, இலங்கை சிறையில் வாடும் நம் நாட்டு மீனவர்களையும், அவர்களது படகுகளையும் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்து மீட்டுக் கொண்டு வரவேண்டுமென்று இப்பேரவை வலியுறுத்துகிறது” என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

முதலமைச்சர் கொண்டுவந்த தனித்தீர்மானத்துக்கு அதிமுக, பாஜக உள்ளிட்ட கட்சிகளும் ஆதரவு அளித்ததால், குரல் வாக்கெடுப்பு மூலம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதாக அவைத்தலைவர் அப்பாவு அறிவித்தார்.

# தலித்துகள் மீது தொடரும் வன்முறைகள் தீர்வு என்ன?



த.லெனின்

**சாதி சனாதன, வருணாசிரம எதிர்ப்பே தமிழரின் தனி நிலை**

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின்..." என்றார் திருமூலர்

"சாத்திரம் பலபேசும் சழக்கர் காள்!
கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்" என வினா தொடுக்கிறார் அப்பர்

"சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை..." என்கிறார் மாணிக்கவாசகர்

சாதிசம யங்களிலே வீதிபல வகுத்த
சாத்திரக்குப் பைகள்எல்லாம் பாத்திரம்அன் றெனவே
ஆதியில்என் உளத்திருந்தே அறிவித்த படியே
அன்பால்இன் றுண்மைநிலை அறிவிக்க அறிந்தேன்

என்கிறார் வள்ளலார்

"சாதிகள் இல்லையடி பாப்பா குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்.."

என்கிறான் பாட்டுக்கு ஒரு புலவன் பாரதி

கேரளாவில் அன்று இருந்த சாதி வெறியை பார்த்த சுவாமி விவேகானந்தர் இது பைத்தியக்காரர்களின் நாடு என்று குறிப்பிட்டார். இன்று எத்தனையோ மாற்றங்கள் வந்தாலும் அறிவியல் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் ஏற்பட்டாலும் சாதி வெறி அவ்வப்போது தலை தூக்கத் தான் செய்கிறது தமிழ்நாடு அதற்கு விதிவிலக்கு அல்ல என்பதைத்தான் சமீபகால நிகழ்ச்சிகள் தெரிவிக்கின்றன

தமிழ்நாட்டில் தலித்துகளுக்கு எதிரான குற்றங்களின் எண்ணிக்கை கடந்த 2020ல் 1274 குற்றங்கள், 2021ல் 1377 குற்றங்கள், 2022ல் 1761 குற்றங்கள் என 2022 ஆம் ஆண்டுவரை வழக்குகள் பதிவானது, 2023 ஆம் ஆண்டு 2000 வழக்குகள் என்று பதிவாகியுள்ளது. 2022 ஆம் ஆண்டில் மட்டும் மொத்தம் 57,582 குற்றச்சாட்டுகள் உள்ளதாக தேசிய குற்ற ஆவண காப்பக அறிக்கை கூறுகிறது. இது பாஜக ஆளும் வட மாநிலங்களைக் காட்டிலும் குறைவானது தான் என்றாலும் சமூக நீதி சமத்துவம் பேணும் தமிழ்நாட்டில் இப்படி நடைபெறுவது ஏற்புடையதல்ல.

## தஞ்சை

தஞ்சை மருத்துவக் கல்லூரியில் மருத்துவ பட்டப்படிப்பு படித்து வந்த பண்ருட்டி பாபுகுளம் பகுதியைச் சேர்ந்த அஜித்குமார், மருத்துவ கல்லூரி டீன் மற்றும் பேராசிரியர்கள், விடுதிக்காப்பாளர்கள் போன்றவர்களின் ஆதிக்க சாதி வெறியாட்டங்களால் மனம் உடைந்து தற்கொலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். அது பற்றிய வழக்கு பதிவு செய்து பல மாத காலமாகியும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை.

## வேங்கைவயல்

2022ம் ஆண்டுடிசம்பரில், புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயல் கிராமத்தில் பட்டியலின மக்களுக்கான மேல்நிலை நீர்த்தேக்க குடிநீர் தொட்டியில் கயவர்கள் மலம் கலந்தார்கள். குற்றவாளிகள் ஆதிக்க சாதி சக்திகள்தான் எனத் தெரிந்த போதும், பாஜகவின் ஐடி விங் தலித்துகள் தான் குடிநீர் தொட்டியில் மலம் கலந்தார்கள் என்று பொய்ச்செய்தி பரப்பியது. காவல்துறையும் தலித்துகளையே குற்றவாளிகள் ஆக்க முயன்றது அனைவரும் அறிந்ததே. சிறப்பு புலனாய்வு, உயர்நீதிமன்ற புலனாய்வு எல்லாம் நடந்தும் குற்றவாளிகள் இதுவரை கைது செய்யப்படவில்லை.





## மதுரை காயாம்பட்டி

கடந்த 15.1.2023ல் மதுரை, ஒத்தக்கடை அருகில் உள்ள காயாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பட்டியலின இளைஞரான கண்ணனும் அவரது மனைவியும் பொங்கல் அன்று பக்கத்து ஊரில் இருந்த உறவினர்களைப் பார்க்க இரு சக்கர வாகனத்தில் சென்றுள்ளனர். அவர்களை வழிமறித்த அதே ஊரைச் சேர்ந்த ஆதிக்க சாதி இளைஞர்கள், இரு சக்கர வாகனத்தை வேகமாக ஓட்டுகிறாய்? எனக் கேட்டு தாக்கியுள்ளனர். கண்ணன் அணிந்திருந்த ஆடைகளையும் அவிழ்த்துள்ளனர்; அவரது மனைவியின் சேலையைப் பிடித்து இழுத்துள்ளனர்.

## நாங்குநேரி

தான் படிக்கும் பள்ளியில் தனக்கு இழைக்கப்படும் சாதியாதிக்கக் கொடுமை குறித்து புகார் அளித்ததற்காக நாங்குநேரியைச் சேர்ந்த தலித் சமூகத்தைச் சேர்ந்த சின்னதுரை வீட்டிற்குள் புகுந்து ஆதிக்க சாதியைச் சேர்ந்த சக மாணவர்களால் கொலை வெறியுடன் வெட்டப்பட்டார். தடுக்க வந்த அவரது தங்கை சந்திரா செல்வியையும் வெட்டினார்கள். பள்ளிகளிலேயே சாதியாதிக்க நச்சு விதைக்கப்படுகிறது என்பதற்கு இது சான்று.. தென்மாவட்டங்களில் குறிப்பாக திருநெல்வேலி பள்ளிகளில் சாதி அடையாள வண்ணக் கயிறுகளும், ரிப்பன்களும் மிகவும் பிரபலமாக உள்ளது.

## தச்சநல்லூர்

திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதி தச்சநல்லூரை அடுத்த மணிமூர்த்தீஸ்வரம் அருகே 31.10.23ல், பட்டியலினச் சமூகத்தைச் சேர்ந்த இரு இளைஞர்கள் மனோஜ்குமார், மாரியப்பன் ஆகியோரை இடைநிலை ஆதிக்க சாதி வெறியர்கள் சாதியைச் சொல்லித் திட்டி, அசிங்கமாகப் பேசி கொடூரமாகத் தாக்கியது மட்டுமல்லாமல், அவர்களை நிர்வாணப்படுத்தி அவர்கள் மீது சிறுநீர் கழித்து, மாலை முதல் நள்ளிரவு வரை ஆறு மணி நேரத்திற்கும் மேலாக அவர்களைச் சித்தரவதைக்கும், அவமானத்திற்கும் உள்ளாக்கியுள்ளனர். அந்த சாதி வெறியர்கள் தலித் இளைஞர்களின் செல்போன்கள், டெபிட் கார்டுகள், நகைகள் மற்றும் 5000 ரூபாய் பணத்தை இவாலட் மூலம் கொள்ளையடித்துள்ளனர். ஆடைகளைப் பறித்துக் கொண்டனர். அவமானப்பட்ட இளைஞர்கள் இருவரும் நிர்வாணமாக இரண்டு கிலோ மீட்டர் தூரம் நடந்தே வீடு சென்று சேர்ந்துள்ளனர்.

## விழுப்புரம்

தமிழ்நாட்டின் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள வி. அகரம் அரசுப் பள்ளியைச் சேர்ந்த 11 வயது தலித் சிறுவன் மார்ச் 14 அன்று அவனது பள்ளி ஆசிரியரால் மூங்கில் குச்சியால் தாக்கப்பட்டான். தாக்குதலுக்குப் பிறகு, சிறுவனின் பார்வை மங்கலாக இருப்பதாக புகார் அளித்து, புதுச்சேரியில் உள்ள ஜிப்மரில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் நரம்பு பாதிப்புக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பாக விழுப்புரம் காவல்துறை முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்தது.

மாணவரது தலை மற்றும் வயிற்றில் இரண்டு அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்ட பின்னர் அவர் குணமடைந்து வருவதைக் காட்டுகிறது.

மேலும், தாக்கிய ஆசிரியர் செங்கென்னி பட்டியல் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதால் அவர் மீது பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றும், இருப்பினும், மருத்துவர்களின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் எஃப்ஐஆர் மாற்றப்படும் என்றும் காவல்துறையின் கூறினர்.

## தூத்துக்குடி மாணவன் தேவேந்திர ராஜா

தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம், அரியநாயகபுரம் கிராமத்தைச் சேர்ந்த பதினொன்றாம் வகுப்பு தலித் மாணவன் தேவேந்திர ராஜா ஆதிக்க சாதிவெறியர்களால் கொடூரமாக வெட்டப்பட்ட செய்தி தமிழ்நாட்டையே அதிர்ச்சியடையச் செய்துள்ளது. கடந்த மார்ச் 27 ஆம் தேதி தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் சார்பில் நெல்லை மருத்துவமனைக்குச் சென்று பாதிக்கப்பட்ட மாணவனையும் அவரது பெற்றோரையும் சந்தித்தோம்

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்

## கல்லூரி மாணவி ஆணவப் படுகொலைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கடும் கண்டனம்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் ஆணவப் படுகொலைகள் தொடர்வது கடும் கண்டனத்திற்குரியது.

திருப்பூர் மாவட்டம், பல்லடம் அருகே உள்ள பருவாய் பகுதியைச் சேர்ந்த கல்லூரி மாணவி வித்யா (22) ஆணவக் கொலை கொடூரமாக நடந்துள்ளது. வெண்மணி என்ற இளைஞரை வித்யா காதலித்துள்ளார். இருவரும் வயது வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வெண்மணியின் பெற்றோர்கள் வித்யா வீட்டிற்குச் சென்று அவரது பெற்றோரைச் சந்தித்து முறையாக பெண் கேட்ட நிலையில், அவர்கள் பெண் கொடுக்க மறுத்து விட்டனர். இந்நிலையில், வித்யா படுகொலை செய்யப்பட்டு, யாருக்கும் தெரியாமல் பெண் வீட்டார் அடக்கம் செய்துள்ளனர்.

வித்யாவின் மரணத்தில் மர்மம் இருப்பதாக காவல் நிலையத்தில் வெண்மணி புகார் அளித்ததன் அடிப்படையில், காவல்துறையினர் விசாரித்து வித்யா கொலை செய்யப்பட்டதை உறுதி செய்துள்ளனர். ஆணவப் படுகொலை குறித்து விசாரித்த காவல்துறையினர், வித்யாவின் தந்தை மற்றும் சகோதரரை கைது செய்துள்ளனர்.

இவர்கள் இருவர் மட்டும் தானா? மற்றும் பலரும் ஈடுபட்டுள்ளனரா? என்பது குறித்து முழுவிசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். சம்மந்தப்பட்டவர்கள் யாராக இருப்பினும் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து கைது செய்யப்படுவதுடன் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி கடும் தண்டனை பெறுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

அங்கொன்றும், இங்கொன்றுமாக சாதியின் பெயரால் தொடர்ச்சியாக ஆணவப் படுகொலைகள் தொடர்ந்து நடப்பது அநாகரிகத்தின் உச்சமாகும். இத்தகைய இழிசெயல் தொடராமல் தடுத்திடவும், நிரந்தரத் தீர்வு காணவும், உரிய சட்டப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள தனிச்சட்டம் நிறைவேற்றிட வேண்டுமாய் தமிழ்நாடு அரசை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக்கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தெரிவித்துள்ளார்.

# நூறு நாள் வேலைத்திட்டத்தில் துயரம் ஆறு மாதங்களாக ஊதியம் தரப்படவில்லை!

## சட்டப்பேரவையில் க.மாரிமுத்து எம்எல்ஏ பேச்சு



தமிழ்நாடு சட்டப்பேரவையில் மார்ச் 26 ஆம் தேதி அன்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற பேரவை உறுப்பினர் க.மாரிமுத்து ஆற்றிய உரை வருமாறு:

### உள்ளாட்சித் தேர்தல்

மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் முன்மொழிந்திருக்கிற மானியக் கோரிக்கை மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துகளை நான் முன்வைக்கிறேன். நாடாளுமன்றமாக இருந்தாலும், சட்டமன்றமாக இருந்தாலும் அங்கே நிறைவேற்றப்படும் தீர்மானங்களையும் அரசு கொண்டு வருகிற திட்டங்களையும் நடைமுறைப்படுத்துகின்ற ஓர் உயர்ந்தபட்ச, ஜனநாய அடிப்படையிலான அமைப்பு என்பது ஊரக வளர்ச்சித் துறை.

இந்த ஊரக வளர்ச்சித் துறை செயல்பாட்டின் அடிப்படையில்தான், மக்களுடைய அனுபவப்பூர்வமான கோரிக்கைகளின் அப்படையில்தான், அரசுகளின் கொள்கைகளுக்கான திட்டங்களுக்கு இந்தத்துறை ஆதாரமாக இருக்கின்றது. மக்களாட்சியின் மாண்பின் மீதும், அதிகாரப் பரவலாக்கலின் மீதும் மிகப் பெரிய அளவில் நம்பிக்கை வைத்திருக்கின்ற இந்த அரசு, உள்ளாட்சித் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று இந்த அவையில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நடைமுறைப்படுத்தும் அனைத்துத் திட்டங்களும், சட்டங்களும் கிராமப்புறங்களில் இருக்கும் ஏழையெளிய மக்களுக்கும் ஊரக வளர்ச்சித் துறை மூலமாகத்தான் கொண்டு செல்லப்படுகிறது. இப்படிக் கொண்டு செல்லப்படும் திட்டங்கள் அனைத்தும், ஜனநாயக ரீதியாக கொண்டு செல்லப்பட உள்ளாட்சி அமைப்புகள் அவசியமாகும். அரசியலமைப்புச் சட்டத்தின் 73வது பிரிவும் இதைத்தான் அங்கீகரித்திருக்கிறது. இந்த அமைப்புதான் கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்குகின்றது. எனவேதான் உள்ளாட்சித்தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

### நூறு நாள் வேலைத்திட்டம்

இன்றைக்கு கிராமப்புறங்களுக்கு வாழ்வாதாரமாக இருப்பது நூறு நாள் வேலைத் திட்டம். கடந்த 10 ஆண்டுகளாக ஆட்சி அதிகாரத்திலே இருக்கும் ஒன்றிய அரசு, இந்த நூறு நாள் வேலைத் திட்டத்தை சிதைத்து, அழித்தொழிக்கின்ற வேலையில் ஈடுபட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் நூறு நாள் வேலைத் திட்டத்தின் மூலமாக 40 இலட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் ஊரக வளர்ச்சித் துறைக்கு வழங்கப்பட்டிருக்கும் என்று பொருளாதார வல்லுநர்கள் சொல்லி யிருக்கின்றனர். ஊரக வளர்ச்சித்துறை நிலைக்குழுவும் அறிக்கை தந்திருக்கிறது. ஆனால், கடந்த 3 ஆண்டுகளாக ஒன்றிய அரசு, வெறும் 86 ஆயிரம் கோடி ரூபாயைத்தான் நூறு நாள் வேலை திட்டத்திற்காக ஒதுக்கியிருக்கிறது.

அப்படி ஒதுக்கியிருக்கிற காரணத்தினாலேயே இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் பார்த்த போது, 12.3.2025 அன்றைய கணக்கின்படி, 29 கோடியே 930 இலட்சம் மனித சக்தி நாட்கள்தான் வேலை நடைபெற்றிருப்பதாக சொல்யிருக்கிறார்கள். ஆனால், வேலையின் தேவை கிராமங்களில் அதிகரித்து வருவதை உணர்த்தி தமிழ்நாடு அரசுதான் ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியிருக்கிறது. அதில் 40 கோடி மனித சக்திகளுக்கான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளது. இந்தக் கடிதத்தை ஒன்றிய அரசு உள்வாங்கி, கிராமப்புறங்களில் நூறு நாள் வேலைத் திட்டத்தை உறுதியாக செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என இந்த அவையின் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

நூறு நாள் வேலைத்திட்டத்தில், வேலை செய்தவர்களுக்கு ஒன்றிய அரசாங்கம் கொடுக்க வேண்டிய 2 ஆயிரத்து 938 கோடி ரூபாய் இன்னும் வராமல் இருக்கிறது. அதாவது, வேலை பார்த்ததற்கு கொடுக்க வேண்டியிருக்கிறது என்பதை கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார்கள். அதோடு சில பணிகளையும் சேர்த்து 3 ஆயிரத்து 796 கோடி ரூபாய் வரவில்லை என்று சொல்லி யிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்கள் வாயிலாக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன்.

### ஊதியம் வழங்கப்படவில்லை

திருத்துறைப்பூண்டியில் மட்டுமல்ல, குக்கிராமங்களிலும் இருக்கிற சாமானிய, ஏழை எளியவர்கள் 6 மாத காலமாக உழைத்திருக்கிறார்கள். அவர்களுடைய அன்றாட வாழ்வாதாரமே நூறு நாள் வேலைத் திட்டம்தான். பொருளாதார வாழ்க்கையே அதுதான். இந்த நூறு நாள் வேலைத் திட்டத்தில், 6 மாதகாலமாக வேலை செய்தவர்களுக்குரிய பணம், அவர்களின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படவில்லை. இதனால் திருத்துறைப்பூண்டித் தொகுதியில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் பதற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதனை இந்த அரசின் கவனத்திற்கு கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

### 450 சதுர அடியில் வீடு

கலைஞர் கனவு இல்லம் திட்டம், அடித்தட்டு மக்களின் கனவுத் திட்டம். டாக்டர் கலைஞர் அவர்களுடைய பெரும் கனவு. தமிழ்நாட்டில் ஓலைக் குடிசைகளில் வாழ்ந்து கொண்டிருக்கிற, கிராமப்புற மக்களுடைய கௌரவமான வாழ்க்கைக்கு ஒரு வீடு வேண்டும் என்கிற தொலைநோக்குத் திட்டத்துடன், குடிசை இல்லாத தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும் என்ற பெரும் கனவோடு உருவாக்கப்பட்டிருப்பது கலைஞர் கனவு இல்லம் திட்டம்.

நாம் ஓர் அரசியல் உண்மையையும் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. தொகுதி மறுவரையறை சட்டத்தால், தமிழ்நாட்டில் நாம் கவலையோடும், கலக்கத்தோடும் இருக்கிறோம். ஆட்சி அதிகாரத்தில், அரசியல் அதிகாரத்தில், நாம் எந்த இடத்தில் இருக்கப் போகிறோம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

நான் மீண்டும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு, மக்கள்தொகை பெருக்கம் அவசியமாக இருக்கிறது. உங்களுடைய கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ், 390 சதுரடியில் வீடுகளைக் கட்டிக்கொள்ளலாம். அதற்கு நாங்கள் மூன்றரை இலட்சம் ரூபாய் நிதி வழங்குகிறோம் என்று சொல்கிறீர்கள். மக்கள்தொகை வளர்ச்சியும் தேவைப்படுகிறது. எனவே, 450 சதுரடியில் 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வீடுகளைக் கட்டிக்கொள்ள கிராமப்புற ஏழைகளுக்கு அரசு அனுமதி வழங்க வேண்டும் என பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

### மேம்பாட்டுத் திட்டத்தில் கிராமச் சாலைகள்!

முதல்வரின் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டம், கிராமப்புறங்களில் கடைக்கோடியில் இருப்பவர்களுக்கும் மேம்பாடான சாலைகள், தரமான சாலைகள் தரப்பட வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டிருக்கிறது. இதற்கான நிதியும் கிட்டத்தட்ட 2 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், திருச்சியில் பெய்கிற மழைநீர், திருத்துறைப்பூண்டி, கோட்டூர், முத்துப்பேட்டைக்கு வந்துதான் கடலுக்குச் செல்ல வேண்டும்.

அடிக்கடி பெய்கிற மழை, அடிக்கடி ஏற்படுகிற வெள்ளப்பெருக்கு போன்றவற்றின் தாக்கத்தால் மிகவும் குறுகிய காலத்திலேயே சாலைகள் சீர்கெட்டு, பலவீனம் அடைந்துவிடுகிறது. எனவே, முதல்வரின் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் திருத்துறைப்பூண்டி தொகுதிக்கு நிபந்தனை இல்லாமல், கூடுதலான சாலைகளையும் கணக்கெடுத்து, அத்தனை சாலைகளையும் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் கொண்டுவர வேண்டும் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன். முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி, கோட்டூர் போன்ற பகுதிகளிலும் இதனை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

### குறைந்தபட்ச கூலிச் சட்டத்தில் ஊதியம்

ஊரக வளர்ச்சித் துறையில் கிராம சுகாதார ஊழியர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்; 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் கணினி ஆப்பரேட்டர்கள் இருக்கிறார்கள்; தூய்மைப் பணியாளர்கள் இருக்கிறார்கள்; தூய்மைக் காவலர்கள் இருக்கிறார்கள்; மேலநிலை நீர்த்தொட்டி இயக்குபவர்கள் இருக்கிறார்கள்; பள்ளிக்கூடங்களில் சுகாதார ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். அத்தனை பேருக்கும் குறைந்தபட்ச கூலிச் சட்டம் என்று ஒன்றிருக்கிறது. அந்தச் சட்டத்தின் அடிப்படையில், அவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்'' என்று க.மாரிமுத்து எம்.எல்.ஏ உரையாற்றினார்.

## எம் சாண்ட் விலை உயர்வு

“இன்னொன்றையும் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தஞ்சாவூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் போன்ற மாவட்டங்களுக்கு அடிப்படையான பணிகள் செய்யப்பட வேண்டுமென்றால், அதாவது, எங்களுக்கு ஜல்லி வர வேண்டுமென்று சொன்னாலும், எம்சாண்ட் வரவேண்டும் என்று சொன்னாலும், அது புதுக்கோட்டை யிலிருந்து வர வேண்டும், கரூரிலிருந்து வர வேண்டும்.

ஆனால், கலைஞர் வீடு கட்டும் திட்டமாக இருந்தாலும், சாலை வசதிகளாக இருந்தாலும், கடந்த இரண்டு மாதங்களாக பணிகள் அனைத்தும் நின்றுபோய் உள்ளன. இந்தத் திட்டங்களுக்கு உத்தேச மதிப்பீடுகள் போடுகிறபோது, கலைஞர் வீடு கட்டும் திட்டத்திற்கு மதிப்பீடு போடுகிறபோதும் சரி, மற்ற திட்டங்களுக்கு விலை நிர்ணயம் செய்கிறபோதும் சரி, எம்சாண்ட் நிர்ணயம் செய்கிறபோதும், ஜல்லி நிர்ணயம் செய்கிறபோதும் புதுக்கோட்டையை கணக்கு வைத்துத்தான் எங்களுக்குச் சொல்கிறார்கள். ஆனால் அங்கு, 2,000 ரூபாய்க்கு ஒரு யூனிட் கொடுத்தவர்கள், அதை இரண்டு மடங்கு அதிகரித்து 4,000 ரூபாயாக உயர்த்திவிட்டார்கள். இதனால் இன்றைக்கு மிகப்பெரிய நெருக்கடியை எதிர்கொண்டிருக்கிறோம்” என்று க.மாரிமுத்து எம்.எல்.ஏ பேசினார்.

## புதிய ஊராட்சி ஒன்றியம்

“திருத்துறைப்பூண்டியில் குடிநீர் ஆதாரமாக இருக்கிற எழிலூர் ஏரியை உடனடியாக புனரமைத்துத் தருமாறு பேரவைத் துணைத்தலைவர் வாயிலாக இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, கோட்டூர் ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து பெருகவாழ்ந்தானைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகம் தொடங்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன்” என்று க.மாரிமுத்து எம்.எல்.ஏ பேசினார்.

## குற்றவாளிகளை அடையாளம் காட்டாதது ஏன்?

டாஸ்மாக் நிறுவனத்தில் ஒன்றிய அரசு அமலாக்கத் துறை நடத்திய ஊழல் விசாரணைக்கு 41 போலீஸ் முதல் தகவல் அறிக்கைகள் அடிப்படையானவை.


இந்த ஊழல் புகார்களில் 34 ஊழல் புகார்கள் அதிமுக எடப்பாடி பழனிசாமி ஆட்சிக் காலத்தில் ஊழல் தடுப்பு போலீசாரால் (க்ஷி–கி சி) பதிவு செய்யப்பட்ட தி.மி.ஸி.கள்

7 ஊழல் புகார்கள் மட்டுமே 2021 விருந்து தி.மு.க ஆட்சிக் காலத்தில்.

அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற 34 டாஸ்மாக் ஊழல் வழக்குகள் மீது விரைவாக விசாரணை நடத்தி முடித்து சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைப் பொதுமக்களுக்கு அடையாளம் காட்டாதது ஏன்? அரசு மற்றும் தமிழகக் காவல்துறையின் காலதாமதம், ஊசலாட்டம் தமிழக மக்களிடையே பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்தும். 2026 தேர்தல் தொடங்குவதற்கு முன்பாக டாஸ்மாக் சம்பந்தப்பட்ட 41 ஊழல் வழக்குகளிலும் குற்ற பத்திரிகையாவது தாக்கல் செய்யப்படுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**கோவை.வழக்கறிஞர்**
**கே.சுப்ரமணியன்.**

# கிருஷ்ணகிரி மாவட்ட முன்னுதாரண இயக்கம்



இரா.முத்தரசன்

**நமது கட்சிக்கு மக்கள் நலனைத் தவிர்த்து வேறொன்றும் இல்லை. மக்களின் இன்ப, துன்பங்கள் அனைத்திலும் நமது பங்களிப்பு மின்னி மிளிரும். மக்களின் ஒற்றுமை, அவர்களின் நலன், முன்னேற்றம் இவைகளே நமது குறிக்கோள்.**





தேர்தல் வரும் போகும்! வெற்றி வரும் போகும். வெறும் தேர்தலை மட்டுமே நம்பி யிருக்கக்கூடிய இயக்கமல்ல.

தேர்தல் வேண்டும் வெற்றிகளும் வேண்டும் அத்தகைய வெற்றிகள் என்பது மக்களுக்கானது, மக்கள் நலன் சார்ந்தது. அதற்கு எந்நேரமும் நமது பங்களிப்பைச் செலுத்திட வேண்டும். மக்களின் பிரச்சினைகள் ஒன்றா இரண்டா எடுத்தெழுத!

ஏராளம், ஏராளம் எண்ணில் அடங்கா அத்தகைய அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வு காண வேண்டிய பெரும் பொறுப்பும் கடமையும் ஆளும் அரசுகளைச் சார்ந்தது.

நாம் போற்றுகின்ற அரசமைப்புச் சட்டம் நம் இந்தியக் குடிமக்களுடைய ஒவ்வொருவரின் வாழ்க்கையையும் பிறர் போற்றத்தக்கதாக வேண்டும் என்று தெரிவிக்கின்றது.

அத்தகைய போற்றத்தக்க வாழ்க்கையாக அமைந்திட மூன்று அடிப்படைத் தேவைகள் உள்ளன. அவை உணவு, உடை, இருப்பிடம் இம்மூன்றில் ஒன்று குறைந்தாலும் அதனை ஏற்க இயலாது.

மகா கவி பாரதி ‘தனியொரு மனிதனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்’ என்றான்.

இதிலிருந்து உணவின் தேவை எத்தகையது என்பதனை அறிந்திடல் இயலும். ஆடை இல்லா மனிதன் அரை மனிதன். ஆள் பாதி ஆடை பாதி ஆடையின் தேவையை உணர்த்துகின்றது.

முண்டாசு கவிஞன் பாரதி ஒவ்வொருவரின் வாழ்க்கையில் நிலமும் வீடும் எவ்வளவு தேவை என்பது குறித்து, அன்று வெள்ளையர்கள் ஆட்சி இருந்த காரணத்தால் அரசைக் கோராமல், அவன் வணங்கும் பராசக்தியைப் பார்த்து ‘காணி நிலம் வேண்டும் பராசக்தி, காணி நிலம் வேண்டும், அந்தக் காணி நிலத்திடையே ஓர் மாளிகை கட்டித் தர வேண்டும்’ எனக் கோரினார்.

## நிலம் வேண்டும் வீடு வேண்டும்!

நம்மோடு வாழும் மக்களில் பல்லாயிரம் பல்லாயிரம் பேர் நிலம் இன்றி, மனை இன்றி, பட்டா இன்றி, வீடு இன்றி வாழ்ந்து வருவது மற்றெல்லோரைக் காட்டிலும் நாம் நன்கறிவோம்! அவர்கள் யார்? நம் சகோதர, சகோதரிகள் ஆவார்.

இன்று நேற்றல்ல, காலங்காலமாக வீட்டுமனையற்றவர்களாக இரவல் குடிசையில், சாலையோர நடைபாதைகளில்(பிளாட்பாரம்) வாழ்ந்து வரும் மக்களை நலம் அறியாதவர்கள் அல்லர். அவர்கள் கோரிக்கைக்காகத் தொடர்ந்து போராடியும் வந்துள்ளோம்.

நமது போராட்டங்களால் பயன் பெற்றோர் ஏராளம் உண்டு. எவரும் மறுத்திட இயலாது.

ஆனாலும் பிரச்சனைகள் முழுமையாகத் தீர்ந்தபாடில்லை. அதனால்தான் தமிழ்நாடு அரசு அண்மையில் சென்னை போன்ற பெரு நகரங்களில் வசிப்போருக்கு ஆட்சேபனை இல்லாத இடங்களில் குடியிருப்பவர்களுக்கு 86 ஆயிரம் குடும்பங்களுக்குப் பட்டா வழங்கிட முன் வந்திருக்கின்றது என்பது மட்டுமல்ல ஐந்து லட்சம் பேருக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கிட, 2025 2026 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கிராம ஊராட்சிகளிலும், பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிகளில் உள்ள ஒவ்வொரு வார்டு பகுதியிலும் உள்ள மக்களுக்குத் தீர்க்கப்படாத பிரச்சினைகளாகக் கீழ்க்கண்டவைகள் உள்ளன.

1. நீண்ட காலமாக குடியிருந்து வரும் குடும்பங்களுக்குக் குடும்ப அட்டை (ரேஷன் கார்டு) வழங்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியலில் அக்குடும்பங்களைச் சேர்ந்த வயது வந்தோர் சேர்க்கப்பட்டு வாக்காளர் அட்டைகளும் வழங்கப்பட்டு நாடாளுமன்ற, சட்டமன்ற, உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களில் தவறாமல் வாக்களித்தும் வருகின்றார்கள். அவர்களின் பெரும்பாலான வீடுகளுக்கு மின் இணைப்பும் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் குடிமனை பட்டா மட்டும் வழங்கப்படாமல் உள்ளது.

இவர்கள் குடியிருந்து வரும் தனியாருக்குச் சொந்தமான இடம், அரசு புறம்போக்கு நிலங்கள், கோவில் மனைகள் அல்லது மடங்கள் மற்றும் சத்திரங்களுக்குச் சொந்தமான இடம், நீர்வழிப் புறம்போக்கு இடங்கள் குளம் மற்றும் ஏரிக்கரைகள் சாலைப் புறம்போக்கு அல்லது மாட்டுமந்தை ஆகிய இடங்களில் தங்களது சொற்ப வருமானத்தில் சிறு சிறு குடிசை அமைத்து வாழ்கின்றார்கள்.

இத்தகையவர்களுக்குப் பட்டா கிடைக்காத காரணத்தால் அரசின் குறைந்தபட்ச சலுகை பெற முடியவில்லை. குறிப்பாக முதலமைச்சர் வீடு கட்டும் திட்டம் அல்லது ‘’பிரதமர்’’வீடு கட்டும் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டிக் கொள்ள இயலாது. அவர்கள் குடியிருப்பிற்குப் பட்டா இல்லை என்கிற ஒரே காரணம்தான்.

பட்டா வழங்க வேண்டிய பொறுப்பு கடமை அரசைச் சார்ந்தது.

அரசு தனது கடமையைச் செய்யாமல் குடியிருப்பவர் மீது குற்றம் சுமத்தித் தட்டிக் கழிப்பது நியாயமல்ல.

அங்கு நியாயம் அல்ல என்று சொல்லி விட்டு நாம் நமது பணியைச் செய்யாமல் தட்டிக் கழிப்பது நியாயமா? என்கிற நியாயமான கேள்வியை நமக்கு நாமே கேட்டு தீர்வுக்கு வழி காண வேண்டும்.

குடிமனை பட்டா குறித்து கிராம நிர்வாக அதிகாரி, வருவாய் ஆய்வாளர் ஆர்.ஐ பரிந்துரை செய்ய வேண்டும்.

அதனை அவர் சரிபார்த்து வட்டாட்சியருக்குப் பரிந்துரை செய்து செய்து, அதனை வட்டாட்சியர் சரி பார்த்து பட்டா வழங்கிட வேண்டும்.

பயனாளியின் விண்ணப்பத்துடன் அவர் குடியிருப்பதற்கான சான்றுகள், குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல், வாக்காளர் அடையாள அட்டை நகல் இவைகளை இணைத்துப் பயணிகளுடன் வட்டாட்சியர் அவர்களைச் சந்தித்து விண்ணப்பம் கொடுத்து விட்டு பட்டா கிடைக்கின்ற வரை தொடர்ந்து இடைவிடாமல் முயற்சி எடுத்தால் நம் நம் சகோதர, சகோதரிகளுக்குப் பட்டா கிடைத்து, அவர்களின் வாழ்க்கையில் ஒரு மகிழ்ச்சி சந்தோஷம் கிடைக்கும்!

அதிகாரிகளிடத்தில் மனு கொடுத்து விட்டோம் அவர்கள் தங்களது கடமையைச் செய்வார்கள் பட்டா வழங்குவார்கள் என்று நாம் நினைத்தால் நம்மை விடப் பைத்தியக்காரர்கள் எவரும் இருக்க முடியாது என்று சொல்லவில்லை.

தங்களது கடமையைச் செய்யும் அளவிற்கும் ஏழைகள் பால் இரக்கம் காண்பிக்கும் அளவிற்கும் உரிய தற்போதைய அதிகார வர்க்கம் இல்லை என்பதனை நாம் நன்கு உணர்ந்து இருக்கிறோம்.

அதிகாரிகளிடத்தில் ஒரு விண்ணப்பத்தை அளித்தால் அவ்விண்ணப்பக் கோரிக்கை நிறைவேற வேண்டுமெனில், விண்ணப்பித்தவர் நடையாய் நடந்து கால்கள் தேய்ந்துவிடும்

இதனை தீர்ப்பதற்கு எந்த தேவதூதனும் வரப்போவதில்லை. ஆனால் இப்போது புதிதாகக் கட்சி தொடங்கி மக்கள் பிரச்சனைகள் என்னவென்றே அறியாது, அடுத்த முதல்வர் நான்தான் எனக் குளிர்சாதனம் பொருத்தப்பட்ட குளு குளு அறைகளில் அமர்ந்து ஒரு சிறு சொட்டு வியர்வையைக் கூடச் சிந்து மனமில்லாமல், எவரோ எழுதித் தந்த அறிக்கையை வெளியிட்டு, அது தொலைக்காட்சிகளில் நாளேடுகளில் வருவதைக் கண்டு மனம் மகிழும் ஆர்பாட்ட அரசியல் நடக்கிறது. எந்தக் காலத்திலும் இது எளிய மக்களுக்குச் சாதகமாய் அமைந்ததில்லை.

நமது முன்னோர்களின் நூறு ஆண்டுகள் அனுபவத்தை, படிப்பினைகள், பாடங்களை கசடற கற்றறிந்து மக்களைத் திரட்டி மெய்யாகத் தீர்வு காண நாம் முயன்றாக வேண்டும்.

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை தொகுதியில் இரண்டு வட்டங்கள் உள்ளன. தேன்கனிக்கோட்டை மற்றும் அஞ்சட்டி வட்டங்களாகும்.

தரைப் பகுதியிலும், மலைப்பகுதியிலும் உள்ள பல்லாயிரக்கணக்கான மக்களைத் திரட்டி கடந்த மார்ச் 10 மற்றும் 24 ஆகிய இரு தினங்களில் இரு இடங்களிலும் பெரும் திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஒவ்வொருவரும் ஒரு கையில் கோரிக்கை விண்ணப்பம் மறு கையில் செங்கொடி பிடித்துக் கோரிக்கைகளை முழக்கமிட்டு நடத்திட்ட இயக்கம் நல்ல முன்னுதாரணமாகும்.

தோழர் டி.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ, எம்.லகுமய்யா, சுந்தரவள்ளி, சின்னசாமி, பழனி பூதட்டியப்பா, மாதைய்யர் மற்றும் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள், மாவட்டக் குழு உறுப்பினர்கள், இடைநிலை, கிளைச் செயலாளர்கள் அனைவரும் மேற்கொண்ட நல்முயற்சிக்குக் கிடைத்திட்ட வெற்றிகரமான இயக்கமாகும்.

மாநில மையத்தின் சார்பில் மாநிலத் துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் செயற்குழு உறுப்பினர் எம்.ரவி, இளைஞர் பெருமன்றச் செயலர் பாரதி, மாணவர் பெருமன்றச் செயலாளர் தினேஷ் உள்ளிட்ட தோழர்களும் பங்கேற்றார்கள்.

கிருஷ்ணகிரி மாவட்ட இயக்கத்தை நல்லதொரு முன்மாதிரியாகக் கொண்டு, ஏனைய மாவட்டங்களும் இதுகுறித்து திட்டமிடலாம்.

வட்ட வாரியாக இயக்கங்களை மேற்கொள்ள வேண்டும். மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதில் நமது கவனம் மிக முக்கியம்.

இவைகள் குறித்து அமைப்புகளில் கூட்டாக விவாதித்து, திட்டமிட்டு, தனிப் பொறுப்பேற்றுச் செயல்படுத்தி செயல்படுத்துவோம்.

## வங்கி வழியாகப் பகல் கொள்ளை




ஏப்ரல் 1 முதல் புதிய வங்கிச் சட்டம். இந்த 7 மாற்றங்கள் அமலுக்கு வருகின்றன.

ஏப்ரல் 1, 2025 முதல், இந்தியா முழுவதும் புதிய வங்கிச் சட்டம் செயல்படுத்தப்படுவதால் வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்களுக்குப் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும். பொறுப்பான நடத்தையை ஊக்குவிக்கவும், மோசடியைத் தடுக்கவும், தொழில்நுட்ப முன்னேற்றத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும் வங்கிகள் தங்களது கொள்கைகளைத் திருத்துவதாகச் சொல்லப்படுகிறது.

இந்த மாற்றங்கள் ஏடிஎம் பணம் எடுக்கும் கொள்கைகள், சேமிப்புக் கணக்கு விதிகள், கிரெடிட் கார்டு சலுகைகள் போன்றவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும். இது வாடிக்கையாளர்களின் பணத்தைக் கொள்ளையடிக்க மேற்கொள்ளப்படும் சதி. இதுபற்றி விரிவாகப் பார்க்கலாம்.

1. ஏடிஎம் பரிவர்த்தனைக் கட்டணங்களுக்கான வழிகாட்டுதல்களை ரிசர்வ் வங்கி நிர்ணயித்துள்ளது. இதனால், பல வங்கிகள் தங்கள் ஏடிஎம் பணம் எடுக்கும் கட்டணங்களைத் திருத்தியுள்ளன. ஒரு மாதத்தில் ஏடிஎம் ல் இலவசமாகக் கட்டணம் இன்றிப் பணம் எடுக்கும் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது, பிற வங்கிகளின் ஏடிஎம்களில் பணம் எடுக்கும்போது மாதத்திற்கு 3 முறை இலவசமாக எடுக்கலாம். அதன் பிறகு, ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் ரூ.20 முதல் ரூ.25 வரை கட்டணம் வசூலிக்கப்படும்.

2. அனைத்துச் சேமிப்புக் கணக்கு வாடிக்கையாளர்களும் தங்கள் கணக்குகளில் பராமரிக்க வேண்டிய குறைந்தபட்ச சராசரி இருப்புத் தொகை என்ற வரைமுறையை வைத்துள்ளது. நிர்ணயிக்கப்பட்டதை விட குறைவாக இருக்கும் பட்சத்தில் அபராதமும் விதிக்கப்படும். அபராதத் தொகைக்கு ஜிஎஸ்டி வரியும் உண்டு என்பதுதான் பெருங்கொடுமை.

3. வங்கி மோசடியைத் தடுக்க ரிசர்வ் வங்கி Positive Pay System முறையை (PPS) செயல்படுத்தும். அதாவது ரூ.50,000 க்கு மேல் காசோலைகளை வழங்கும் வாடிக்கையாளர்கள், பயனாளிகளுக்கு அவர்கள் வழங்கிய காசோலைகள் பற்றிய முக்கிய விவரங்களை மின்னணு முறையில் வங்கிக்கு வழங்க வேண்டும்.

4. டிஜிட்டல் தளங்களில் வங்கிச் சேவையை மேம்படுத்தும் வகையில் AI பயன்படுத்தப்படும். வாடிக்கையாளர்களுக்கு உதவ வங்கிகள் மேம்பட்ட ஆன்லைன் அம்சங்கள் மற்றும் கிமி சாட்பாட்களை அறிமுகப்படுத்துகின்றன. டிஜிட்டல் பரிவர்த்தனைகளைப் பாதுகாக்க two-factor authentication மற்றும் பயோமெட்ரிக் சரிபார்ப்பு போன்ற மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு அம்சங்களை வலுப்படுத்தும்.

நிரந்தர வைப்புநிதி வட்டியைக் கணக்கிட்டு வாழ்க்கை நடத்தும் முதியோர் வருவாய் பறிக்கப்படும்.

5. பல வங்கிகள் savings accounts மற்றும் fixed deposits வட்டி விகிதங்களைத் திருத்தி வருகின்றன. தொழிற்சங்கம் போன்ற அமைப்புகளுக்கு இனி சேமிப்புக் கணக்கு கிடையாது. கரண்ட் அக்கவுண்ட் மட்டும்தான். அதாவது தொகைக்கு வட்டியே கிடையாது.

6. ஏப்ரல் 1, 2025 முதல், முக்கிய வங்கிகள் கிரெடிட் கார்டு விதிகளைத் திருத்தி வருகின்றன. இது rewards, கட்டணங்கள் போன்ற பலவற்றைப் பாதிக்கும். SBI SimplyCLICK Swiggy வெகுமதிகளை 5X ஆக பாதியாகக் குறைத்தும், Air India Signature புள்ளிகளை 30லிருந்து 10 ஆகக் குறைத்தும் அமல்படுத்தும். IDFC First, Club Vistara மைல்ஸ்டோனின் பயன்களை நிறுத்தும்.

7. ஏப்ரல் 1 முதல், நீண்ட காலமாகப் பயன்படுத்தப்படாத UPI கணக்குகளுடன் இணைக்கப்பட்ட மொபைல் எண்கள் வங்கிப் பதிவுகளிலிருந்து நீக்கப்படும். உங்கள் தொலைபேசி எண் UPI செயலியுடன் இணைக்கப்பட்டு நீண்ட காலமாகப் பயன்படுத்தப்படாவிட்டால், வங்கிகள் அதைத் தங்கள் பதிவுகளிலிருந்து நீக்கிவிடும், மேலும் கணக்கிற்கான UPI சேவைகள் இடைநிறுத்தப்படும்.

வங்கிக் கணக்கு செயல்படுத்தப்படவில்லை என்ற பெயரில் வங்கியில் பணம் விழுங்கப்படும்.

வங்கியில் பணத்தைப் போடுவதுகட்டாயப்படுத்திவிட்டு சரமாரியாகக் கட்டணங்கள், அபராதம், வட்டிக்குறைப்பு எனப் பணத்தை உறிஞ்சி, கார்ப்பரேட்களுக்குக் கடன் கொடுத்து அதையும் தள்ளுபடி செய்யும் கொடூரம் இன்னும் ஆழப்படுத்தப்படுகிறது.

---

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 100

கட்சிப் பொதுச் செயலாளர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்



டி.எம்.மூர்த்தி

கட்சியின் ஐந்தாவது பொதுச் செயலாளர் 1951 - 62

# பகத்சிங்



**1948இல் கட்சி எடுத்த நிலைப்பாட்டின் காரணமாக காங்கிரஸ் அரசாங்கம் பெரும் அடக்கு முறையை கட்டவிழ்த்து விட்டது. நான்காவது பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்ட பி.டி.ரணதிவே, பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டு, நடக்க இருக்கிற அடுத்த கட்சி காங்கிரஸ் வரை சி.ராஜேஸ்வரராவ் பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டு 1950–51 ஆண்டுகளில் குறுகிய காலம் செயல்படுகிறார்.**

1951ல் அஜய் குமார் கோஷ் கட்சியின் ஆறாவது பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்படுகிறார்.

அஜய் குமார் கோஷ், 1909 பிப்ரவரி 20ஆம் தேதி உத்திரபிரதேசத்தின் மிகிஜம் என்ற கிராமத்தில் பிறந்தவர். அந்த ஊர் 'அஜாய்' எனும் நதிக்கரையில் உள்ளது. அதுவே அவர் பெயரானது.

அவரது தந்தை, சச்சீந்திரநாத் கோஷ் ஒரு டாக்டர். அஜய் கோஷ் அலகாபாத் பல்கலைக்கழகத்தில் வேதியல் பாடத்தில் முதுநிலை பட்டம் பெறுகிறார்.

ஆனால் அவரது 14 வயதிலேயே, பகத்சிங்கின் நெருங்கிய நண்பர் ஆகிறார். அவரது இந்துஸ்தான் சோசியலிஸ்ட் குடியரசு சங்கத்தில் அங்கம் வகிக்கிறார். நாட்டின் விடுதலைக்கும் சோசியலிசத்துக்கும் ஆயுதம் ஏந்திய போராட்டமே சரியான வழி என்பது அதன் திண்மையான முடிவு.

பிரிட்டிஷ் இந்தியா நாடாளுமன்றத்தில், தொழிலாளர்களை ஒடுக்குவதற்கான தொழிற் தகராறு மசோதா அறிமுகப்படுத்தப்பட்ட அன்று, பகத்சிங்கும், பட்டுகேஸ்வர தத்தும் பேராபத்தை விளைவிக்காத வெடிகுண்டை எறிகிறார்கள். லாகூர் சதி வழக்கில் 1929ல் பகத்சிங்கும் அஜாய் கோஷ் உள்ளிட்ட அவரது தோழர்களும் கைது செய்யப்படுகிறார்கள்.

ஐந்து ஆண்டுகள் சிறைவாசத்தில் நூல்களை வாசித்து, கம்யூனிசத்தின் மீது அஜாய்க்கு பற்று ஏற்படுகிறது. சந்திரசேகர ஆசாத் முன்னதாகவே சுட்டுக் கொல்லப்பட்டு விடுகிறார். வழக்கின் இறுதியில் பகத்சிங், ராஜகுரு, சுகதேவுக்கு தூக்கு தண்டனை, மற்றவர்களுக்கு ஆயுள் தண்டனை உள்ளிட்ட இதர தண்டனைகளும் வழங்கப்பட்ட போது, குறைந்த வயது காரணமாகவும், தக்க சாட்சியம் இல்லாததாலும் அஜாய் விடுதலை செய்யப்படுகிறார்.

வெளியே வந்ததும் பிரபலமான கம்யூனிஸ்ட் தலைவர் எஸ்.ஜி.சர்வதேசாயுடன் சேர்ந்து கான்பூரில் தொழிற்சங்க பணிகளில் ஈடுபடுகிறார். மார்க்சிய லெனினியத்தை ஏற்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராகிறார்.

அவருக்கு முதலில் கான்பூர் மாவட்டத்திலும், பின்னர் உத்தரபிரதேச (அன்றைய ஐக்கிய மாகாணம்) மாநிலத்திலும் கட்சிப் பொறுப்புகள் வழங்கப்படுகின்றன. பிரபல கம்யூனிஸ்ட் தலைவர் டாக்டர் ஜி அதிகாரி சிறையில் இருந்து வெற்றிகரமாக தப்பிக்க, தக்கவற்றை செய்கிறார். 1936 இல் கட்சியின் அரசியல் தலைமை குழு உறுப்பினராக தேர்வு செய்யப்படுகிறார்.

1940 இல் கைது செய்யப்பட்டு கொடுமைக்கு பெயர்பெற்ற தியோலி சிறையில் அடைக்கப்படுகிறார்.

குத்துச்சண்டை, பளு தூக்குதல் பயிற்சிகளால் உறுதியான உடல் பெற்ற அஜாய், சிறைவாசத்தால் எலும்புருக்கி நோய்க்கு ஆட்படுகிறார். காஷ்மீருக்கும், பஞ்சாப்புக்கும் அனுப்பப்பட்டு அங்கு கட்சியை கட்டுகிறார்.

1947இல் லிட்டோராயை காதலித்து திருமணம் செய்து கொள்கிறார். சில மாதங்களிலேயே, கைதாகி சிறை செல்கிறார். இன்னல் மிக்க வாழ்க்கையில் இருவரும் ஒருவருக்கு துணையாய் மற்றவர் இருக்கிறார்கள்.

கட்சி எடுத்த நாட்டின் அகநிலை, புறநிலை எதார்த்தத்தைப் பின்தள்ளி ஆயுதமேந்திய போராட்டம் எனும் சாகசவாத 'ரணதிவே பாதை' சரியல்ல என்று விமர்சித்து டாங்கே, காட்டே ஆகியோரோடு சேர்ந்து அவர் எழுதிய கடிதம் (three Ps document)

### நாட்டுக்கு எதிரான தீமைகள்!

1961ல், தேசிய ஒருங்கிணைப்பு மாநாடு ஒன்றை அப்போதைய பிரதமர் ஜவஹர்லால் நேரு நடத்தினார். வகுப்புவாதம், சாதியம், பிராந்தியவாதம், இன வெறி, மொழிவெறி, குறுகிய மனப்பான்மை ஆகியவற்றின் தீமைகளை எதிர்த்துப் போராடுவதற்கான வழிகளைக் கண்டறியவும், நாட்டிற்கு ஒரு வழிகாட்டுதலை வழங்குவதற்காக திட்டவட்டமான முடிவுகளை எடுக்கவும் இந்த மாநாடு கூட்டப்பட்டது.

அதில் அஜாய் ஆற்றிய உரை அற்புதமானது. இன்று வரை இந்தியாவை ஆட்டிப்படைக்கும் தீமைகளைப் பற்றி அவர் விரிவாக உரையாற்றினார். இந்தியாவைப் பற்றிய அஜாயின் ஆழமான புரிதலுக்கு அது என்னது அற்புதமான எடுத்துக்காட்டு.

**(பகத்சிங்கும் அவரது தோழர்களும் என்ற கட்டுரைத் தொகுப்பில் அந்த முழு உரை இடம்பெற்றுள்ளது. இணையதளத்தில் இருந்து எடுத்தும் படிக்கலாம்)**

---

5 ஆம் பக்கத் தொடர்ச்சி

பெற்றோர் இருவரும் செங்கல் சூளையில் வேலை பார்க்கும் மிகச் சாதாரண உழைப்பாளி மக்கள் ஆவர்.

கபடிப் போட்டியில் தேவேந்திர ராஜா பங்கேற்ற அணி வெற்றிபெற்றுள்ளது. இதில் ஆச்சரியம் என்னவென்றால் அந்த அணியில் அனைத்து சாதியினரும் இருக்கிறார்கள் என்பதுதான். கபடிப் போட்டியில் தோற்றவர்கள் அவரை தங்கள் அணிக்கு ஆட வரும்படி அழைத்ததாகவும் சொல்கின்றனர். ஆனால் அவர் மறுத்து தொடர்ந்து தான் விளையாடிய அணிக்காகவே விளையாடி வெற்றியும் பெற காரணமாக இருந்துள்ளார். எனவே ஆதிக்கச் சாதிவெறியர்கள் கடந்த 10.3.2025 வழக்கம் போல் பள்ளிக்கு பேருந்தில் சென்ற மாணவன் தேவேந்திர ராஜாவை பேருந்தை நிறுத்தி வெளியே அழைத்துச் சென்று ஒரு புதர் அருகே கொலைவெறித் தாக்குதல் நடத்தியுள்ளனர். தேவேந்திர ராஜாவுக்கு தலையில் கொடுங்காயமும் இரண்டு கைகளிலும் வெட்டுக்காயமும் ஏற்பட்டுள்ளது. சில விரல்கள் துண்டிக்கப்பட்டும் விட்டன.

**நாங்குனேரி :** மாணவன் சின்னத்துரை நன்றாக படித்ததற்காகவும் சிவகங்கை மாணவன் புல்லட் ஓட்டியதற்காகவும் வெட்டப்பட்டனர். இப்போது தேவேந்திர ராஜா கபடியில் வென்றதற்காக வேட்டையாடப்பட்டுள்ளானர்.

**தென்காசி :** புளியங்குடியைச் சேர்ந்த தலித் தங்கசாமி பாளையங்கோட்டை சிறையில் மர்ம மரணம், தென்காசி தலித் போலீஸ்காரர் தினேஷ், ஆதிக்க சாதியினரால் தாக்குதல், கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோயிலில் அருந்ததியர் சமூக மக்கள் ஆண்டாண்டு காலமாக குடியிருக்கும் இடத்திற்கு பட்டா கேட்டு போராடினார்கள் என்பதற்காக

# ...கின் தோழர் அஜாய் குமார் கோஷ்

(20.2.1909 – 13.1.1962)

புகழ்பெற்றது.

அவர் பொதுச் செயலாளராக பொறுப்பு வகித்தது ஒரு மிகக் கடினமான காலம். கிட்டத்தட்ட நொறுங்கிப் போன நிலையிலிருந்து மீண்டு, நாட்டில் இரண்டாவது பெரிய அரசியல் கட்சியாகவும், செல்வாக்கு மிக்க அரசியல் சக்தியாகவும் மாறுவதற்கு அவரது வழி நடத்தல் முக்கிய காரணியாகும். அவர் ஒரு ஆய்வாளர், கோட்பாட்டாளர், களப்பணியாளர், மிகுந்த பொறுமைசாலி என்பதால் இது சாத்தியமானது. 1954இல் அவர் முதல் இதய தாக்குதலுக்கு ஆளாகிறார்.

உலக கம்யூனிஸ்ட் இயக்கத்திலும் அவர் பெரும் தலைவராக மதிக்கப்பட்டார். உலக இயக்கத்தில் அப்போதுதான் சீன வழி தலை எடுக்கிறது. அது இந்தியாவிலும் கட்சிக்குள் பெரும் விவாதத்தை துவக்குகிறது. சீன கம்யூனிஸ்ட் கட்சி, உலக கம்யூனிச இயக்கத்தோடு முரண்பாடாக செல்லாமல் இருக்க, அக்கட்சியை ஆற்றுப்படுத்த முனைந்தார்.

அவர் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு பத்திரிகையாளர்களை சந்தித்தபோது, "இந்திய அரசு மற்றும் இந்திய சூழலைப் பற்றி சீன கம்யூனிஸ்ட் தலைமையின் மதிப்பீடு தவறானது. எது எப்படி இருந்தாலும் இந்தியச் சூழலை மதிப்பிட வேண்டியது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பணியே தவிர, வேறு எந்த கட்சியின் வேலையும் அல்ல, சீனக் கம்யூனிஸ்ட் கட்சி உட்பட" என்று பேசினார்.

சீனப் பாதை தவறு என்று அஜாய் விமர்சித்ததால், கட்சியின் ஒரு பகுதியினரின் கொடூரமான தனிநபர் தாக்குதலுக்கு ஆட்பட்டார். ஒரு வில்லன் போல சித்தரிக்கப்பட்டார். ஆனாலும் கட்சிக்குள் ஒற்றுமையை கட்டுவதற்கு தன்னாலான அனைத்தையும் செய்தார். மதுரையில் 1953 ஆம் ஆண்டிலும், பாலக்காட்டில் 1956ம் ஆண்டிலும், அமிர்தசரஸில் 1958 ஆம் ஆண்டிலும், 1961இல் விஜயவாடாவிலும் நடந்த மூன்று, நான்கு, ஐந்து. ஆறு கட்சிப்பேராயங்களில் அவர் பொதுச்செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டார்.

## இதயங்களில் வாழ்வார்!

கூச்ச சுபாவம் உள்ளவர் அஜாய். ஆனால் குழந்தைகளுடன் இருக்கும்போது அது காணாமல் போய்விடும். அவரது கதைகளும் சொந்த அனுபவங்களும் இளைஞர்களின் கற்பனையை சிலிர்க்க வைத்தன. அஜாய் தன் மகன் லல்லுவுடன் இருக்கும்போது அடைந்த மகிழ்ச்சி, வேறெங்கும் அவருக்கு கிடைத்ததில்லை.

குழந்தை பிறந்தபோது அஜாய் கவலைப்பட்டார். ஆனால் அஜாயின் கட்சி வேலைகளைத் தவிர வேறு எதுவும் அவரைத் தன் மகனிடமிருந்து பிரித்ததில்லை. 'குழந்தைகள் இல்லாமல் வாழ்க்கை முழுமையடையாது என்று தனக்கு ஒருபோதும் தெரியாது' என்று கூறுவார்.

அஜாய் போய்விட்டார், ஆனால் அவருக்கு நெருக்கமானவர்களின், அன்பானவர்களின், அவரை தூரத்தில் இருந்து பார்த்த தோழர்களின் இதயங்களில், நீண்ட காலம் வாழ்வார்.

**லிட்டோ கோஷ்,**
**(அஜாயின் மனைவி)**

கட்சியில் விவாதிக்கப்பட்ட ஆவணங்களில், தேசிய சுதந்திரத்தை வென்றதை அங்கீகரிப்பது, இந்திய அரசின் முதலாளித்துவ தன்மை, முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையின் முரண்பாடுகள், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் முற்போக்கான தன்மை, மதச்சார்பற்ற ஜனநாயக அமைப்பின் சாத்தியக்கூறுகள், ஆளும் காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள் மற்றும் அதன் பின்னால் உள்ள பரந்த மக்கள் உட்பட அனைத்து தேசிய ஜனநாயக சக்திகளின் ஒற்றுமையின் தேவை மற்றும் சாத்தியக்கூறு, இந்தியப் புரட்சியின் தேசியஜனநாயக மற்றும் முதலாளித்துவமற்ற பாதையை முன்னெடுத்தல் உள்ளிட்டவை அனைத்தும், அவர் முன்வைத்த வரைவுகளில் இருந்து உருவாக்கப்பட்டவை.

அதே நேரத்தில், திருத்தல்வாதத்திற்கும் வலதுசாரி சீர்திருத்தவாதத்திற்கும் அஜாய் இடம் கொடுக்கவில்லை. அவர் மார்க்சியலெனினிசத்தின் அடிப்படைகளை உறுதியாகப் பாதுகாத்தார், புரட்சிகர முன்னோக்கை முன்வைத்தார், தொழிலாள வர்க்கத்தின் சிறப்புப் பணியையும் கட்சியின் தனித்தன்மையான பங்களிப்பையும் வலியுறுத்தினார், ஐக்கிய முன்னணியின் பெயரில் முதலாளித்துவத்திற்குப் பின்னால் சாய்வதை எதிர்த்தார்.

1957ல் கேரளாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அரசை, அன்றைய காங்கிரஸ் தலைவர் இந்திரா காந்தியும், பிரதமர் நேருவும் 1959ல் கவிழ்ப்பதற்கு முயன்றதற்கு எதிராக, முதல் கம்யூனிஸ்ட் தலைமையிலான அமைச்சரவையைப் பாதுகாக்க கட்சியின் மகத்தான அரசியல் பிரச்சாரத்தை அஜாய் வழிநடத்தினார்.

நமது நாட்டின் ஜனநாயக அமைப்பு மற்றும் அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகள் ஆபத்தில் உள்ளன என்பதை அவர் தெளிவுபடுத்தினார்.

1961ல் விஜயவாடாவில் நடைபெற்ற ஆறாவது கட்சி பேராயத்தில் வைத்த அரசியல் மற்றும் அமைப்பு நிலை வரைவு தீர்மானங்களளை நிறைவேற்ற முடியாத அளவுக்கு கருத்து வேற்றுமை ஏற்பட்டது. நிறைவாக பொதுச் செயலாளர் அஜாய் கோஷ் ஆற்றிய தொகுப்புரையையே மாநாட்டில் ஆவணமாக ஏற்பது என்று தீர்மானிக்கப்பட்டது, அஜாய் கோஷின் செல்வாக்குமிக்க பங்கை அடிக்கோடிட்டுக் காட்டியது.

இந்தியா விடுதலை அடைந்த போதும், போர்ச்சுகல் ஆதிக்கத்தில் கோவா இருந்தது. நாடெங்கும் மதச்சார்பற்ற. முற்போக்கு, ஜனநாயக சக்திகளை அணிதிரட்டி கம்யூனிஸ்ட் கட்சி கோவா விடுதலைக்காக போராடியது. அதில் அஜாய் கோஷுக்கு முக்கிய பங்கு இருந்தது. இந்த விடுதலைப் போராட்டத்தை போர்ச்சுகல் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரித்தது. டிசம்பர் 18, 1961ல் கோவா விடுவிக்கப்பட்டது.

உடல் நலிவு காரணமாக மாஸ்கோவுக்கு சென்று இதே சிகிச்சை மேற்கொள்வதற்காக விடுப்பு கோரி கட்சியிடம் 1962ல் விண்ணப்பித்தார் அஜாய். ஆனால் இந்த நேரத்தில் சோவியத் யூனியன் செல்வது நல்லதல்ல என்று மறுக்கப்பட்டது.

1962ல் நாடாளுமன்றத் தேர்தலுக்கான கட்சியின் தேர்தல் பிரச்சாரத்தை வழிநடத்தியதுதான், அவர் தலைமை தாங்கிய கடைசி அரசியல் நடவடிக்கை.

அந்தப் பரப்புரை இயக்கத்தின் ஊடாகவே, 1962 ஜனவரி 13ஆம் தேதி கடுமையான இதய தாக்குதலின் காரணமாக, செயல்பாட்டை அவரது உடல் நிறுத்திவிட்டது.

தன்னல மறுப்பு உச்சத்தில் நின்ற இவரைப் போன்றவர்கள் தான், மற்றவர்களாலும், கட்சியினராலும், லட்சக்கணக்கான மக்களாலும், அழியாத வரலாற்றாலும் நினைவுகூரப்படுகிறார்கள்.

புதுடெல்லியில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையகம் அவரது பெயரில் 'அஜாய் பவன்' ஓங்கி உயர்ந்து நிற்கிறது.

**தொடர்புக்கு: 7397130367**

---

அவர்களை சாதியாதிக்க மனோபாவத்துடன் தாக்கிய காவல்துறை 5 பொய் வழக்குகள் போட்டு கைது செய்து சிறையில் அடைத்தது. தூத்துக்குடி மாவட்டம் மணக்கரையில் 13.11.2023 அன்று பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த மணி என்பவர் ஆதிக்க சாதியினரால் படுகொலை செய்யப்பட்டார். அன்றாடம் தலித்துகள் மீதான தாக்குதல்கள், வன்கொடுமை செய்திகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன.

படிக்கும் போது நண்பர்களாக விளங்கிய ஒரு பிற்படுத்தப்பட்ட மாணவர் தலித் காலனி பகுதிக்குச் சென்று தனது நண்பரை மச்சான் என்று அழைத்து மகிழ்கிறார் இதை கண்ட அங்குள்ள பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த இளைஞர்கள் அவர்களை எப்படி நீ மச்சான் என்று கூப்பிடலாம் என தாக்கியுள்ளனர் இப்படி பொது பண்பாட்டுக்கு எதிரான ஒன்றாக சாதிய வன்மம் மாறி இருக்கிறது.

தலித்துகளுக்கு எதிரான வன்கொடுமைகள் வெறும் சட்டம் ஒழுங்கு பிரச்சனை மட்டுமல்ல, காலங்காலமாக பொதுப் புத்தியில் நிலவும் சாதி வெறி மனப்பான்மையை பிரதிபலிக்கும்,அப்பட்டமான தலித் விரோத,வெறுப்பு அரசியலின் விளைபொருளாகும்.

கல்வியில் மற்றும் உயர்கல்வியில் முன்னேறிய மாநிலமாக உள்ள தமிழ்நாட்டில் தலித்துகளுக்கு எதிரான வன்முறைகள் ஒரு அரசியல் கலாச்சாரமாக மாறியுள்ளது.

இதற்கு முடிவு கட்டுவதே தந்தை பெரியார்,சிந்தனை சிற்பி சிங்காரவேலர், அறிவாசான் அம்பேத்கர் வழியில் ஒரு சமத்துவ சமூகத்தை படைக்க முனையும் முதல் படி!

**தொடர்புக்கு: 9444481703**

---

## காலத்தின் கட்டளை



தமிழ் மொழியின், தமிழ்நாட்டின் நிரந்தரக் கொள்கை ரீதியான எதிரிகளான ஆர்எஸ்எஸ், பாஜகவோடு கூட்டணி அமைக்கும் எந்த ஒரு அரசியல் கட்சியும், தமிழ்நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகளே என்பதை உணருவதும், உணர்த்துவதும் இன்றைய அரசியல் தேவையாகும்!

தமிழ்நாட்டின் கடைக்கோடி மனிதர் வரை, இதைக்கொண்டு சேர்ப்பதே இன்றைய தலையாய, தவிர்க்கக் கூடாத அரசியல் பணியாகும்!

தமிழ்நாட்டின் எதிர்காலம் மட்டுமல்ல, சிறிய மாநிலங்களின் எதிர்காலமும், பல தேசிய இனங்களின் எதிர்காலமும் தற்போது கடுமையான ஆபத்தில் சிக்கியுள்ளது!

இந்தி மொழி வெறி, இந்து மதவெறிகளைத் தூண்டிவிடுவதோடு, வெறுப்பு நெருப்பு அணையாமல் எரிய வைத்து, நான்கு அல்லது ஐந்து மாநிலங்களின் எம்.பி தொகுதிகளை முழுமையாகக் கைப்பற்றுவதுதான் ஆர்.எஸ்.எஸ், பாஜகவின் அந்தரங்க நோக்கமாகும்!

இதன் மூலம் அனைத்து மாநிலங்களின் ஆதரவில்லாமலேயே, வர்ணாஸ்ரம அடிப்படையிலான சர்வாதிகார ஆட்சி நடத்த முடியும் என்று உறுதிபட நம்புகிறார்கள்!

அதற்காக, தொகுதி மறுசீரமைப்பு என்ற ஆயுதத்தை ஆர்.எஸ்.எஸ், பாஜக அரசு வஞ்சகமாகப் பயன்படுத்தி, குறிப்பாக தென்மாநிலங்களைத் தாக்கத் திட்டமிட்டுள்ளது!

அதற்காக அற்ப அரசியல் ஆதாயத்திற்காக மலிவாக விலை போகிற சில அரசியல் கட்சிகளை, தனது அதிகார பலத்தாலும், வரம்பற்ற பணபலத்தாலும் வளைத்துக் கொண்டன!

சமரசத்திற்கிடமின்றிக் கொள்கை வழிப்பட்டு, ஆர்.எஸ்.எஸ், பாஜகவை எதிர்க்கிற அரசியல் சக்திகள், இந்தியாவின் நாடாளுமன்ற ஜனநாயக அரசியல் அமைப்பிற்கு ஏற்படப்போகிற பேராபத்தைத் தடுத்து முறியடிக்க, மதச்சார்பற்ற, ஜனநாயக, இடதுசாரி கட்சிகள், மக்களை அரசியல் ரீதியாகப் பண்படுத்திக் கூர்தீட்ட வேண்டும் என காலம் கட்டளை இட்டுள்ளது!

காலத்தின் கட்டளையைக் காதுகொடுத்துக் கேட்டுக் களம் காணுங்கள்!

**– கே.சுப்பராயன் எம்.பி**

## ஓய்? ஓய்? ஓய்?

"They lived dangerously" (அவர்கள் அபாயத்தில் வாழ்ந்தார்கள்) என்று தோழர் மன்மதநாத் குப்தா எழுதிய ஒரு நூல் உண்டு. தமது அரசியல் பணியை ஆற்ற விடாமல் கம்யூனிஸ்டுகளைத் தடுக்க கட்சியைச் சட்டவிரோதம் என்று தடை செய்தபோதும், எந்த நேரமும் போலீசால் கைது செய்யப்படலாம், சிறையில் அடைக்கப்படலாம், பொய் வழக்குகள் புனையப்படலாம், சித்திரவதை செய்யப்படலாம், உடல் உறுப்புகள் சேதப்படுத்தப்படலாம், சிறைக்குள்ளேயே சுட்டுக் கொல்லப்படலாம், தீர்ப்புகளின் பெயரில் தூக்கு தண்டனையும் கிடைக்கலாம் என்றிருந்த நேரத்தில், கம்யூனிஸ்டுகள் எவ்வாறு பணிபுரிந்தார்கள் என்பதை விளக்கும் அற்புதமான நூல் அது!

விஜய், செங்கோட்டையன் எல்லோருக்கும் ஒய் பிரிவு பாதுகாப்பு ஏன் கொடுக்கப்படுகிறது? அப்படி என்ன இவர்களுக்குப் பெரிய ஆபத்து வந்துவிட்டது? தமது விசுவாசிகளுக்கு, சரியாகச் சொன்னால் எடுபிடிகளுக்குத் தனது படையை வைத்துப் பாதுகாப்பு தருவதுதான் அவசியமானது என்றால், தமிழ்நாடு என்ன வேறொரு நாடா? தமிழ்நாட்டு மக்களைவிட மோடி வகையறாக்கள் இவர்களைப் பற்றி எவ்வளவுக்கு அறிந்திருக்கப் போகிறார்கள்.

2021ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் இரா.முத்தரசனுக்கு போலீஸ் பாதுகாப்பு அளிக்கலாமா? என்று கேட்டார்கள்.

தோழர் முத்தரசன் "எனது மக்களோடு நான் இருக்கும் போது எனக்கு எதற்குப் பாதுகாப்பு?" என்று சொல்லி மறுத்துவிட்டார்.

ஏன், இந்தியாவின் உள்துறை அமைச்சராக இருந்த தோழர் இந்திரஜித் குப்தா, தனக்கு முன்னாலும் பின்னாலும் சைரன் வைத்த பாதுகாப்பு வண்டிகள் வருவதை நிறுத்தச் சொன்னார். இறக்கும் வரை 37 ஆண்டுகளாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அவர், அரசு விடுதியில் இருந்து நடந்தே நாடாளுமன்றத்துக்கு வந்தார். அமைச்சரான பிறகு ஒரு காவலரை ஏற்றிக்கொண்டு காரில் வர சம்மதித்தார்.

இந்த ஒய் பிரிவு பாதுகாப்பு, சம்பந்தப்பட்ட நபர்களின் நலன் கருதி கொடுக்கப்படுவதா?

வாக்கிங் போகும்போது நாயின் கழுத்தில் பெல்ட் மாட்டிக் கூட்டிச் செல்வது, நாயின் பாதுகாப்புக்கா? அல்லது தன்னை விட்டு ஓடி விடக் கூடாது என்ற பாதுகாப்புக்கா?

எனக்கு எதற்குப் பாதுகாப்பு என்று கேட்கும் துணிச்சலும் தனது மாநிலத்தின் மக்கள் மீதான நம்பிக்கையும் இந்த வீராதி வீரர்களுக்கு ஏன் இல்லை, ஓய்?

நகைக்கடன் பெறும் விவசாயிகளைப் பாதிக்கும்

## ரிசர்வ் வங்கியின் நிபந்தனைக்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கண்டனம்

வங்கிகளில் நகைக்கடன் பெறும் விவசாயிகளைப் பாதிக்கும் ரிசர்வ் வங்கியின் நிபந்தனைக்கு, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநிலத் தலைவர் எஸ்.குணசேகரன் முன் எம்எல்ஏ, பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி ஆகியோர் கூட்டாகக் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்திய ரிசர்வ் வங்கி என்பது இந்திய நாட்டின் கடைக்கோடியில் உள்ள ஏழை, நடுத்தர மக்களின் வாழ்க்கையைப் பற்றிக் கவலைப்படாத அமைப்பு என்பதை மீண்டும் நிரூபித்திருக்கிறது. இந்திய ரிசர்வ் வங்கி அண்மையில் அமல்படுத்திய புதிய கொள்கை முடிவால் விவசாயிகள், ஏழை, நடுத்தர மக்களுக்கு அவசரத் தேவைக்கு எளிதாகக் கிடைத்து வந்த நகை ஈட்டுக் கடன் தற்போது தடை விதிக்கும் நிலைக்கு வந்திருக்கிறது.

இந்தப் புதிய அறிவிப்பின்படி நகை அடமானம் வைத்துப் பெறப்பட்ட கடன் தொகையை, வட்டியுடன் ஓராண்டு முடிவில் முழுத் தொகையையும் திருப்பிச் செலுத்திடவேண்டும். இந்த நகையை மறு அடமானம் வைத்துக் கடனைப் புதுப்பிக்க முடியாது. ஏனெனில் வாங்கிய கடனுக்கான காலக்கெடு முடிந்தால், ஒரு நாள் கழித்துதான் இக்கடனைப் புதுப்பிக்க முடியும் என்ற அறிவிப்பு வந்துள்ளது. ஓராண்டுக்குள் கடன் தொகையை, வட்டியுடன் முழுமையாகச் செலுத்தியாக வேண்டும் என்று நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. இந்தக் காலக்கெடுவுக்குள் அடகு வைத்த நகையை மீட்க முடியாது போனால், அடுத்த நாளே அந்த நகையை ஏலம் விடுவதற்கான ஏற்பாட்டை வங்கிகள் தொடங்கிவிடும் என்பது வழக்கம்.

இதுவரை பெற்ற நகைக் கடனைச் செலுத்த இயலாதவர்கள், அதே நகைக் கடனைப் புதுப்பித்து, மறுகடன் பெற்று வந்தார்கள். புதிய அறிவிப்பின்படி இனி கடன் பெற முடியாது. இன்றைக்குப் பெரும் பகுதியாக வங்கிகளில் கணக்குத் தொடங்கி பரிமாற்றம் செய்பவர்கள் சாதாரண நடுத்தர மக்கள் ஆவர். சிறு வணிகம், சிறுகுறு விவசாயிகளுக்கு இவ்வங்கிகள் கடன் அளிப்பதன் மூலம் கிராமப்புறப் பொருளாதார மேம்பாட்டுக்கு ஓரளவு உதவியாக உள்ளது.

இந்நிலையில் தற்போதைய ஒன்றிய அரசு, இதே ரிசர்வ் வங்கியைப் பயன்படுத்தி, நுண்நிதி கடன் (மைக்ரோ பைனான்ஸ்) என்று தனியார் நிதி நிறுவனங்களுக்குக் கடன் கொடுத்து, கிராமப்புற மக்களின் மேம்பாட்டுக்கு உதவும் திட்டம் என அறிவித்தது. மிகக்குறைந்த வட்டிக்குக் கடன் பெற்ற நிறுவனங்கள், கூடுதல் வட்டியை வசூலித்து இந்தத் தனியார் நிறுவனங்கள் பெரு லாபம் பெற வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

இந்நிலையில்தான் ரிசர்வ் வங்கி நகைக் கடன் சலுகையை நீக்கியிருக்கிறது. ஓராண்டுக்குள் நகைக்கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்கள்... தன் நகையைப் பறிகொடுக்க வேண்டிய நிலை வந்திருக்கிறது.

எனவே, இதை மறு ஆய்வு செய்து, முந்தைய நடைமுறையையே கடைபிடிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம் என்று தங்களது அறிக்கையில் கூறியுள்ளனர்.

## சு.வெங்கடேசன் எம்பி அவர்களின் தந்தை சுப்புராம் மறைவுக்கு இரா.முத்தரசன் இரங்கல்



மதுரை நாடாளுமன்ற உறுப்பினரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநிலச் செயற்குழு உறுப்பினருமான சு.வெங்கடேசன் அவர்களின் தந்தை சுப்புராம் (வயது 79) 28.03.2025 அன்று உடல்நலக் குறைவால் காலமானார். அவருக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தோழர் சு.வெங்கடேசன் அவர்களின் பொது வாழ்வுக்குப் பக்கபலமாகவும், உறுதுணையாகவும் இருந்தவர் சுப்புராம். அவரது மறைவு கவலையளிக்கிறது. தந்தையை இழந்து வாடும் சு.வெங்கடேசன் அவர்களுக்கும், அவரது குடும்பத்தாருக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு தனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

சிவகங்கை அரசு பெண் மருத்துவர் தாக்கப்பட்டதற்கு

## சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் கண்டனம்

சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பயிற்சி மருத்துவர்களுக்குப் போதிய வசதிகளுடன் கூடிய ஓய்வறைகளை வழங்கிட வேண்டும், பாதுகாவலர்களை நியமித்துப் பாதுகாப்பையும் உறுதி செய்திட வேண்டும் என்று சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பணியில் இருந்த பெண் மருத்துவரை, அடையாளம் தெரியாத நபர் தாக்கியுள்ள நிகழ்வு கடும் அதிர்ச்சியளிக்கிறது. மருத்துவ மாணவிகளின் பாதுகாப்பில் கல்லூரி நிர்வாகம் அலட்சியத்துடன் செயல்பட்டிருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், பெண் மற்றும் ஆண் பயிற்சி மருத்துவர்கள் ஓய்வெடுப்பதற்குப் பாதுகாப்புடன் கூடிய, போதிய வசதிகள் உள்ள ஓய்வறைகளை ஏற்பாடு செய்து கொடுக்கப்படவில்லை. தற்பொழுது ஒதுக்கப்பட்டுள்ள அறைகள் பாதுகாப்பானதாக இல்லை. பாதுகாப்பு ஊழியர்களும் இல்லை. அந்த அறைகளில் கழிப்பிட வசதிகள் கூட இல்லை. இதன் காரணமாக பணியில் உள்ள பயிற்சி மருத்துவர்கள் இரவில் தங்கள் விடுதிக்குச் சென்று வரக்கூடிய சூழல் உள்ளது.

இந்நிலையில் விடுதிக்குச் சென்று கொண்டிருந்த பெண் பயிற்சி மருத்துவர் அடையாளம் தெரியாத நபரால் தாக்கப்பட்டுள்ளார். இது கடும் அதிர்ச்சியளிக்கிறது. கல்லூரி நிர்வாகத்தின் அலட்சியப் போக்கு கடும் கண்டனத்திற்குரியது. காவல்துறை உடனடியாகப் பெண் பயிற்சி மருத்துவரைத் தாக்கியவரைக் கைது செய்ய வேண்டும்.

ஆனால், இப்பிரச்சனை குறித்து தமிழ்நாடு அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை போதிய கவனம் செலுத்தவில்லை. இது கவலையளிக்கிறது. தமிழ்நாடு அரசு உடனடியாக இப்பிரச்சினையில் தலையிட வேண்டும்.

சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உட்பட, அனைத்து அரசு மருத்துவக் கல்லூரிகளின் மருத்துவமனைகளிலும், பயிற்சி மருத்துவர்கள், பட்ட மேற்படிப்பு மாணவர்கள், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள், ஊழியர்கள் ஓய்வெடுப்பதற்குப் பாதுகாப்பான, போதிய வசதிகளுடன் கூடிய ஓய்வறைகளை வழங்கிட வேண்டுமெனச் சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## ஓய்வூதியம்: ஒன்றிய அரசின் ஒருதலைப்பட்ச முடிவுக்கு ஏஐடியுசி கண்டனம்

ஓய்வூதியதாரர்கள் மீது அரசின் அலட்சியப் போக்கை எதிர்த்து களத்தில் இறங்க, ஏஐடியுசி பொதுச் செயலாளர் அமர்ஜித் கவுர் அழைப்பு விடுத்து வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு.

சமூகப் பாதுகாப்பு மற்றும் முதியோர் ஓய்வூதியம் தற்போதைய மத்திய அரசின் கொடூரமான தாக்குதலுக்கான இலக்காக மாறியுள்ளது. எந்த விவாதமும் நடத்தாமல், ஓய்வூதியதாரர்களின் நலனுக்கு எதிராக CCS (ஓய்வூதியம்) விதிகளில் நிதி மசோதாவின் பகுதி IV இல் திருத்தங்களைச் செய்து நிதியமைச்சர் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளார்.

இந்தத் திருத்தம், தற்போதுள்ள ஓய்வூதியதாரர்களை 8வது ஊதியக் குழுவின் பலன்களிலிருந்து விலக்கி, 8வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்திய பிறகு ஓய்வு பெறும் மத்திய அரசு ஊழியர்களுக்கு மட்டுமே பொருந்தும் வகையில் மாற்றுகிறது. "ஒரு பதவி ஒரு ஓய்வூதியம்" என்பது எப்போதும் ஆயுதப்படை வீரர்களின் கோரிக்கையாகும், மேலும் "கடந்த கால மற்றும் எதிர்கால ஓய்வூதியதாரர்களுக்கு இடையே சமத்துவம்" என்பது மத்திய அரசு சிவிலியன் ஓய்வூதியதாரர்களின் கோரிக்கையாகும்.

5வது மத்திய ஊதியக் குழுவும், 6வது மத்திய ஊதியக் குழுவும் கடந்த கால மற்றும் எதிர்கால ஓய்வூதியதாரர்களுக்கு இடையே சமத்துவத்தை அடைய வேண்டியதன் அவசியம் குறித்துக் குறிப்பாகப் பரிந்துரைத்துள்ளன.

தற்போதைய மற்றும் எதிர்கால ஓய்வூதியதாரர்களுக்கு இடையே சமத்துவத்தைப் பராமரிக்க 6வது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு செயல்படுத்தியது. இதேபோல், 7வது மத்திய சம்பளக் குழுவும் 01.01.2016க்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுக்கும், 01.01.2016 க்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களுக்கும் இடையில் சமத்துவத்தைப் பரிந்துரைத்தது, இருப்பினும் முழு சமத்துவம் நீட்டிக்கப்படவில்லை, அதனால் ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் நிலுவையில் உள்ள கோரிக்கையாக இது உள்ளது.

மேற்கூறியவற்றைத் தவிர, 2016 ஆம் ஆண்டு சிவில் மேல்முறையீட்டு எண்.10857 இல், உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில், திருத்தப்பட்ட ஓய்வூதியத்தை வழங்குவதற்காக 1996 க்கு முன் ஓய்வு பெற்ற ஒருவர் மற்றும் 1996 க்குப் பிறகு ஓய்வு பெற்ற மற்றொருவர் என இரண்டு வகையான ஓய்வூதியதாரர்களை உருவாக்குவதற்கு எந்தச் சரியான நியாயமும் இல்லை என்று தீர்ப்பளித்துள்ளது.

அனைத்து ஓய்வூதியதாரர்களும், ஓய்வூதிய விதிகளின்படி ஓய்வூதியம் பெற உரிமையுள்ளவர்கள். இந்திய அரசியலமைப்பின் பிரிவு 14, சட்டத்தின் முன் அனைவருக்கும் சமத்துவத்தையும் சமமான பாதுகாப்பையும் உறுதி செய்கிறது. ஒரு பகுதி ஓய்வூதியதாரர்களை மற்றவர்களை விட மாறுபட்ட பாகுபாடு உள்ளதாகக் கருதுவதற்காக வகைப்படுத்த ஒரு கட்ஆஃப் தேதி நிர்ணயிக்கப்படும் போதெல்லாம், அத்தகைய வகைப்பாடு பாகுபாட்டினைக் கொண்டுள்ளது. மேலும் ஓய்வூதியத்தைத் திருத்துவதற்கான நோக்கமும், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் ஏற்படுகிறது என்றும் உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டது. அனைத்து ஓய்வூதியதாரர்களும் ஒரே வகையினர். எனவே திருத்தப்பட்டவாறு ஓய்வூதியத்தை வழங்குவதற்கான வகைப்பாடு நியாயமற்றது, தன்னிச்சையானது, பாரபட்சமானது மற்றும் இந்திய அரசியலமைப்பின் பிரிவு 14ஐ மீறுவதாகும்.

உச்ச நீதிமன்றத்தின் மேற்கண்ட தீர்ப்பையும், முந்தைய ஊதியக் குழுக்களின் பரிந்துரைகளையும் ரத்து செய்யும் வகையில், ஓய்வூதியதாரர்களின் உரிமையைப் பறித்து துரோகம் செய்யும் வகையில், CCS (ஓய்வூதியம்) விதிகளில் திருத்தங்களை அரசாங்கம் கொண்டு வந்துள்ளது. 30 முதல் 40 ஆண்டுகள் பொது சேவைக்காக தங்கள் சேவையை அர்ப்பணித்த கோடிக்கணக்கான மூத்த குடிமக்களை மோசமாக நடத்துவது ஏற்றுக்கொள்ள முடியாதது. அரசாங்கம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தாததாலும், சுகாதாரப் பராமரிப்பு மற்றும் பிற சேவைகளைத் தனியார்மயமாக்குவதை அதிகரிப்பதாலும், மூத்த குடிமக்களுக்கான ரயில்வே சலுகையை ரத்து செய்ததாலும், அனைத்து மாவட்டங்களிலும் சிஜிஎச்எஸ் நல்வாழ்வு மையங்களை நிறுவாததாலும். எதிர்காலத்தில் ஓய்வு பெறுபவர்களுக்கு இணையாக, தற்போதுள்ள ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதிய திருத்தத்தின் பலனை வழங்குவதில்லை என்ற அரசாங்கத்தின் தற்போதைய முடிவைக் கண்டிக்க வேண்டும், எதிர்க்க வேண்டும், எதிர்த்துப் போராட வேண்டும்.

அரசாங்கத்தின் முடிவை ஏஐடியூசி கண்டிக்கிறது மற்றும் சிசிஎஸ் ஓய்வூதிய விதியில் செய்யப்பட்ட ஒருதலைப்பட்ச மற்றும் ஓய்வூதிய திருத்தங்களைத் திரும்பப் பெற பிரதமரை வலியுறுத்துகிறது. சிசிஎஸ் (ஓய்வூதிய) விதிகளில் இணைக்கப்பட்டுள்ள ஓய்வூதிய திருத்தங்களைத் திரும்பப் பெற அரசாங்கத்தை வற்புறுத்துவதற்காக அனைத்து அரசு ஊழியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் அவர்களது அமைப்புகளும் உடனடியாக எதிர்ப்பு தெரிவித்து, நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று, ஏஐடியூசி அழைப்பு விடுக்கிறது. தங்கள் அர்ப்பணிப்புள்ள சேவையின் மூலம் தேசத்திற்கும் மக்களுக்கும் சேவை செய்வதை உறுதி செய்த கோடிக்கணக்கான ஓய்வூதியதாரர்களுடன் ஏஐடியூசி நிற்கிறது என்று ஏஐடியுசி பொதுச் செயலாளர் அமர்ஜித் கவுர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

மதுரையிலிருந்து டெல்லிக்கு

## நாடாளுமன்றத்தை முற்றுகையிடச் செல்லும் ஏஐடியூசி கட்டடச் சங்கத் தோழர்கள்




மதுரையிலிருந்து தமிழ்நாடு ஏஐடியூசி கட்டடக் கட்டுமானத் தொழிலாளர்கள் சங்கத்தின் தோழர்கள் தங்களுடைய உரிமைகளை நிலைநாட்ட மத்திய அரசு அதற்குச் செவி சாய்க்கச் செய்ய டெல்லியில் உள்ள இந்திய நாடாளுமன்றத்தை முற்றுகையிட, மதுரையிலிருந்து செல்ல மதுரை ரயில் நிலையிலிருந்து புறப்பட்ட வேளையில், ஏஐடியூசி கட்டடச் சங்க தோழர்களை வாழ்த்தி வழியனுப்பும் நிகழ்வில், ஏஐடியூசி மாவட்ட தலைவர் எம்.நந்தாசிங், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.முருகன், துணைச் செயலாளர் சி.தாமஸ், தெற்குப் பகுதி துணைச் செயலாளர் எம்.பாலமுருகன் மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

# ஒன்றிய அரசே மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தை சீர்குலைக்காதே!

## தருமபுரியில் இரா.முத்தரசன் பேட்டி



◆ தருமபுரி மாவட்டக் குழு கூட்டத்தில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கலந்து கொண்டு பேசினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தருமபுரி மாவட்டக் குழு கூட்டத்தில் கலந்து கொள்ள தருமபுரிக்கு வருகை தந்தார். முன்னதாகச் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார்.

தமிழ்நாட்டில் ஒன்றிய அரசால் பல்வேறு பிரச்சினைகள் உருவாக்கப்பட்டு மக்கள் போராட்டங்ளையும், ஆர்ப்பாட்டங்களையும் செய்து வரும் நிலை தொடர்ந்து வருகிறது. குறிப்பாக கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய ஏழை, எளிய மக்கள் பெண்கள் அதிலும் குறிப்பாக விதவைப் பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் இவர்களுக்கெல்லாம் பயனளிக்கக் கூடிய வகையில் தான் சில ஆண்டுகளுக்கு முன்பு மகாத்மாகாந்தி வேலை உறுதி அளிப்புச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இது 20 ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தைச் சீர்குலைக்க பிரதமர் மோடி ஒவ்வொரு ஆண்டும் பயனாளிகளின் எண்ணிக்கையை ஏதோ ஒரு காரணம் கூறி குறைத்து வருகிறார்.தமிழ்நாட்டில் வேலை செய்த பயனாளிகளுக்குக் கொடுக்க வேண்டிய தொகை ரூ.4,034 கோடி பணத்தை ஒன்றிய அரசாங்கம் கொடுக்க வேண்டும். அனைத்து மாவட்டங்களிலும் பயனாளிகள் கடும் நெருக்கடிக்கு ஆளாகி இருக்கிறார்கள்.

இது குறித்து முதலமைச்சர் பலமுறை ஒன்றிய அரசாங்கத்திற்குக் கடிதம் அனுப்பி இருக்கிறார். மாநில நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நேரடியாகவே சென்று கடிதம் கொடுத்து முறையிட்டிருக்கிறார்.

ஆனால், பணம் வந்தபாடு இல்லை. அதனால் ஆங்காங்கே போராட்டங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. வரும் ஏப்ரல் 1ந் தேதி தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் அனைத்துமாவட்ட, ஒன்றிய தலைநகரங்களில் விவசாயத் தொழிலாளருடைய போராட்டம் தீவிரமாக நடைபெற்றுள்ளது.

கல்வி நிதி ரூ.2152 கோடியை தேசியக் கல்விக் கொள்கை ஏற்றுக்கொண்டால்தான் கொடுப்பேன். இல்லை என்றால் கொடுக்க முடியாது என்று ஒன்றிய கல்வி அமைச்சர் கூறுகிறார். இப்படிச் சொல்வது என்பது ஜனநாயகம் அல்ல. ஒரு கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தால் அது ஏற்க வேண்டும் என்று நிர்பந்திக்கக் கூடாது. புதிய கல்வி முறை என்பது தமிழக மாணவர்களை மிகக் கடுமையாகப் பாதிக்கக்கூடிய முறை ஆகும். அதோடு தமிழ்நாட்டில் தொடர்ந்து பின்பற்றி வரக்கூடிய இருமொழிக் கொள்கைக்கு எதிரானது. இந்த வஞ்சிக்கிற போக்கு மிக மிக மோசமான கண்டனத்திற்குரியது.

சட்டீஸ்கர் உள்ளிட்ட வடமாநிலங்களில் நக்சலைட்டுகள் என்கிற பெயரால் அப்பாவி மக்கள் மிக பயங்கரமான முறையில் மிக மோசமான முறையில் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். ஒரு வாரத்தில் மட்டும் 30 பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அதற்கு முன்பு 30 பேர் கூட்டங்கூட்டமாகச் சுட்டுக் கொள்ளப்படுகிறார்கள். 2031 மார்ச் 31 க்குள் நக்சலைட்டுகள் ஒட்டு மொத்தமாக அழிக்கப்படுவார்கள் என்று உள்துறை அமைச்சர் அறிவிக்கிறார். இத்தகைய செயல் கண்டிக்கத்தக்கது.

தூய்மைப் பணியாளர்கள், டேங்க் ஆபரேட்டர்கள், டாஸ்மாக் பணியாளர் நிரந்தரப்படுத்த வேண்டும் என்று கோரி தொடர்ந்து போராட்டம் நடைபெறுகிறது. அவர்கள் மட்டுமல்ல அரசு துறையில் ஒன்றிய அரசாங்கமாக இருக்கட்டும், மாநில அரசாங்கமாக இருக்கட்டும் இப்பொழுது எந்தத் துறைக்கும் காலி யிடங்களைப் பூர்த்தி செய்வது இல்லை. அவ்வாறு காலியிடங்கள் இருந்தால், அதற்கு நியமனம் செய்யப்பட்டால் தற்காலிகப் பணியாளர்களாக நியமனம் செய்யப்படுகிறார்கள். அரசு துறையே இப்படி இருந்தால் தனியார் துறை எப்படி இருக்கும் என்கிற கேள்வி எழுகிறது.

ஒன்றிய அரசு தேசியப் பேரிடரால் ஏற்டும் பாதிப்புகளுக்குத் தேசியப் பேரிடர் நிவாரண நிதி வழங்குவதில்லை.

தமிழ்நாடு அரசு கேட்ட ரூ.37 ஆயிரம் கோடியை இதுவரை வழங்கவில்லை. இது கண்டனத்துக்குரியது.

வக்பு வாரியச் சட்டத்தில் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த திருத்தங்களை நாடாளுமன்ற கூட்டுக்குழு ஏற்காமல் கொண்டுவர ஏற்பாடு செய்கிறார்கள். பொது சிவில் சட்டத்தை நிறைவேற்றத் துடிக்கிறார்கள். இது அச்சத்தையும், கலக்கத்தை ஏற்படுத்துகிறது. ஏற்கெனவே அரசியல் அமைப்புச் சட்டங்கள்படிதான் அரசு இயங்கி வருகிறது.

சுங்கச்சாவடிகளைப் படிப்படியாகக் குறைத்து, இறுதியில் சுங்கச்சாவடிகளை இல்லாமல் செய்ய வேண்டும். மாறாகக் கட்டணம் உயர்த்துகிறார்கள். விலைவாசி உயர்வுக்கு இதுவும் ஒரு காரணம். எனவே, இதை ரத்து செய்ய வேண்டும்.

நீட் நுழைவுத் தேர்வால் செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த தேவதர்ஷினி என்கிற மாணவி பலமுறை நீட் தேர்வு எழுதி வெற்றி பெறாத காரணத்தால் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார். எனவே, முறையாக இல்லாத நீட்தேர்வு ரத்து செய்யப்பட வேண்டும்.

அதே மாதிரி ரிசர்வ் வங்கி பல்வேறு புதிய நிபந்தனைகளை விதித்துச் சாதாரண மக்கள், ஏழைகள், விவசாயிகள் கடுமையான நெருக்கடிக்கு உள்ளாக்குகிறார்.

இவ்வாறு கூறினார்.

பேட்டியின் போது மாநில துணைச் செயலாளர் ந.பெரியசாமி, மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.தேவராசன், மாவட்டச் செய்லாளர் எஸ்.கலைச்செல்வம் உடனிருந்தனர்.

## கொள்கை வழிப்பட்ட ஒற்றுமை தேவை!

### சிபிஎம் கட்சி பேராயத்தில் டி ராஜா வாழ்த்து!

இந்திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சியின் 24 ஆவது கட்சி பேராயம் மதுரையில் 2 4 2025 தொடங்கியது. அதனை வாழ்த்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி ராஜா உரையாற்றினார்.

“இந்தியா இன்று ஒரு முறிவுக் கட்டத்தில் உள்ளது. பாஜகஆர்எஸ்எஸ் ஆட்சியின் கீழ் வர்க்கம், சாதி மற்றும் ஆணாதிக்கத்தின் கட்டமைப்பு ஒடுக்குமுறைகள் கொடூரமாகிவிட்டன. இந்தியா மோசமான அரசு நிர்வாகத்தால் மட்டும் பாதிக்கப்பட்டு இருப்பதோடு மட்டுமல்ல; சுரண்டுவதற்காகவே



நன்கு வடிவமைக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனத்தின் கீழ் இந்தியா மூச்சுத் திணறிக் கொண்டிருக்கிறது”

“தற்போதைய சூழ்நிலையை எதிர்கொள்ளும் திறத்தோடு கம்யூனிஸ்டுகளாகிய நாம் எழ வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இந்த கார்ப்பரேட் பெரு முதலாளிய, வகுப்புவாத தாக்குதலுக்கு எதிராக ஒரு தீர்க்கமான எதிர்ப்பை ஏற்படுத்த அனைத்து கம்யூனிஸ்டுகளும் இடதுசாரி சக்திகளும், கொள்கை ரீதியான ஒற்றுமையை உருவாக்கியே தீர வேண்டும். நாம் தான் குரலற்றவர்களின் குரலாகவும், அமைப்பாய் திரள இயலாதவர்களின் அமைப்பாளர்களாகவும், நம்பிக்கை யிழந்தவர்களின் நம்பிக்கையாகவும் இருக்க முடியும்.”

## கட்சியின் நூற்றாண்டு விழா கபாடி போட்டி



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழா, மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு நூற்றாண்டு விழாவை முன்னிட்டுக் கட்சியின் அரக்கோணம் பாராஞ்சி கிளை சார்பாக மாநில அளவிலான கபாடி போட்டி நடைபெற்றது. இதில் தமிழ்நாடு முழுவதும் இருந்து 45க்கும் மேற்பட்ட அணிகள் பங்கேற்றன.

போட்டியினைக் கட்சியின் வேலூர் மாவட்டச் செயலாளர் ஜி.லதா எக்ஸ் எம்எல்ஏ தொடங்கி வைத்தார். மாநிலக் குழு உறுப்பினர் எல்.மணி வாழ்த்துரை வழங்கினார். இளைஞர் பெருமன்ற மாநிலச் செயலாளர் க.பாரதி, மாணவர் பெருமன்ற மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் ஆ.மணிகண்டன் நூற்றாண்டுப் பதக்கங்களை அணிவித்து உரையாற்றினார்கள்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அரக்கோணம் ஒன்றியப் பெருந்தலைவர் நிர்மலா சௌந்தர், அதிமுக வழக்கறிஞர் பிரிவு மாவட்டப் பொருளாளர் குட்டி பாலு, தி.மு.க ஆதி திராவிடர் அணி மாவட்டத் துணை அமைப்பாளர் வெ.விவேக், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஸ்ரீ வள்ளி வேலு, ஊராட்சி மன்ற தலைவர் ரவி, ச.அனுலா, வி.விஜி, ஆ.சிலம்பரசன், அப்பு பிரதர்ஸ் ஆகியோர் பரிசு வழங்கினார்கள். கட்சியின் பாராஞ்சி கிளைச் செயலாளர் ஆ.பிரகாஷ், கார்த்தி, பொன்னரசன், பிருந்தா, காந்திமதி உள்ளிட்ட தோழர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

## சுங்கச் சாவடிகளில் கட்டண உயர்வைத் திரும்பப் பெற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளார் இரா.முத்தரசன் வெளி யிட்டுள்ள அறிக்கை:

ஒன்றிய அரசு நவ தாராளமயக் கொள்கையை ஏற்று, தனியார்மயத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தி வருகின்றது. இதன் ஒரு பகுதியாக நான்கு வழி, ஆறு வழி மற்றும் எட்டு வழிச் சாலைகள் என்ற கட்டமைப்புத் திட்டங்கள் தனியார் வசம் கட்டுதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் (பிஓடி) திட்டத்தின் கீழ் ஒப்படைத்து, அவர்களுக்குச் சுங்கச் சாவடிகள் அமைத்துக் கட்டணம் வசூலிக்கும் உரிமையை வழங்கியுள்ளது. இப்படிச் சுங்கச் சாவடிகளில் வசூலிக்கப்படும் கட்டணம் ஆண்டுக்கு இருமுறை உயர்த்தப்பட்டு வருகின்றது. இந்த முறையில் 01.04.2025 அன்று முதல் தமிழ்நாட்டில் உள்ள 46 சுங்கச் சாவடிகளில் 3 முதல் 12 சதவீதம் வரை உயர்த்தப்பட்ட கட்டணம் வசூலிக்கப்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டில் புதிதாக 12 சுங்கச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

சாலை அமைப்புத் திட்டத்தில் தனியார் நிறுவனம் முதலீடு செய்துள்ள தொகைக்கு எத்தனை ஆண்டுகள் சுங்க வசூலிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. கட்டண உயர்வு செய்வதை அனுமதிப்பதால் சுங்கம் வசூலிக்கும் காலம் குறையுமா? பிஓடி, பிபிபி திட்டங்களில் அமைக்கப்படும் சாலைகள் எந்த ஆண்டு அரசுடைமையாகும்? என்பது போன்ற வினாக்கள் எழுகின்றன. இவற்றில் அரசின் நடவடிக்கை வெளிப்படையாக அமையவில்லை. கடந்த 2019 முதல் 2024 மார்ச் முடிய ரூபாய் 15 ஆயிரத்து 414 கோடி சுங்கக் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது. ஆண்டுக்குச் சராசரியாக ரூ.3000 கோடிக்கும் அதிகமாக வசூலிக்கப்படும் சுங்கக் கட்டணத்தில், மேலும் மூன்று முதல் 12 சதவீதம் சுங்கக் கட்டணம் உயர்த்தப்பட்டிருப்பது சட்டபூர்வ கொள்ளையாகும்.

இதன் காரணமாக தமிழ்நாட்டில் பெரிய, சிறிய வாகனங்கள், குறிப்பாக பொருள் போக்குவரத்து வாகனங்கள் செலுத்தும் கட்டணம் உயர்ந்து வருகிறது. கடந்த 2022 ஆம் நிதியாண்டில் வசூலிக்கப்பட்ட சுங்கக் கட்டணம் 2023 ஆம் நிதியாண்டில் 41 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. இது தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில் இனி நாளொன்றுக்கு மூன்று கோடி ரூபாய் சுங்கக் கட்டணம் செலுத்த வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. இதன் விளைவாக அத்தியாவசிய உணவுப் பண்டங்கள் உட்பட அனைத்துப் பொருட்களின் விலைகளும் உயர்ந்து மக்கள் தலையில் சுமையாக விழுவது பற்றிக் கவலைப்படாத பாஜக ஒன்றிய அரசு, இதன் மூலம் பெரும் குழும நிறுவனங்களின் லாபம், மேலும் லாபம் பெறுவதை ஆதரித்து நிற்கிறது.

ஒன்றிய அரசின் மக்கள் விரோதச் சுங்கக் கட்டண உயர்வுக்கு, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு வன்மையாகக் கண்டனம் தெரிவிப்பதுடன், அறிவிக்கப்பட்ட கட்டண உயர்வைத் திரும்பப் பெற வேண்டும் என ஒன்றிய அரசையும், தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# பெல்லாரி குலுங்க எழுச்சியோடு நடந்த ஏஐஒய்எப் கர்நாடகா மாநில மாநாடு!



அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற கர்நாடகா மாநில 11வது மாநாடு, மார்ச் 23, 24 ஆகிய நாட்களில் பெல்லாரி நகரில் எழுச்சியோடு நடைபெற்றது.

முதல் நாள் ஆயிரக்கணக்கான இளைஞர்கள், இளம்பெண்கள் கலந்து கொண்ட பேரணி நடைபெற்றது. பேரணியை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் சாத்தி சுந்தரேஷ் துவக்கி வைத்தார்.

பேரணியின் நிறைவில் நடந்த பொதுக்கூட்டத்துக்கு கர்நாடகா மாநிலத் தலைவர் ஹரிஷ் பாலா தலைமை வகித்தார். மாநாட்டு வரவேற்புக் குழு தலைவர் நாகபூஷண்ராவ் வரவேற்புரை ஆற்றினார். கட்சியின் ஆந்திர மாநிலச் செயலாளர் ராமகிருஷ்ணா உரை நிகழ்த்துகையில் இளைஞர்களின் வேலையின்மை நிலைக்கு ஒன்றிய, மாநில அரசுகளின் தவறான கொள்கைகள்தான் காரணம் என்று குற்றம் சாட்டினார். கட்சியின் கர்நாடகா மாநிலச் செயலாளர் சாத்தி சுந்தரேஷ், துணைச் செயலாளர் அம்ஜத் ஆகியோர் உரையாற்றினர்.

மாநாட்டின் இரண்டாம் நாள் ஹொசத்து இலக்கிய இதழின் ஆசிரியரும், கட்சியின் மூத்த தலைவருமான சித்தன்ன கவுடா பாடில் கருத்துரை வழங்கினார். பிரதிநிதிகள் அமர்வில் பெங்களூரு, பெல்லாரி, கோலார், தாவணகரே, விஜயநகரம், ஹாசன், குடகு, சித்திரதுர்கா, மைசூரு மாவட்டங்களில் இருந்து 52 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். முடிவில், மாநில ஒருங்கிணைப்புக் குழு தேர்வு செய்யப்பட்டு சந்தோஷ் ஒருங்கிணைப்பாளராகத் தேர்வு செய்யப்பட்டார்.

# சுய உதவிக் குழு பெண்கள் சார்பில் மகளிர் தின விழா



திருச்சி மாநகராட்சி வார்டு எண் 23ல் இயங்கி வரும் சுய உதவிக் குழுக்கள் சார்பில் சர்வதேச மகளிர் தின மார்ச் 22ல் காலை 10 மணி அளவில் தலைவி அகிலா தலைமையில் நடைபெற்றது. மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ்குமார் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று வருகைதந்த மகளிர் அனைவருக்கும் பரிசுகள் வழங்கினார். சமுதாய அமைப்பாளர் நீலாவதி சமுதாய வளப் பயிற்றுநர் தனலட்சுமி வேதா நிறுவன மேற்பார்வையாளர் விமல் உள்ளிட்டோர் பங்கேற்று மகளிருக்கான பல்வேறு திட்டங்கள், பயிற்சிகள் குறித்து உரையாற்றினர்.

# சாதி வன்கொடுமையால் தாக்கப்பட்ட தேவேந்திர ராஜாவைச் சந்தித்துத் தலைவர்கள் ஆறுதல்



தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் அருகே, 11 ம் வகுப்பு பள்ளி மாணவன் அரியநாயகபுரம் கிராமத்தைச் சார்ந்த தேவேந்திர ராஜாவை, பேருந்தில் இருந்து இறக்கி, கொடூரமான முறையில் அரிவாளால் வெட்டி விரல்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மாணவன் தேவேந்திர ராஜாவை 27.03.2025 அன்று பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க தேசியச் செயலாளர் டி.லெனின், கட்சியின் நெல்லை மாவட்டச் செயலாளர் ஆர்.சடையப்பன், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆர்.ரெங்கன், எஸ்.ஏ.பி.பாலன், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க தென்மண்டலப் பொறுப்பாளர் மா.பெ.சுகுமாரன், கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர் லெனின் முருகானந்தம், வங்கி ஊழியர் சங்கம் ஆர்.மகாலிங்கம், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க தேசியக் குழு உறுப்பினர், வழக்கறிஞர் கிருஷ்ணன் ஆகியோர் நேரில் சென்று ஆறுதல் தெரிவித்தனர்.

# கட்சிக் கல்வி முகாம்



◆ கோபி சி.எஸ்.எஸ் அரங்கில் இயங்கிவரும், மார்க்சிய மெய்யறிவு கல்வி நிலையத்தில், விருதுநகர் மாவட்டக் குழு தோழர்களுக்கான கட்சிக் கல்வி முகாமை இரா.முத்தரசன் தொடங்கி வைத்தார்.

◆ கோபி சி.எஸ்.அரங்கில் உள்ள மார்க்சிய மெய்யறிவு கல்வி நிலையத்தில், மார்ச் 17, 18, 19 ஆகிய மூன்று நாட்களும் தருமபுரி மாவட்டக் குழு உறுப்பினர்களுக்கான கட்சிக் கல்வி முகாம் நடைபெற்றது. முகாமின் நிறைவில், மாநிலச் செயற்குழு உறுப்பினர் திருப்பூர் எம்.ரவி, முதல்வர் எம்.செல்வராஜ், தருமபுரி மாவட்டச் செயலாளர் கலைச் செல்வன் ஆகியோர் சான்றிதழ்களை வழங்கினர்.

# ஏஐடியுசி போக்குவரத்துச் சங்க ஆண்டுப் பேரவை

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொழிலாளர் சங்கத்தின் 41வது ஆண்டுப் பேரவை, தஞ்சாவூர் ஏஐடியுசி அலுவலகத்தில், மத்திய சங்கத் தலைவர் என்.சேகர் தலைமையில் நடைபெற்றது. ஏஐடியுசி மாவட்டத் தலைவர் வெ.சேவையா கொடி ஏற்றி வைத்தார். துணைத் தலைவர் டி.சந்திரன் வரவேற்றுப் பேசினார். அஞ்சலித் தீர்மானத்தைச் செயலாளர் எம்.தமிழ்மன்னன் வாசித்தார். ஏஐடியுசி மாநிலச் செயலாளர் ஆர்.தில்லைவனம் பேரவையைத் துவக்கி வைத்து உரையாற்றினார். சங்கத்தின் பொதுச்செயலாளர் எஸ்.தாமரைச்செல்வன் வேலை அறிக்கை முன்வைத்தார்.

பேரவையில் தலைவராக என்.சேகர், பொதுச் செயலாளராக எஸ்.தாமரைச்செல்வன், பொருளாளர் சி.ராஜமன்னன், துணைத் தலைவர்களாக டி.சந்திரன், ஆர்.ரங்கதுரை, டி.சீனிவாச தினேஷ், துணைச் செயலாளர்களாக எம்.ஆர்.வீரையன், எம்.தமிழ்மன்னன், என்.ராஜேஷ்கண்ணன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். போக்குவரத்துத் தொழிலாளர் சம்மேளனத்தின் மாநிலப் பொருளாளர் கே.நேருதுரை பேரவையை நிறைவு செய்து உரையாற்றினார்.

# கலை இலக்கியப் பெருமன்றம் புதுச்சேரி மாநிலக் குழு கூட்டம்

புதுச்சேரி மாநிலக் கலை இலக்கியப் பெருமன்றம் மாநிலக் குழு கூட்டம் 24.3.2025 அன்று நடைபெற்றது. மேனாள் பொதுச்செயலாளர் தஞ்சைப் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறை தலைவர் முனைவர் இரா. காமராசு பங்கேற்றுச் சிறப்பித்தார்.

# பட்டுக்கோட்டை அழகிரி 76 வது ஆண்டு நினைவேந்தல்

சுயமரியாதை இயக்கத்தின் முன்னோடியும், பகுத்தறிவுச் சிந்தனையாளரும், பெரியாரின் போர்ப்படைத் தளபதியாக விளங்கிய அஞ்சா நெஞ்சன் என்று அழைக்கப்பட்ட, பட்டுக்கோட்டை அழகிரிசாமி 76 வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி, இடதுசாரிகள் பொது மேடை சார்பில், தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையத்தில் நடைபெற்றது. இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் வெ.சேவையா, மாநகரச் செயலாளர் ஆர்.பி.முத்துக்குமரன், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட தலைவர் அழகு.தியாகராஜன் உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர்.

# அறிவியல் அடிப்படையில் குறைந்தபட்ச ஊதியம் குறித்த தமிழ்நாடு ஏஐடியுசி பயிலரங்கம்




தமிழ்நாடு ஏஐடியுசி சார்பில் அறிவியல் அடிப்படையில் குறைந்தபட்ச ஊதியம் குறித்த இரண்டு நாள் பயிலரங்கம், சென்னையில் ஏஐடியுசி அலுவலகம் ஏ.எம்.கோபு அரங்கில், 2025 மார்ச் 22, 23 தேதிகளில், தமிழ்நாடு ஏஐடியுசி தலைவர் எச்.காசி விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றது. ஏஐடியுசி தேசிய துணைத் தலைவர் கே.சுப்பராயன் எம்பி துவக்கி வைத்தார். தமிழ்நாடு ஏஐடியுசி செயலாளர் ஆ.பாஸ்கர் வரவேற்றார்.

சட்டமும் அறிவியல் அடிப்படையிலான குறைந்த பட்ச ஊதியமும், தமிழ்நாட்டில் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயமும், நமது பங்களிப்பும் எனும் தலைப்பில் ஏஐடியுசி தேசியச் செயலாளர் டி.எம்.மூர்த்தி, அறிவியல் அடிப்படையிலான குறைந்த பட்ச ஊதியம் இன்றைய முன்னெடுப்பின் அவசியம் என்னும் தலைப்பில் தேசியச் செயலாளர் வஹிதா நிஜாம், தமிழ்நாட்டில் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்ட தொழில்கள், நாம் செய்ய வேண்டியது என்ன? என்னும் தலைப்பில் தமிழ்நாடு ஏஐடியுசி பொதுச் செயலாளர் ம.இராதாகிருஷ்ணன் ஆகியோர் பேசினர்.

நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியத்தை அமலாக்கச் செய்வதற்கும், அறிவியல் அடிப்படையில் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கச் செய்வதற்கும் களத்தில், குறைந்தபட்ச ஊதிய நிர்ணயக் குழுக்களில், குறைந்தபட்ச ஊதிய நிர்ணய ஆலோசனை வாரியங்களில், சட்டப் போராட்டங்களில் என்ன செய்யப்போகிறோம் என்பது குறித்து விரிவான கலந்துரையாடல் மூலம் செயல் திட்டம் உருவாக்கப்பட்டது. மாவட்டங்களில் குறைந்தபட்ச ஊதியம் அமலாக்கத்திற்கான களப்பணியாற்றக்கூடிய தேர்வு செய்யப்பட்ட தோழர்கள் இக்கருத்தரங்கில் பங்கேற்றனர்.

# ஓட்டுநர் நடத்துநர் பணிகளுக்கு நிபந்தனை விதிப்பதைக் கைவிட வேண்டும்

## போக்குவரத்துத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்




தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொழிலாளர் சங்கம் ஏஐடியுசி சார்பில், ஓட்டுநர், நடத்துநர் பணிகளுக்கு இரண்டு உரிமங்கள் வைத்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையை தமிழ்நாடு அரசு கைவிட வலியுறுத்தி, தஞ்சாவூர் ஜெபமாலைபுரம் நகரக் கிளை முன்பு, சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ்.தாமரைச்செல்வன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், மாநில துணைத் தலைவர் துரை.மதிவாணன், மத்திய சங்கத் தலைவர் என்.சேகர், பொருளாளர் சி.ராஜமன்னன், சிஐடியு மத்திய சங்கப் பொருளாளர் எஸ்.ராமசாமி ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினார்கள். முடிவில் சங்கத்தின் துணைச் செயலாளர் எம்.தமிழ் மன்னன் நன்றி கூறினார்.

# தலித் மக்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித்து ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் ஆர்ப்பாட்டம்



தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் தூத்துக்குடி மாவட்டக் குழு சார்பில், கோவில்பட்டி பசுவந்தனை சாலையில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளி எதிரே, தலித் மக்கள் மீதான வன்முறைத் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த வலியுறுத்தி, இயக்கத்தின் மாவட்ட தலைவர் பாபு தலைமையில், மாவட்டச் செயலாளர் முத்துலட்சுமி முன்னிலையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தேசியச் செயலாளர் டி.லெனின், மாவட்டப் பொறுப்பாளர் சுகுமாறன், அகில இந்திய தலித் உரிமைகள் இயக்கம் தேசியக் குழு உறுப்பினர் கிருஷ்ணன், கட்சியின் மாவட்டச் செயலாளர் கரும்பன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

## உறையூர் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி ஆண்டு விழா



திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உறையூர் கிழக்கு நடுநிலைப்பள்ளி ஆண்டு விழா, பள்ளி வளாகத்தில் வட்டாரக் கல்வி அலுவலர் ஜோசப் அந்தோணி தலைமையில், வட்டாரக் கல்வி அலுவலர் அர்ஜுன் முன்னிலையில் நடைபெற்றது.

விளையாட்டுப் போட்டி, செயல்திறன் போட்டியில் பங்கேற்றவர்களுக்கான பரிசுகளை வழங்கி மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ்குமார் சிறப்புரையாற்றினார்.

## கண்ணியத்துடன் கூடிய வாழ்க்கை பெண்களின் பிறப்புரிமை

### மகளிர் தினக் கருத்தரங்கில் வலியுறுத்தல்



இந்திய மாதர் தேசிய சம்மேளனம் சார்பில், ஈரோடு வடக்கு மாவட்டம், சத்தியமங்கலத்தில் மாவட்டச் செயலாளர் கா.மல்லிகா வாசு தலைமையில், சர்வதேச உழைக்கும் மகளிர் தினத்தை முன்னிட்டு, கண்ணியத்துடன் கூடிய வாழ்க்கை பெண்களின் பிறப்புரிமை என்ற கருத்தரங்கம் நடைபெற்றது.

மாதர் சம்மேளனப் பொறுப்பாளர் தீரா.தேன்மொழி வரவேற்புரை ஆற்றினார். மாநில துணைச் செயலாளர் பி.நதியா, கலை இலக்கியப் பெருமன்றம் எழுத்தாளர் ஜீவா, சம்மேளனத்தின் மாநிலக் குழு உறுப்பினர் எம்.ராணி, சத்தியமங்கலம் நகர்மன்ற தலைவர் ஆர்.ஜானகி ராமசாமி ஆகியோர் கருத்துரையாற்றினர். இதில் மாதர் சம்மேளனப் பொறுப்பாளர்களான பூங்கொடி, ஜீவா, சித்ரா, சுகன்யா, பாப்பா, ஜெயந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மாதர் சம்மேளனப் பொறுப்பாளர் ஜெ.லட்சுமி நன்றி கூறினார்.

## இயக்குநர் பாரதிராஜாவை நேரில் சந்தித்து இரா.முத்தரசன் ஆறுதல்

இயக்குநர் பாரதிராஜாவின் மகனும், நடிகருமான மனோஜ் மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார். 27.03.2025 அன்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் இயக்குநர் பாரதிராஜா அவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார். அவருடன் கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், அரிசி பட இயக்குநர் எஸ்.ஏ.விஜயக்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

## இந்தியக் கலாச்சார நட்புறவுக் கழக வடசென்னை மாவட்டப் பேரவைக் கூட்டம்




இந்தியக் கலாச்சார நட்புறவுக் கழகத்தின் வடசென்னை மாவட்ட பேரவைக் கூட்டம், 23.03.2025 அன்று கொடுங்கையூரில் நா.வசந்தபாரதி தலைமையில் நடைபெற்றது. மாநிலப் பொதுச் செயலாளர் எஸ்.ராதாகிருஷ்ணன் துவக்கவுரை ஆற்றினார். இஸ்கப் மாநிலப் பொறுப்பாளர் மு.வீரபாண்டியன், மாநில துணைப் பொதுச் செயலாளர் எஸ்.அசோக் குமார், ரதன் சந்திரசேகர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாநில துணைப் பொதுச் செயலாளர் த.இந்திரஜித் நிறைவுரை ஆற்றினார். எஸ்.ஜீவா நன்றியுரை ஆற்றினார். ஒருங்கிணைப்பாளராக நா.வசந்த பாரதி உள்ளிட்ட 11 பேர் கொண்ட அமைப்புக் குழு உருவாக்கப்பட்டது.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழா

**திருச்சுழி நரிக்குடி:** கட்சியின் நூற்றாண்டு விழா, தோழர் ஆர்.நல்லகண்ணு நூற்றாண்டு விழா மற்றும் திருச்சுழி நரிக்குடி ஒன்றிய நிதியளிப்புப் பேரவைக் கூட்டம், விருதுநகர் மாவட்டம் கல்லூரணியில் திருச்சுழி நரிக்குடி ஒன்றியச் செயலாளர் செல்வம் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் பி.லிங்கம், மாவட்டத் துணைச் செயலாளர் செந்தில்குமார், ஒன்றிய துணைச் செயலாளர் பெரியணன், விவசாயச் சங்க மாவட்ட தலைவர் சங்கரபாண்டி, ஒன்றியப் பொருளாளர் ஜீவானந்தம், மாவட்டக் குழு உறுப்பினர் தங்கராஜ், இளைஞர் பெருமன்ற மாவட்டப் பொருளாளர் அருண் சிங் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

**இராமேஸ்வரம்:** கட்சியின் நூற்றாண்டு விழா பேரவை ராமேஸ்வரத்தில், கட்சியின் நகரச் செயலாளர் சி.ஆர். செந்தில்வேல் தலைமையில் நடைபெற்றது.



எம்.பிச்சை, எம்.அந்தோணிபீட்டர் முன்னிலையில், ஜி.பாண்டி வரவேற்புரை ஆற்றினார். இதில் சிபிஐ தேசியக் குழு உறுப்பினர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டி.இராமசாமி, மாவட்டச் செயலாளர் என்.எஸ்.பெருமாள், ஏஐடியூசி மாவட்டப் பொதுச் செயலாளர் என்.கே.ராஜன், சிபிஐ மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.முருகானந்தம், மாதர் சம்மேளன மாவட்டச் செயலாளர் பி.வடகொரியா, இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் லெ.வெங்கடேசன், ஏஐடியூசி என்.ரமணி, ஆட்டோ சங்க மாநிலத் துணைச் செயலாளர் பி.ஜீவானந்தம், ஆட்டோ சங்க மாவட்டச் செயலாளர் செந்தில் உட்பட நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

**சின்னசேலம்:** கட்சியின் நூற்றாண்டு விழா பேரவைக் கூட்டம் சின்னசேலம் ஒன்றியக் குழு சார்பாக வடக்கனந்தல் பேரூராட்சியில், கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் இரா.கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் கிருஷ்ணன் நகரச் செயலாளர் பி.கிருஷ்ணன் வரவேற்புரை ஆற்றினார்.



பெரியசாமி, சிவராமன், வீரமுத்து முனியம்மாள், சாந்தி, பிச்சைக்காரன், இளையராஜா ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கட்சியின் மாவட்டச் செயலாளர் கே.ராமசாமி மற்றும் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.கலியபெருமாள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாத்தூர் கிளைச் செயலாளர் முருகேசன் நன்றி கூறினார்.

## பராரி திரைப்படம் திரையிடல் மற்றும் கலந்துரையாடல்



23.03.25 காலை 10 மணிக்கு, இராஜபாளையம் முத்து பவள விழா மஹாலில் த.க.இ.பெருமன்ற திருவண்ணாமலை மாவட்டச் செயலாளர் திரைப்பட இயக்குநர் எழில் பெரிய வேடி இயக்கிய பராரி திரைப்படம் திரையிடப்பட்டு, திரைப்பட நடிகர் மதியழகன் மற்றும் இயக்குநர் எழில் ஆகியோருடன் கலந்துரையாடல் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு ஏஐஒய்எப் மாவட்டச் செயலாளர் பகத்சிங் தலைமை வகித்தார். த.க.இ.பெ கண்மணிராசா வரவேற்புரை வழங்கினார். முன்னாள் எம்.எல்.ஏ தி.இராமசாமி, முன்னாள் எம்.பி பி.லிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

த.க.இ.பெ கவிஞர்.ஆனந்தி, த.மு.எ.க.ச நந்தன் கனகராஜ், திராவிடர் கழகம் பெரியார் குமார், சிபிஐ வி.ரவி, கவிஞர். நாகா, ஏஐஒய்எப் ஜி.ராமசுப்பு, த.க.இ.பெ ராமையா, த.க.இ.பெ நித்யா கணேஷ், த.மு.எ.க.ச மைதிலி கல்யாணி ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்கள். சிபிஐ நகரச் செயலாளர் பி.கே.விஜயன் நன்றியுரை நல்கினார்.

23.03.25 மாலை 04.30 மணிக்கு எட்டயாபுரம், பாரதி முற்போக்கு வாலிபர் சங்கக் கட்டிடத்தில் நடந்த திரைப்பட நிகழ்வில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாநிலப் பொதுச்செயலாளர் மரு.த.அறம்., பாரதி முற்போக்கு வாலிபர் சங்கத் தலைவர் வெங்கடேஷ் ராஜா, பாரதி முற்போக்கு வாலிபர் சங்கச் செயலாளர் பாலமுருகன் மற்றும் பலர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்கள்.

24.03.25 அன்று சாத்தூர் தனுஷ்கோடி மருத்துவமனை வளாகத்தில் உள்ள தனுஷ்கோடி அரங்கத்தில் மாலை 04.30 மணிக்கு நடந்த திரைப்பட நிகழ்வில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாநிலப் பொதுச்செயலாளர் மரு.த.அறம்., சமம் அறக்கட்டளை காமராஜ், குறும்பட இயக்குநர் முத்து, த.க.இ.பெருமன்ற கிளைச் செயலாளர் கு.கணேசன், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம், விருதுநகர் மாவட்டச் செயலாளர் பழனிக்குமார், வி.சி.க விருதுநகர் மைய மாவட்டச் செயலாளர் இ.சந்திரன், கலிங்கல் சுவாமிநாதன் மற்றும் பலர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்கள்.

25.03.25 அன்று திண்டுக்கல் அனுகிரகா சமூகவியல் கல்லூரி, காட்சி ஊடகவியல் துறை அரங்கத்தில் காலை 10.30 மணிக்கு நடந்த திரைப்பட நிகழ்வில் அனுகிரகா சமூகவியல் கல்லூரியின் உதவிப் பேராசிரியர் அஜய்குமார் வரவேற்புரையாற்றினார். அனுகிரகா சமூகவியல் கல்லூரியின் முதல்வர் அருள்முனைவர் சே.ஜார்ஜ் பெர்னாட்ஷா தலைமை வகித்தார்.

இந்நிகழ்வில் அனுகிரகா சமூகவியல் கல்லூரி செயலர் அருள்முனைவர் ஜெ.ஜான் பிரிட்டோ, கல்லூரி நிதி நிர்வாகம் மேத்யூ செந்தில்குமார், உதவிப் பேராசிரியர் ஆ.குழந்தை, த.க.இ.பெ. திண்டுக்கல் மாவட்டச் செயலாளர் சு.பிரபாகரன் மற்றும் கல்லூரியின் காட்சி ஊடகவியல் துறை மாணவர்கள் பலர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்கள்.

நிகழ்விற்கு கல்லூரியின் காட்சி ஊடகவியல் துறைத் தலைவர் அருள்முனைவர் சூசை மாணிக்கம் பாராட்டுரை வழங்கினார். உதவிப் பேராசிரியர் செ.செல்வமீனா நன்றியுரை வழங்கினார்.

26.03.25 அன்று தூத்துக்குடி காமராஜ் கல்லூரி, ஏ.வி. அரங்கத்தில் வைத்து பராரி திரைப்படம் திரை யிடப்பட உள்ளது.

## தொழிற்சங்கத்தை ஏற்க மறுக்கும் ஊரி ஆட்டோ மோடிவ்ஸ் நிர்வாகத்திற்கு கண்டனம்

### ஆலை வாயில் முன் ஆர்ப்பாட்டம்



மறைமலை நகர் ஊரி ஆட்டோமேட்டிவ்ஸ் தொழிற்சாலையில், பல்வேறு கார் உற்பத்தி கம்பெனிகளுக்கான உதிரி பாகங்கள் தயாரிக்கும் பன்னாட்டு நிறுவனமாகும். இங்கு 500க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணி புரிகிறார்கள். அதில் 115 நிரந்தரத் தொழிலாளர்கள் உள்ளனர். அவர்கள் அனைவரும் ஏஐடியுசி அமைப்பில் இணைந்து செயல்பட்டு வருகிறார்கள். நிர்வாகம் தொழிற்சங்கத்தை ஏற்க மறுத்து வருகிறது. கடந்த 22 மாதங்களுக்கு மேலான பிறகும் சங்கத்துடன் ஊதிய உயர்வு ஒப்பந்தப் பேச்சுவார்த்தை நடத்த மறுத்துவிட்டது.

ஊதிய உயர்வு ஒப்பந்தம் சங்கத்துடன் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு கண்டு செயல்படுத்த வலியுறுத்தித் தொழிலாளர்கள் ஒன்றுதிரண்டு கம்பெனி வாயில் முன்பு 24.03.2025 அன்று மாலையில் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

ஆர்ப்பாட்டத்திற்குச் சங்கச் செயலாளர் எம்.இராமு தலைமை தாங்கினார். சங்கத் தலைவரும், மாவட்டப் பொதுச் செயலாளருமான எம்.ஜஹாங்கீர் கோரிக்கைகளை வலியுறுத்தியும் நிர்வாகத்தின் சட்ட விரோதச் செயலைக் கண்டித்தும் கண்டன உரையாற்றினார். இதில் விர்கோ பாலிமர் தொழிலாளர்களும் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர். சங்கச் செயலாளர் வி.குமரவேல் போராட்டத்தை வாழ்த்திப் பேசினார். துணைத் தலைவர் எம்.இம்மானுவேல் நன்றி கூறி நிறைவு செய்தார்.

# குழப்பத்தின் உச்சம் விஜயின் அரசியல்!

**விஜய் மக்கள் இயக்கத்தின் உட்கட்டமைப்பு பணிகள் பல்வேறு கட்டங்களாக நடந்து வந்த நிலையில், இப்போது அது ஒரு பதிவு செய்யப்பட்ட அரசியல் இயக்கமாக மாறியுள்ளது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை என்றும், யாருக்கும் ஆதரவுமில்லை என்றும் விஜய் அறிவித்தார். 2026ஆம் ஆண்டு தேர்தலுக்கு இன்னும் அதிக அவகாசம் இருக்கும் நிலையில், தமிழக வெற்றிக் கழகத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் பெரும் குழப்பமாக இருக்கிறது.**

## பொதுக்குழுவில் பொய் தகவல்கள்

தற்போது நடைபெற்ற தவெக பொதுக்குழு கூட்டத்தில், அக்கட்சியின் தேர்தல் பிரிவு மேலாண்மை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா, “வேங்கைவயலுக்கு விசிக தலைவர் திருமாவளவன் செல்லவில்லை” என்று பேசினார்.

ஆனால் கடந்த 2023 பிப்ரவரி 4ஆம் தேதி திருமாவளவன் வேங்கைவயல் சென்றார். அங்கு மக்களுடன் உரையாடி, மருத்துவ முகாமையும் தொடங்கி வைத்தார். அப்போது, ஆதவ் அர்ஜுனா விசிக உறுப்பினராக இல்லை. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் உள்ளிட்ட பல தலைவர்கள் அங்கே நேரில் சென்று போராட்டமே நடத்தினர். ஆனால் அவற்றை அறியாமல் இப்படிப் பேசி உள்ளார்.

கடந்த 2016 சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் தனியாக நின்று ஜெயித்துக்காட்டினார் ஜெயலலிதா என்றும் பேசினார். ஆனால் உண்மையில் ஆறு கட்சி கூட்டணியோடுதான் போட்டியிட்டார்.

நடிகர் விஜய் பேசிய உரையில், ‘Men may come Men may go’ என்ற கவிதையோடு உரையை முடித்த விஜய், இக்கவிதையை வில்லியம் பிளேக் (Willimam Blake) எழுதியதாகக் குறிப்பிட்டார்.

ஆனால் அந்தக் கவிதையை எழுதியது டென்னிசன் (Alfred Lord Tennyson) ஆவார். மேலும், தவெக பொதுக்குழு தீர்மானங்களில், வேளாண் சட்டங்கள் மூலம் ஒன்றிய அரசு, மாநில உரிமையைப் பறிக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தச் சட்டங்கள் விவசாயிகளின் வீரம் தெரிந்த போராட்டங்களால் திரும்பப் பெறப்பட்டு 4 வருடங்கள் கடந்து விட்டன என்பதையும் அறியாமல் உள்ளார் என்பது வெளிப்பட்டுள்ளதுடன் எழுதிக் கொடுப்பதை அப்படியே பேசியதும் இன்று வெளிப்பட்டுள்ளது.



## பட வெளியீடுகளும் சிக்கல்களும்

ஏ.எல்.விஜய்யின் இயக்கத்தில் 2013ஆம் ஆண்டில் விஜய், சத்யராஜ் நடித்து உருவான படம் ‘தலைவா’. இந்தப் படத்தின் டைட்டிலுக்கு கீழே, “வழிநடத்திச் செல்வதற்கான நேரம்“ என்பதைக் குறிக்கும் வகையில், Time to Lead என்ற வரிகள் எழுதப்பட்டிருந்தன. அப்போதைய ஆளும் கட்சி அண்ணா திமுக, ஏ.எல். விஜய்யின் இயக்கத்தை விரும்பவில்லை எனக் கூறப்பட்டது.

ஆகஸ்ட் 9ஆம் தேதி படம் வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இந்தப் படம் வெளியிடும் திரையரங்குகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் வந்ததாகக் கூறி தமிழ்நாட்டில் படத்தின் வெளியீடு ஒத்தி வைக்கப்பட்டது. இதற்குப் பிறகு முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்திக்க படக் குழுவினர் அனுமதி கேட்டிருந்த நிலையில், அதற்கான அனுமதி கிடைக்கவில்லை. நீண்ட காத்திருப்புக்குப் பிறகு ஒரு வழியாக, ஆகஸ்ட் 20ஆம் தேதியே படம் வெளியானது. விஜய்க்கு அரசியலுக்கு வரும் ஆசை இருப்பதாலேயே இத்தனை தடைகள் உருவானதாகவும், அவர் இத்தனை பிரச்னைகளைத் தாண்டி அரசியலுக்கு வருவாரா என்ற விவாதமும் அப்போது எழுந்தது. பின்பு அதிமுகவுக்கு ஆதரவும் அளித்தார் என்பது செய்தி.

கத்தி திரைப்படத்தை லைகா நிறுவனம் தயாரித்திருந்ததை முன்னிறுத்திப் பிரச்னைகள் கிளம்பின. இந்தப் படத்தை ரிலீஸ் செய்ய விடமாட்டோம் என்று சில அமைப்புகள் போர்க்கொடி எழுப்பின. இதையெல்லாம் தாண்டி கத்தி படம் வெளியானபோது, படத்தில் இடம்பெற்ற `காற்றை வைத்து ஊழல் செய்கின்ற நாடு இது’ என்ற வசனம் அரசியல் ரீதியான அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

புலி படம் வெளியிடுவதற்கு முந்தைய நாள் விஜய் வீட்டில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தினர். அதனால், பட வெளியீட்டில் தாமதம் ஏற்பட்டது. புலி படத்தின் முதல் காட்சி ரத்து செய்யப்பட்டது. பல கட்ட பேச்சுவார்த்தைக்குப் பின்னர் பகல் காட்சி திரையிடப்பட்டது. ஆனாலும், புலி திரைப்படம் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யாமல் தோல்வியடைந்தது.

இதற்குப் பிறகு, 2017இல் வெளியான மெர்சல் திரைப்படத்தில் ஜிஎஸ்டி, பண மதிப்பிழப்பு நடவடிக்கை ஆகியவற்றை விமர்சித்துக் காட்சிகள் இடம்பெற்றன. அதற்கு அப்போதைய பா.ஜ.க தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் எதிர்ப்புத் தெரிவித்தார். எச்.ராஜாவும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். படம் வெளியிடுவதற்குக் குறிக்கப்பட்ட தினத்திற்கு முதல் நாள் வரை சென்சார் சான்றிதழ் கிடைக்காமல் இருந்து, பிறகு ஒரு வழியாகப் படம் வெளியானது.

பாஜகவினர் தொடர்ந்து மெர்சல் படத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்க காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், இடதுசாரி தலைவர்கள் உட்பட பல அரசியல் தலைவர்களும் ஆதரவுக் குரல் எழுப்பினர். சில தினங்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்தப் பிரச்னை ஒருவழியாய் முடிவுக்கு வந்தது, எல்லோருக்கும் நன்றி தெரிவித்தார் விஜய்.

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கி 2018இல் வெளியான சர்கார் படத்தின் இசை வெளியீட்டு விழாவில் பேசிய விஜய், “இந்தப் படத்தில் நான் முதலமைச்சர் வேடத்தில் நடிக்கவில்லை. நிஜத்தில் நான் முதலமைச்சரானால் நடிக்க மாட்டேன். தலைவன் நல்லவனாக இருந்தால் எல்லாமே நல்லதாக மாறும். நெருக்கடியான நேரத்தில் ஒரு நல்ல தலைவன் வருவார். அவர் நல்ல சர்கார் அமைப்பார் என்று குறிப்பிட்டார்.

அவரது இந்தப் பேச்சுதான் விஜய் அரசியல் குறித்து நேரடியாகப் பேசிய முதல் பேச்சாக அமைந்தது. சர்கார் படத்தில் அரசு தரும் இலவசங்கள் குறித்து அவர் விமர்சித்திருந்ததும் பேசுபொருள் ஆனது.

இதற்கு அடுத்து வந்த பிகில் படத்தின் ஆடியோ வெளியீட்டு விழாவில் பேசிய விஜய், ‘‘எவனை எங்கே உட்கார வைக்க வேண்டுமோ, அவனை அங்கே கரெக்டா உட்கார வைத்தீர்கள் எனில், இந்த கோல்டு மெடல் தானாக வந்து சேரும்,’’ என்றார். அவருடைய இந்தப் பேச்சுக்கு அ.தி.மு.கவினரும் பா.ஜ.கவினரும் கடுமையான எதிர்ப்பு தெரிவித்தனர்.

## மக்கள் இயக்கமான ரசிகர் மன்றம்

தனது ரசிகர் மன்ற இயக்கத்தை 2009ஆம் ஆண்டு மக்கள் இயக்கமாக மாற்றினார் விஜய். காவலன் திரைப்பட பிரச்னைக்குப் பிறகான காலகட்டத்தில் விஜய் மக்கள் இயக்கத்தின் பணிகளில் தீவிரம் காட்டத் தொடங்கினார். அந்த வகையில், அடிக்கடி இயக்க நிர்வாகிகளைச் சந்தித்தார். அவர்தம் குடும்பத்தினரையும் வரவழைத்து அன்பைப் பகிர்ந்தார். இது அவர்களின் உற்சாகத்தை இன்னும் கூட்ட மக்கள் இயக்கத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கையும் அதிகரிக்கத் தொடங்கியது.

அதனால்தான், 2011ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் அதிமுகவிற்கு விஜய் ஆதரவு கொடுத்ததும், வெற்றிக்குப் பிறகு ‘இந்த வெற்றியில் ஒரு அணிலைப் போல் உதவினோம்‘ என்று சொன்ன சம்பவங்களும் நடந்தேறின. அப்படிப்பட்டவர் தான் இன்றைக்கு ஊழல் எதிர்ப்பில் உச்சாணிக்கொம்பில் இருப்பதாக தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

தனது மக்கள் இயக்கப் பணிகளை முன்னெடுத்த விஜய், அதன் உட்கட்டமைப்பையும் கிட்டத்தட்ட ஓர் அரசியல் கட்சிக்கு நிகராக மகளிரணி, மாணவரணி தொடங்கி கிளைக் கழகங்கள் வரை திட்டமிட்டு வடிவமைத்தார் எனத் தகவல்கள் கூறுகின்றன.

விஜய் மக்கள் இயக்கம் சார்பில், கடந்த ஆண்டு தமிழகத்தில் நடைபெற்ற 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தொகுதிவாரியாக சிறந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் மற்றும் ஊக்கப் பரிசு வழங்கும் நிகழ்வு சென்னையில் நடைபெற்றது. அவரது அரசியல் பிரவேசத்திற்கு வலுசேர்த்தது.

அப்போது மாணவர்களிடையே பேசிய விஜய், “நீங்கள்தான் நாளைய வாக்காளர்கள். அடுத்தடுத்து புதிய நல்ல நல்ல தலைவர்களை நீங்கள்தான் தேர்ந்தெடுக்க உள்ளீர்கள். பணம் வாங்கிவிட்டு வாக்களிப்பது என்பது, நமது கண்களை நாமே குத்திக் கொள்வது போன்றுதான். தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு மாணவரும் தங்களது பெற்றோரிடத்தில், இனி பணம் வாங்கிக்கொண்டு வாக்கு அளிக்காதீர்கள் எனக் கூறிப் பாருங்கள். நீங்கள் சொன்னால் அது நிச்சயமாக நடைபெறும்,” என்று பேசியிருந்தார்.

## பிற கட்சி பொறுப்புகளில் இருந்து விலக வலியுறுத்தல்

அதற்கு முன்பாக, அம்பேத்கர் பிறந்தநாளான ஏப்ரல் 14ஆம் தேதி அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த வேண்டும் என்று விஜய் தரப்பில் அறிவுறுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது. இதைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும், விஜய் மக்கள் மன்ற நிர்வாகிகள் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

விஜய் மக்கள் இயக்கத்தினர் பிற கட்சிகளில் பொறுப்புகளில் இருந்தால் ராஜினாமா செய்ய அறிவுறுத்தப்பட்டது.

இன்று கட்சியாகத் தொடங்கப்பட்டு இரண்டாம் ஆண்டில் காலடி எடுத்து வைத்தாயிற்று. ஆனால் அதன் கொள்கைகள் இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. பாசிசத்திற்கும் பாயாசத்திற்கும் வித்தியாசம் தெரியாமல் திரைப்பட பாணி வசனங்களிலும் பஞ்ச் டயலாக்குகளிலும் அரசியல் நடத்தி விடலாம் என்று நினைக்கின்றார் விஜய். புலியைப் பார்த்து பூனை சூடு போட்ட கதையாகக் காலம் சென்ற எம்ஜிஆர் செல்வி ஜெயலலிதா போன்றவர்களைப் பின்பற்றி அரசியலில் தானும் ஆட்சி அதிகாரத்திற்கு வந்து விட முடியும் என்று நினைக்கிறார். ஆனால், தமிழ்நாட்டில் மிகப்பெரும் நடிகர்கள் தனிக் கட்சியை துவக்கியும் அதற்கான வாய்ப்பு பெற முடியவில்லை என்பதே உண்மை.


கொள்கைவாதிகளுக்கும் குழப்பவாதிகளுக்கும் இடையிலான வேறுபாட்டை நன்கு உணர்ந்தவர்கள் தமிழ்நாட்டு மக்கள்!

**த/லெ**

---

# நூல் நயம்

## இன்னொரு திணை மயக்கம்




பல்வேறு பத்திரிகைகளில் பணியாற்றி, பல்வேறு தொடர்களை எழுதிய பத்திரிகையாளர் சுகதேவ், சமூகப் பிரச்சனை குறித்து எழுதிய கவிதை நூலே, இன்னொரு திணை மயக்கம் என்ற இந்நூல் எல்லாமும் கடந்து போகுமென்று எல்லாருக்கும் தெரியும்.

கடக்க முடியாத பெரும் பாரத்துடன் வாழ்ந்து கொண்டு, இதுவும் கடந்து போகும் என்றெல்லாம் சொல்லாதீர்கள் கடக்க முடியாதவையும், மறக்க முடியாதவையும் எத்தனையோ வாழ்க்கையில் வடுக்களாக உள்ளன. எல்லாம் கடந்து போகும் என்று யாதொரு தீங்கையும் யாருக்கும் இழைத்து விடாதீர்கள்! காலம் கல்வெட்டால் சிலவற்றை பதித்து செல்லும்.

பச்சிளம் குழந்தைகள், கழிவு நீர்ப் பாதைகளில், குப்பை தொட்டியில் எறியப்படுகிறார்கள், உயிரினங்களில் உயர்ந்தது மனித இனம் என்று இப்போது சொல்வீர்களா?. பெற்ற குழந்தையை அனாதைகளாக வீசி எறியும் மனிதர்களை நோக்கி, அவர்களது மனசாட்சியை உலுக்குகிற சாட்டையடி கேள்வியை எழுப்புகிறார்?. இது வெறும் தனி மனிதர்களுக்கான கேள்வி மட்டுமல்ல, சமுதாயத்திற்கான கேள்வி. பொறுப்புள்ளோர் சிந்திக்க கடவார்.

புன்னகைத்தால் அழகாகத்தான் இருக்கிறார்கள், எல்லோரும் யோசிக்கிறார்கள். ஏன் எல்லோரும் புன்னகைக்க யோசிக்கார்கள்?. புன்னகை என்பது பொன் நகையைக் காட்டிலும் முகத்திற்கு அழகு சேர்ப்பதல்லவா? அகத்தில் உண்மை இருந்தால், முகத்தில் ஒளி உண்டாகும். புன்னகைப்பதற்கு காசு பணம் தேவையில்லை. எனவே யாரை சந்தித்தாலும் ஒரு புன்னகையை சிந்தி வைப்போம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே மனித குலத்தின் மூலநோய் பசிப்பிணி என இனங்கண்டார் ஒரு தமிழ் பெரியார் என வள்ளல் பெருமான் புழையை வாயார பாடுகிறார். காய சண்டிகையின் அடங்காத பசிப்பிணியை, மணிமேகலையின் அட்சயப் பாத்திரத்தால் போக்கிய சமூகம் அல்லவா தமிழ் சமூகம்?. இப்படி தமிழ் சமூகத்தின் தொன்மை மரபு நீட்ச்சியை நினைவுபடுத்துகிறார். இப்படி பல சிறப்பான கவிதைகளின் தொகுப்பே இந்நூல், அனைவரும் வாங்கி படிக்கவும்.

**– இன்சுவை பாரதி**

| | |
|---|---|
| நூலாசிரியர் | : சுகதேவ் |
| பக்கம் | : 110 விலை : 140 |
| வெளியீடு | : கிரேட்டிவ் ஸ்டுடியோ, 571/ 2ஏ, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை 18 |

1 ஆம் பக்க தொடர்ச்சி

மயில்வாகனன், பி.வி.செந்தில், என்.ஜிவா ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

### கடலூர்

கடலூரில் மாவட்டக் குழு உறுப்பினர் ஆர்.கிருஷ்ணமூர்த்தி தலைமையில், கட்சி மாவட்டச் செயலாளர் பி.துரை, ஏஐடியுசி மாவட்ட தலைவர் வி.குளோப், கட்சி மாநகரச் செயலாளர் நாகராஜ், மாதர் சங்க மாவட்ட துணைச் செயலாளர் வளர்மதி, வாசுகி ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

விருத்தாசலத்தில் மாவட்டச் செயலாளர் வி.பி.முருகையன் தலைமையில், மாவட்ட ஏஐடியுசி செயலாளர் சுப்பிரமணியன், மாவட்ட தலைவர் சுப்பிரமணியன், சிபிஐ மங்களூர் ஒன்றியச் செயலாளர் நிதி உலகநாதன், விருத்தாச்சலம் வட்டச் செயலாளர் பாலமுருகன், நல்லூர் ஒன்றியச் செயலாளர் கடவுள் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

பண்ருட்டியில் மாவட்டக் குழு உறுப்பினர் கே.தணிகாசலம் தலைமையில், கட்சி மாவட்டப் பொருளாளர் பாஸ்கர், மாவட்ட நிர்வாக உறுப்பினர்கள் சிவக்குமார், சக்திவேல், கட்சி ஒன்றியச் செயலாளர்கள் ஞானசேகரன், மோகன், வெங்கடேசன் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

### புதுக்கோட்டை

புதுக்கோட்டையில் ஏ.ரெங்கராஜ் தலைமையில், மாவட்ட தலைவர் ஏனாதி ஏ.எல்.இராசு தொடக்கவுரையாற்றினார். கட்சியின் மாவட்டச் செயலாளர் த.செங்கோடன் நிறைவுறையாற்றினார்.

### திருப்பூர்

உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் அலுவலகம் முன்பு, விதொச தாலுகா செயலாளர் எம்.ரமேஷ் தலைமையில், வி. சௌந்தரராஜன், சி.சுப்பிரமணியன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

அவிநாசி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு, ஒன்றியச் செயலாளர் பி.கே. ராமச்சந்திரன் தலைமையில், கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர் ஆர்.ஜாஷஹான், ஜென்ரல் சங்க ஏஐடியுசி மாவட்டப் பொருளாளர் என்.செல்வராஜ், வழக்கறிஞர் வி.கே.சுப்பிரமணியம், கட்சியின் ஒன்றியச் செயலாளர் இரா.முத்துசாமி, கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் ஏ.ஜி.சண்முகம் ஆகியோர் பேசினர்.

காங்கயம் பாலசமுத்திரம் புதூர் ஊராட்சி மன்ற அலுவலகம் முன்பு, ஆர்.செந்தில் குமார் தலைமையில், மாதர் சம்மேளனத்தின் புறநகர் மாவட்டச் செயலாளர் பி.நதியா, விவசாயத் தொழிலாளர் சங்க ஒன்றிய நிர்வாகிகள் பி.சக்திவேல், கே.வி.பழனிசாமி, ஜோதி, சாந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### திருச்சி

துறையூரில் ஒன்றிய தலைவர் எம்.கணேசன் தலைமையில், மாவட்டச் செயலாளர் பி.கணேசன், கட்சியின் ஒன்றியச் செயலாளர் எஸ்.சேகர், ஒன்றிய துணைச் செயலாளர் சி.செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு கோரிக்கையை விளக்கி உரையாற்றினார்கள்.


















Posted at Egmore RMS Patrika Channel, Chennai - 600 008.
16 ஏப்ரல் 06 ஏப்ரல் 12 2025 ஜனசக்தி
JANASAKTHI Tamil Weekly Cell: 9444331138
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026
WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026
Posted on Every Friday & Saturday
Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57



வ.மணிமாறன்

# அடக்குமுறைகளையும் மீறி துருக்கியில் எழுச்சி

**துருக்கி நாடு தொடர் போராட்டங்களால் தகித்துக் கொண்டிருக்கிறது. சாதாரண ஆர்ப்பாட்டம், பல லட்சம் பேர் பங்கேற்கும் பெரும் எழுச்சியாக பரிணமித்ததால், அதிபர் ரெசெப் தையிப் எர்டோகன் அரசு அதிர்ந்து போயுள்ளது.**



துருக்கியின் பெரிய நகரமான இஸ்தான்புல் நகரின் மேயரும் கெமலிஸ்ட் குடியரசு மக்கள் கட்சியின் அதிபர் வேட்பாளருமான எக்ரெம் இமாமோக்லு மார்ச் 23 அன்று கைது செய்யப்பட்டார். இதனால் பெரிய அளவில் போராட்டங்கள் வெடித்தன. பெரும் எண்ணிக்கையிலான துருக்கி மக்கள் தெருக்களில் இறங்கிப் போராட்டங்களில் ஈடுபட்டனர். இஸ்தான்புல் நகரத்தில் மட்டுமல்ல, நாடு முழுவதும், அனைத்து நகரங்களிலும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. காவல்துறையின் அடக்குமுறைகளையும், அரசியலமைப்புச் சட்டத்திற்குப் புறம்பான தடைகளையும் மீறி போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

மார்ச் 30 ஆம் தேதி வரை 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சிறைக் கொட்டடிகளில் அடைக்கப்பட்டுள்ளனர். 250 க்கும் மேற்பட்டோர் சட்டத்துக்குப் புறம்பாக சிறை வைக்கப்பட்டுள்ளனர். மாணவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த இஸ்தான்புல் பல்கலைக்கழகப் பேராசிரியர் லெவென்ட் டோலெக் கைது செய்யப்பட்டார். துருக்கி கம்யூனிஸ்ட் கட்சிகளும், தொழிற்சங்கங்களும் இந்தப் போராட்டங்களில் தீவிரமாகப் பங்கேற்றுள்ளன. சட்டத்துக்குப் புறம்பாக சிறை வைக்கப்பட்டவர்களில் பலர் இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள்.

காவல்துறையினர் மிளகாய்ப் பொடிகளை தூவியும் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசியும் தண்ணீர் பீரங்கிகளைக் கொண்டு பீய்ச்சி அடித்தும் போராட்டக்காரர்களை விரட்டியடித்து வருகின்றனர். அவற்றையும் மீறி போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. தொலைக்காட்சிகள் போராட்ட நிகழ்ச்சிகளை ஒளிபரப்பு செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. போராட்டக் காட்சிகளைப் பதிவு செய்த பத்திரிகையாளர்கள் பல இடங்களில் கைது செய்யப்பட்டனர்.

போராட்டம் மேலும் தீவிரம் அடையாமல் தடுப்பதற்காக, வெளிப்பகுதியில் இருந்து இஸ்தான்புல் நகருக்குள் யாரும் வருவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. சமூக ஊடகங்களில் போராட்டக்காரர்கள் எதிர்ப்புகளைப் பதிவு செய்து வருவதால், அரசு அவற்றை தீவிரமாக கண்காணித்து வருகின்றது. நூற்றுக்கணக்கான எக்ஸ் (டுவிட்டர்) கணக்குகளை முடக்குமாறு துருக்கி அரசு கோரிக்கை விடுத்தது. கருத்து சுதந்திரம்தான் முக்கியம் என்று கூறிவரும் எலான் மஸ்க்கின் ‘எக்ஸ்’ நிறுவனம், துருக்கி அரசின் கோரிக்கையை ஏற்று அந்த டுவிட்டர் கணக்குகளை முடக்கி வருகிறது.

மத்திய கிழக்கு நாடுகளை மீண்டும் முழுமையான ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர அமெரிக்க வல்லரசு விரும்புகிறது. பாலஸ்தீனத்தில் இருந்து லெபனான் வரை, சிரியாவில் இருந்து ஏமன் வரை, அமெரிக்க இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு போர், ஒரு “புதிய மத்திய கிழக்கை” உருவாக்குவதற்கானது. அமெரிக்காவின் இந்தத் திட்டங்களுக்கு முக்கிய கூட்டாளியாக துருக்கி இருந்து வருகிறது. இதனால்தான் துருக்கி அதிபர் எர்டோகனுடன் நெருக்கமாகப் பணியாற்ற விரும்புவதாக அதிபர் டொனால்ட் டிரம்ப் கூறுகிறார். “எர்டோகன் ஒரு நல்ல தலைவர்” என சான்றளித்து, “எனது நண்பர்” என்றும் புளகாங்கிதத்துடன் அதிபர் டிரம்ப் கூறுகிறார்.

துருக்கியில் மக்கள் போராட்டங்களும் கைதுகளும் நடந்துகொண்டிருக்கும் போது, வாஷிங்டனுக்குச் சென்ற துருக்கி வெளியுறவு அமைச்சர் ஹக்கன் ஃபிடானுக்கு நல்ல வரவேற்பு தரப்பட்டது.

அமெரிக்காவில் டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், நிதி மூலதனத்தின் நலன்களுக்காக சர்வாதிகாரத்தை நிறுவ அவர் மேற்கொண்டுவரும் முயற்சிகள், உலகம் முழுவதும் பாசிசப் போக்குகளை முடுக்கி விட்டுள்ளது.

துருக்கியில் அரசின் அடக்குமுறைகளையும் மீறி மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருவது, மற்ற நாடுகளுக்கு விடப்படும் முன்னெச்சரிக்கையாகும். வெளிப்படையான சமூக சமத்துவமின்மை மீதான கோபங்கள், ஜனநாயக உரிமைகளைப் பறிப்பதற்கு எதிர்ப்பு, வல்லரசுகளின் முடிவற்ற போர்.. போன்ற புறநிலைக் காரணங்களால், மக்கள் போராட்டங்களில் அணிதிரளுகின்றனர். இந்த எழுச்சிகள்தான் துருக்கியில் மட்டுமல்ல உலக நாடுகளிலும் பிற்போக்கு ஆளும் அரசுகளுக்கு முடிவு கட்டும்.

# சர்வதேச உழைக்கும் பெண்கள் தின கருத்தரங்கம்





தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பில் 30.03.2025 அன்று திருச்சி மன்னார்புறம் அருகில், இலுப்பூர் சாலை கல்லுகுழி என்னும் இடத்தில் திறந்தவெளியில் சர்வதேச உழைக்கும் பெண்கள் தின கருத்தரங்கம் நடைபெற்றது.

இந்நிகழ்விற்குச் சங்கத்தின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் சி.நிர்மலா என்ற விமலா தலைமை ஏற்றார். வரவேற்புக் குழு தலைவர் தா.கனகவல்லி வரவேற்புரையாற்றினார். திருச்சி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குனர் செள.கங்காதரணி துவக்க உரையாற்றினார். மனித வள மேம்பாட்டு துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் பேருரையாற்றினார். ஏஐடியுசி தேசியச் செயலாளர் வகிதா நிஜாம் நிறைவுறையாற்றினார்.

சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.இராமாநிதி, ஏஐடியுசி மாநிலப் பொதுச் செயலாளர் எம்.ராதாகிருஷ்ணன், திருச்சி மாவட்டப் பொதுச் செயலாளர் க.சுரேஷ், மாவட்ட தலைவர் வி.நடராஜன், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்க முன்னாள் மாவட்டப் பொருளாளர் வி.ரேவதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலப் பொதுச் செயலாளர் பெ.கிருஷ்ணசாமி பேசினார். முசிறி வட்டார ஒருங்கிணைப்பாளர் நிர்மலா நன்றி கூறினார். பல்லாயிரக்கணக்கான பெண் ஊழியர்கள் பங்கேற்றனர்.

◆இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் ஈரோடு தெற்கு மாவட்டக் குழு சார்பில், சர்வதேச உழைக்கும் மகளிர் தினக் கருத்தரங்கம் 30.3.2025 அன்று மாவட்டச் செயலாளர் எம்.ராணி தலைமையில், ஈரோடு கட்சி அலுவலகத்தில் “பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளைக் கண்டித்து” கருத்தரங்கம் நடைபெற்றது.

இதில் மாதர் சம்மேளனத்தின் மாநில துணைச் செயலாளர் பி.நதியா, கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.டி.பிரபாகரன், மாதர் சம்மேளனத்தின் மாநிலக் குழு உறுப்பினர் க.மல்லிகா, இளைஞர் பெருமன்றத்தின் மாநிலக் குழு உறுப்பினர் வழக்கறிஞர். த.ஏ.அர்ச்சனா ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை ஆற்றினர்.

இதில் மாதர் சம்மேளன நிர்வாகிகளான எம்.சண்முகப்பிரியா, எம்.ஆர்.ராணி, எஸ்.வனிதா, லட்சுமி, சுதா, ராசாத்தி, மகேஸ்வரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.